ஆகஸ்டு
வெளியீடு
MAV PICTURES SALEM
ராஜம் பிக்சர்ஸ் அளிக்கும் எம்.ஏ.வி பிக்சர்ஸ்
பாஞ்சாலி
தயாரிப்பு
M.A. தியாகராஜன்
கதை வசனம்
நாகஷண்முகம்
சங்கீதம்
K.V. மஹாதேவன்
டைரக்ஷன்
V. ஸ்ரீநிவாசன்
BHARATH STUDIO
ஸ்டூடியோ.... ரத்னா (சேலம்)

மகிழ்வுடைய மணமகள்

''இன்று இனிதே கருதிச் செயல்பட்டால் நன்றே செல்லும் நாளைப்பொழுது'' என்ற முதுமொழி அவள் விஷயத்தில் மெத்தப் பொருத்த மாக அமைந்தது. வருமுன் காக்கும் அவளது பெற்றோர்கள், நண்பரான இன்ஷ்யூரன்சு ஏஜெண்ட் ஒருவர் தந்த நல்லறிவுரையின்படி, அவளுடைய வருங்காலத்தை வளமுள்ளதாக்க, குழந்தைப் பருவத்திலேயிருந்தே திட்டமிட்டனர்.

மணக்கோலம் பூணும் இந்த நாளில் காணும் மகிழ்விற்குக் காரணம் அவர்கள் அன்று தேர்ந்து எடுத்த 'திருமண என்டௌமென்ட் பாலிசியே!' கடமையை நிறைவேற்றிய களிப்பும், மனநிறைவும் பெற்றோர்களுக்கு! பூரிப்பும், நம்பிக்கையும், பொங்கும் ஆசைக் கனவுகளும் கொண்ட புது உலகம் ஒன்றிலே புகப்போகிறோம் என்ற உணர்வு மணமகளுக்கு!

உங்கள் மகளுக்கு உகந்த இதே போன்ற திட்டம் ஒன்றைப் பற்றி நீங்களும் ஏன் எண்ணமிடக்கூடாது? உங்களுக்குத் தகுந்த நன்மை பல மிகுந்த இன்ஷ்யூரன்சுத் திட்டம் வகுத்திட உதவ ஒரு ஆயுள் இன்ஷ்யூரன்சு ஏஜெண்ட் நண்பரை வினவுங்கள்.

ஆயுள் இன்ஷ்யூரன்சு

—நீங்கள் இன்ஷ்யூர் செய்யும் நன்னாளே நீங்கள் பாதுகாப்புப் பெறும் பொன்னாளாம்.

EP/LIC/SZ/3

காவேரி

பொருளடக்கம்

விகாரி-ஸ்ரீ மலர் 18	ஆகஸ்டு — 1959	ஆடி இதழ் 12

நல்ல சேதி	...	...	4
கதிர்காமம்	... லக்ஷ்மி ஸ்ரீநிவாசன்	...	5
வா, அங்கே செல்வோம்!	... பேகன்	...	16
கறுப்பு வைர வேட்டை – 4	... கே. ஸ்ரீநிவாஸன்	...	17
புத்தக விமர்சனம்	...	...	23
சங்கமம்	... லல்லு	...	25
விஞ்ஞானத் துணுக்குகள்	... நா. கி. நாகராசன்	...	33
சாபக்கேடு	... வெங்கடலட்சுமி	...	37
டில்லித் தபால்	... கே. ஸ்ரீநிவாஸன்	...	44
மோகினிப்பெண்	... திருவரங்கம் அமிழ்தன்	...	49
வஜ்ர வீணை (தொடர் கதை)	... கே. சுந்தராம்பாள்	...	57
திரை உலகம்	... ஜமதக்னி	...	70
தாலிக் கயிறு	... இனியன்	...	74
சிறுவர் பகுதி	... எஸ். விசாலாக்ஷி	...	78
தொழில் துணுக்குகள்	... விசால்தேவ்	...	83
அழகே! உனக்கு என் நன்றி	... அல்லி	...	87
அன்பு!	... கோவைவாணன்	...	94
பெண்களுக்கு மட்டும்	... எஸ். விஜயா	...	95

அட்டைப்படம் :

பணிமொழி நினைதொறும் ஆவிவேமால்
பகல்நிரை மேய்க்கிய போயகண்ணு
பிணியவிழ் மல்லிகை வாடைதூவப்
பெருமத மாலையும் வந்தின்றாலோ!
மணிமிகு மார்வினின் முல்லைப்போது
என்வனமுலை கமழ்வித்து உன்வாயமுதம்தந்து
அணிமிகு தாமரைக்கையை அந்தோ!
அடிச்சியோம் தலைமிசை நீஅணியாய்.

[திருவாய்மொழி 10-3-5]

குறிப்பு: காவேரியில் வெளியாகும் கட்டுரைகளில் உள்ள பெயர்கள் கற்பனைப் பெயர்கள். அவைகளில் அடங்கிய அபிப்பிராயங்களும், அவற்றை எழுதினவர்களுடையனவே; அவைகளுக்குப் பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்ல.

உ8563

காவேரி

விகாரி-ஞு மலர் 18 | "சென்றிடுவீ ரெட்டுத் திக்கும் — கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்" | ஆடி இதழ் 12

நல்ல சேதி

இவ்விதழுடன் தம் பதினெட்டாம் பருவத்தைக் கடந்து, வரும் ஆவணி இதழில் பத்தொன்பதில் காலடி வைக்கிறாள் காவேரி. தமிழ்நாட்டின் பத்திரிகை வளர்ச்சியில் இது ஒரு சாதனை என்றே கருதுதல் வேண்டும். அதுவும் சென்னை நகரில் பூக்காது, சோழவளநாட்டில் ஊன்றி பூத்துப் புகழ் எய்துவது என்பது சிரமசாத்யமான காரியம். தம் கலைமணத்தை தாயகத்துக்கே மட்டுமின்றி தென்னாடு, வடநாடு, சிலோன், மலேயா எங்கும் பரப்பி தமிழ் அன்பர்களை மகிழ்விக்கச் செய்து வருகிறாள். கோவில்பட்டி ஓவிய அன்பர் ஸ்ரீ கொண்டையராஜுவின் அற்புத அட்டைப் படங்கள் மக்களைக் கவர்ந்து வருகின்றன. மாதந்தோறும் நூற்றுக் கணக்கான புதிய வாசகர்கள் தோன்றி காவேரியை ஆதரித்து வருவதனால் அவள் துள்ளிக் குதித்து நாடெங்கும் ஊடுருவிப் பாய்ந்து வருகிறாள்.

பத்தொன்பதாம் வருடத்திய முதல் இதழான செப்டம்பர் இதழில் **ஸ்ரீ தி. சேஷாத்திரி, எம். ஏ.** தீட்டிய அற்புத தொடர் கதை ஒன்று ஆரம்பமாகிறது. மிகவும் ரசமான கதை. இதனை வாசகர்கள் மிகவும் போற்றிப் படிப்பார்கள் என்று நம்புகிறோம்.

புதிய வருடத்தில் மற்றும் பல அம்சங்கள் இடம்பெறலாம்.

எங்களுக்கு ஆக்கம் தந்து தொடர்ந்து எழுதிவரும் எழுத்தாளர்களுக்கும், வாசகர்களுக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

காவேரி வெள்ளத்தை அள்ளிப்பருக யாவருக்கும் உரிமையுண்டு. பிரபல எழுத்தாளர்களுக்குத்தான் அதனில் எழுத வாய்ப்பு என்பதில்லை. கருத்தும், கற்பனையும், பண்பும், பாண்டித்யமும் உள்ள யாவரும் அதற்கு விஷயதானமனுப்பலாம்.

எழுத்தாளர்களில் பெரும்பாலோர் எளிய வாழ்க்கை நடத்துபவர்கள். தற்கால விலைவாசிகள் அவர்களை பெரிதும் பாதிக்கின்றன. பத்திரிகை தயாரிப்பில் எல்லா விலைகளும் கூடிவிட்டன. எனினும் அதன் விற்பனை விலையையோ வருவாயையோ கூட்ட முடியவில்லை. அதனால் இதுவரை எழுத்தாளர்களுக்கு அளித்துவரும் ஊதியத்தில் உயர்வு அளிக்க இயலவில்லை. மற்ற செலவுகளைக் குறைத்துக் கொண்டாவது, இவர்களுக்கு அதிக ஊதியம் தரவேண்டுமென முடிவு செய்து விட்டோம்.

எழுத்தாளர் உலகில் பிரகாசிக்கும் எல்லோரும் இதனை வரவேற்பதுடன் தமது சிறந்த கற்பனைகளை நமக்கு அளித்து காவேரியை மேலும் மேலும் பெருக்கெடுத்தோடும்படி செய்ய வேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.



கதிர்காமம் பெரிய கோயிலின் திருவாசல்.

கதிர்காமம்

லக்ஷ்மி ஸ்ரீநிவாஸன்

அழகே வடிவான முருகன் இருந்து அருள் புரியும் ஆறு இடங்கள் ஆறுபடை வீடுகள் எனப்படும். முருகன் தங்கிய ஆறுபடை வீடுகள் அனைத்தும் மலைகள். முருக வழிபாட்டிற்குரிய திருப்பதிகளுள் மூர்த்தி, தீர்த்தம், தலம் என மூன்றினாலும் புகழ் பெற்றுத் திகழ்வது இலங்கையிலுள்ள கதிர்காமமுமாகும்.

'கதிர்காம' எனும் சொல் 'கார்த்திகேய கிராம' என்பதன் மரூஉவெனவும், கஜரகம் என்பதன் சிதைவெனவும் கொள்ளுவர் சிலர். இன்னும் சிலர் இதனைத் தமிழ்ச் சொல்லெனவே கொண்டு கதிர்காமமென்பது கடவுள் தன்மையுடைய ஒளியும் அன்பும் கலந்து விளங்கும் இடம் எனவும், ஆறு கதிர்ப் பொறிகளாற் பிறந்த ஆறுமுகன், வள்ளிநாச்சியார் மேல் காதல் கொண்டு களவு மணம் புரிந்த இடமாதலால் கதிர்காமம் என ஆயிற்று என்பர். கதிர்காமமென்பது சிங்களச் சொல்லின் மரூஉவாய்த் தமிழ் மொழியின்கண் திசைச் சொல்லாய்ப் பிற்காலத்து வழங்கிய வழக்கென்பதே அடியேனுடைய முடிபு.

புத்த மதத்தினருக்கும் இந்து மதத்தினருக்கும் இது ஒரு புனிதமான க்ஷேத்திரம். புத்த பகவான் 'போதி ஞானம்' அடைந்த பிறகு இலங்கைக்கு வந்து பதினாறு இடங்களில் நிஷ்டையில் இருந்தாரென்றும், அவ்விதம் நிஷ்டையில் இருந்த இடங்களில் இதுவும் ஒன்று எனவும் சொல்லப்படும்.

சரித்திரப் பாதையில் :—

முருகபிரான் வள்ளியைக் கலியாணம் செய்தது தென் இந்தியாவில்—அதுவும் வள்ளியங்கிரியில் என்பது கந்தபுராணம். வள்ளியை இலங்கையில் கதிர்காம க்ஷேத்திரத்தில் கலியாணம் செய்ததாக ஐதீகமுமுண்டு. வள்ளியம்மையார் தினைப்புனம் காத்த இடம் இது, கந்தன் வேங்கை மரமாக மாறிய இடம் இது எனப் பலவிதமாகக் கூறப்படும் இடங்களுமுண்டு



கதிர்காமத்திலுள்ள மாணிக்க கங்கையில் ஸ்நானம் செய்து கோயிலுக்குச் செல்லும் யாத்திரீகர்களின் கூட்டம்.

இங்கே. தக்ஷிண கைலாய மான்மியம் என்னும் நூலில் இதன் வரலாற்றைப் பரக்கக் காணலாம்.

முருகவேள் சூரபன்மனைச் சங்கரிக்கும் நோக்கோடு எழுந்தருளியபொழுது, கதிர் காமத்தை அடைந்து மாணிக்க கங்கை யருகில் பாசறை வகுத்து வீற்றிருந்தா ரென்றும், அவ்விடம் ஏமகூடம் எனப்பட்ட தென்றும், பின்னர் சூரபன்மனை வென்று வாகை சூடி மீண்டபொழுது கதிர்காம கிரியில் நவ கங்கா தீர்த்தம் உண்டாக்கிச் சிந்தாமணி ஆலயத்தில் தேவர்கள் துதிக்க வீற்றிருந்தார் என்றும் புராணம் முறையிடு கின்றது.

இலங்கைத்தீவில் ஆட்சிபுரிந்த பௌத்த அரசர்கள் இந்துசமயத் தெய்வங்களை வழிபட்டு வந்தார்கள் என்பது மகாவம்சம் எனும் சிங்களச் சரித்திர நூலால் நன்கு பெறப்படும். பத்தினி வழிபாட்டை இலங் கைத்தீவில் பரப்பியவன் கடல்சூழ் இலங்கை கயவாகு வேந்தனாகும். துட்ட கெமுனு என்னும் சிங்களவரசன் எல்லாள னெனும் புகழ்பெற்ற தமிழரசனை வெல்லு தற்குரிய ஆற்றலைத் தனக்களிக்குமாறும் அப்படி அளிப்பிற் கதிரையாண்டவர் ஆல யத்தைக் கட்டுவிப்பதாகவும் விரதம் பூண்டு அக்கடவுள் அருள்பெற்றே தன் பகைவனை வென்றான் எனவும், அங்ஙனமே ஆலயத் தைக் கட்டுவித்தான் எனவும் சிங்கள நூல்கள் செப்பும்.

இங்ஙனமே பல சிங்கள அரசர்கள் தமிழ்த் தெய்வங்களை வழிபட்டு வந்திருக்கி றார்கள். அதனால் அவர்களும் இந்துக்களே எனக்கொள்ளுவதில் இழுக்கொன்றுமில்லை, தவிரவும் சில அரசர்கள் தமிழ்ப் பெண் களையே மண முடித்தமையாலும், இவர்கள் வழித் தோன்றல்களிடத்தும் தமிழ் இரத் தம் உண்டெனக்கொள்ளுவது பிழையன்று. இப்பொழுது கதிர்காமத்தில் காணப்படும் ஆலயம் இரண்டாம் இராஜ சிங்கனால் கட்டப்பட்டதென்பதே சரித்திர ஆராய்ச்சி வல்லுநர் துணிபு. இவனது காலம் 16-வது நூற்றாண்டின் பிற்காலம்—அதாவது கி. பி. 1581 என்பர். இம்மன்னன் புத்த மதத்தி லிருந்து சிவனடியாராக மாறியதாகவும், கதிர்காமப் பெருமானுக்குத் திருப்பணிகள் செய்ய ஆரம்பித்ததாகவும் கூறப்படுகிறது. இவனது காலத்தில்தான் தெய்வயானை யம்மன் சந்நிதி கட்டப்பட்டதாகச் சொல்லுவர்.

கதிர்காமக்கோயில் வரலாறும் கலியாணநாதர் மகிமையும்:—

தற்காலம் உள்ள பெரிய கோயிலே 'ஜோதி மண்டபம்' எனப்படும். இது முருகக் கடவுளின் சந்நிதியாகும். அதற்கு அடுத்தாற் போல் பிள்ளையார் சந்நிதியும் மறு பக்கத்தில் தெய்வயானையின் சந்நிதி யும், பெரிய சந்நிதிக் கெதிரில் வள்ளியம் மன் சந்நிதியும் உள்ளன. இக்கோயில்கள் எல்லாம் நவீன முறையில் கட்டப்பட்டுள் ளது கண்கூடு.

பெரிய சந்நிதி விஸ்தாரமான கோவில் அல்ல. சுமார் 50 அடி நீளம், 20 அடி அகலம், 15 அடி உயரமும் உள்ளது. வெளிப்பாகம் பக்தர்கள் நின்று ஆரா திக்கும் மண்டபம். அதற்கு அடுத்த இரண்டாவது அறையில் ஜன்னல் முதலி யன இல்லை. கோவில் பூசாரிகளான கப்பு ராளைமார்கள் இதுவரை போய் வருவர். வெளி மண்டபத்திலிருந்து இரண்டாவது அறை வாயிற்படியில் சுப்பிரமணியக் கடவுளின் திருஉருவம் எழுதப்பெற்ற திரை யொன்றுள்ளது. இவ்விதத் திரைச்சீலைகள் பல முருக பக்தர்களால் நேர்த்திக்கடனாகக் கொடுக்கப்பட்டுள்ளன. மூன்றாவது பாகந் தான் மூலபீடம், அங்கு ஒருவரும் போக அனுமதிப்பதில்லை. அங்குதான் இயந்திர ஸ்தாபனம் உள்ளது என்பர்.

இலங்கை, போர்த்துக்கேசியர் ஆளுகைக் குட்பட்ட பொழுது சைவசமயக் கோயில்கள் பல இருந்த இடமும் தெரியாது தகர்க்கப்பட்டனவாம். சில கோயில்கள் போர்த்துக்கேசியர் ஆலயங்களாக மாறினவாம். இக் கதிரை மலையிலுள்ள கோயிலில் தங்கமும் வைரமும் ஏராளமாக உண்டு எனக் கருதிய போர்த்துக்கேசியர் அதனைச் சூறையாடும் நோக்கோடு சென்று வழிதெரியாது பலநாள் அலைந்து—கோயிலுக் கருகிலும் செல்ல முடியாது வெட்கித் திரும்பினர் என இலங்கைச் சரித்திரம் எழுதின போர்த்துக்கேசியன் ஒருவன் குறிப்பிட்டுள்ளான். இதிலிருந்து கதிர்காமப் பெருமானின் பெருமை ஒருவாறு விளங்கும்.

கி. பி. 1600-ம் ஆண்டளவில் இந்தியாவிலிருந்து வந்த அடியார்கள் பலரைக் கண்டியரசனுக்கு உதவி புரிய வந்த படையென ஐயுற்ற போர்த்துக்கேசிய அரசினர், யாழ்பாணத்திலிருந்த அதிகாரியாகிய எதிர் மன்ன கிங்சபர ராஜசேகரன் மூலம் முன்னூறு பேரைக் கதிர்காமத்திற்குச் செல்ல விடாது தடுத்துத் திருப்பியனுப்பினர். அந்நாட்களில் மிகச் சிலரே யாத்திரை செய்யத் துணிந்தனர். அங்ஙனம் துணிந்தவர்களுள் காஷ்மீரத்திலிருந்து வந்த கலியாணகிரி அல்லது கலியாணநாதர் எனும் அந்தணச் சந்நியாசியுமொருவர். அவர் 'தசநாமிகள்' என்று சொல்லப்படும் வகுப்பில் 'கிரி' என்னும் உட்பிரிவைச் சேர்ந்தவர். இவரை சிருங்கேரி சங்கராசாரியார் மடத்தைச் சேர்ந்தவர் என்று கூறுவாருமுளர்.

இவர் இந்தியாவிலிருந்து வந்து வெகு காலமாகக் கதிரை மலையில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் கந்தப்பெருமானை அம்மலையினின்றும் பெயர்த்துத் தமதூருக்குக் கூட்டிச் சென்றுவிடவேண்டுமென்றும் பக்தி வைராக்கியமுடைவராய் விரைந்து சென்றார். சென்று கந்தப்பெருமானைக் கண்ணாரக் காணும் கருத்தோடு பன்னீராண்டுகள் கடுந்தவம் செய்த பொழுது ஒரு வேட்டுவச் சிறுவனும் சிறுமியும் இந்தக் கலியாணநாதருக்குத் தொண்டாற்றி வந்தார்கள். கலியாணநாதர் கடுந்தவமியற்றியும் முருகப் பெருமானைக் காணமுடியாமல் பொன் தகடொன்றில் எந்திரம் கீறி உருவேற்றிப் பெட்டியில் அடைத்துப் பெருமானை இந்தியாவுக்கு எடுத்துச்செல்ல ஆயத்தம் செய்தார்.



கும்பகோணத்தை யடுத்துள்ள 'பட்டீச்வரம்' என்னும் தலகோயிலிலே இடம் பெற்றிருக்கும் ஆறுமுகப் பெருமான். இரு மருங்கும் நாச்சிமார் உளர்.

அவர் சிறிது வெளியே சென்ற சமயம் பார்த்து, அவருக்கு வேலை செய்துகொண்டிருந்த வேட்டுவச் சிறுமி அப்பெட்டியைத் தூக்கிக்கொண்டு கோயிலுக்கு நேராக ஓடி உள்ளே நுழைந்து மறைந்தனள். கலியாணநாதர் அச்சிறுமியைத் தொடர்ந்து கோயிலுக்குச் சென்றதும் முருகப்பெருமானும் வள்ளியம்மையும் அவருக்குக் காட்சியளித்தனர். இக்காட்சியைக் கண்ட அடியார் உரோமம் சிலிர்ப்ப, உரை தடுமாற அடியற்ற மரம்போல் எட்டுறுப்பும் தோய நிலத்தில் வீழ்ந்து வணங்கினர்.

இங்ஙனம் வணங்கிய மெய் அடியாரை ஆறுமுகக்கடவுள் நோக்கி "நின் குறை யாது?" என வினவ, அடியாரும் தமதுள்ளக்கிடக்கையினை வெளியிட்டார், இதனைக் கேள்வியுற்ற வள்ளிநாச்சியார் தம்

உற்சவத்தில் பக்தர்கள் இது போன்று வேலுடனும் காவடியுடனும் ஆடிப்பாடிச் செல்லுவது சகஜம்.

மணாளனைப் பிரித்துக் கூட்டிச் செல்லல் தகுதியன்று எனக்கூறி மாங்கல்யப் பிச்சை அளிக்குமாறு பரிவுடன் கேட்கவும், அடியாரும் அதற்கிசைந்து கதிர்காமத்தில் தானே தம் வாணாளை இறைவன் பணியிற் கழிக்கத் தீர்மானித்தார். "தொண்டர்தம் பெருமையை கூறுதல் எளிதோ!"

தற்போதுள்ள தெய்வயானை யம்மன் கோயிலையும், வள்ளியம்மன் கோவிலையும் கட்டுவித்தது இவர்தான். இவருக்கு உதவியாக விருந்தது முதலாவது ராஜ சிங்கனும், இரண்டாவது ராஜ சிங்கனுமாவார்கள். மூலஸ்தானத்தில் சுப்பிரமணியக் கடவுளின் இயந்திரத்தை ஸ்தாபனம் செய்ததும் இவர்தான் என்பது வெளிப்படை. இந்த இயந்திரம் வைக்கப் பெற்றுள்ள பெட்டிதான் இப்பொழுது விழாக் காலங்களில் யானை மீது ஏற்றப் பெற்று ஊர்வலம் வருவது. தெய்வயானையம்மன் சந்நிதியில் உள்ள கல்யாண மண்டபமும் ஓம குண்டமும் இவரால் அமைக்கப்பட்டதென்பர். இவருடைய பெயராலே இன்று வரை நிலவி வருவது கண்கூடு. பிறகு இவர் பலகாலம் ஜீவித்திருந்து கதிர்காமத்திலேயே சமாதியடைந்தார் என்பது சரித்திரம். இவ்வடியார் முக்தி அடைந்த பொழுது, இவரது திருமேனி முத்துலிங்க வடிவமாயிற்று. அவருடைய சிஷ்யர்கள் அதற்கு ஒரு கோயில் அமைத்துப் பூசித்து வருகிறார்கள். இது முத்துலிங்க ஸ்வாமி கோயில் என வழங்கி வருகிறது.

இவருக்குப் பிறகு இந்த மடத்தின் தலைவராக 'ஜயசிங்ககிரி' என்பவர் வந்தார். இவரது காலம் 1814. இக்காலத்தில் தான் கண்டியை அரசாண்ட விக்கிர ராஜசிங்கன் பிரிட்டிஷ்காரரால் கைது செய்யப்பட்டான் என்பது சரித்திரம் கூறும் உண்மை. 'கலியாணகிரி' யவர்கள் காலத்தில்தான் முருகப் பெருமானருளால் உயர்ந்த அருணகிரிநாதர் கதிர் காமம் வந்து தரிசித்து கதிர்காமத்தான் பேரில் இருபத்தைந்திற்கு மேற்பட்ட திருப்புகழ் பதிகங்கள் பாடினார் எனக் கூறுவர்.

கவிமாலை:

பண்டைக் காலம் தொட்டுப் பல புலவர்களும், அறிஞர்களும், முற்றுந் துறந்த துறவிகளும் இத்தலத்தை தரிசித்திருத்தல் வேண்டும். தமிழ்ப் பெருமக்கள் இச் சரித்திரத் துறையில் நாட்டம் செலுத்தாக் குறைவால் எவ்வளவு அரிய வரலாற்றுக் குறிப்புகளை எல்லாம் அவர்கள் இழந்து விட்டார்கள். பதிமூன்றும் நூற்றாண்டு வரையில் வாழ்ந்ததாகப் கருதப்படும் புகழேந்திப் புலவர் – யாழ்ப்பாண அரசனின் உதவியுடன் இக் கோயிலைத் தரிசித்துள்ளார். இவர் கதிர்காமத்து வேலர் முன் பாம்பை மயில் விடப் பாடிய செய்யுளொன்று தமிழ் நாவலர் சரிதையிலுண்டு. அதை ஆழ்ந்து துருவினுல் அறியலாம் மெய்ப்பொருளை!

"தாயரவை முன்வருத்துஞ் சந்த்ரோ
தயந்தனக்குன்
வாயரவை விட்டுவிட மாட்டாயோ—
நீயரவைச்
சீறுமயிற் பெருமாடென் கதிர்
காமப்பெருமாள்
ஏறு மயிற் பெருமாளே...!"

என்பதனுல் அறியலாம்.

கோயில் வழிபாடும் நித்திய பூஜைகளும்:

கதிர்காமக்கோயில் வழிபாடு ஏனைய சைவக் கோயில் வழிபாட்டினின்றும் முற்றும் வேறுபட்டது. மாணிக்க கங்கையைக் கடந்து கோயிலை அடைந்த அடியார்கள் சாதி, குலம்



மாணிக்க கங்கை 'சலசல' வென்று யாதொரு களங்கமும் இல்லாமல் கற்பாறைகளின் மேல் ஓடுகிறது; தண்ணீர் மிகவும் தெளிவாயுள்ளது.

எனும் தடுமாற்றங்களைக் கடந்தவர்களாய், பிறப்பொக்கும் எல்லாஉயிர்க்கும் எனும் பேருண்மையைக் கடைப்பிடித்தவர்களாய், ஒருங்கு நின்று கதிர்காமப்பெருமானை வழிபடுவார்கள். இக்கோயிலில் பூசை செய்கிறவர்களைக் 'கப்புராளைமார்' என அழைப்பார்கள்.

கப்புராளை எனும் சொல் சிங்களச்சொல் என்பர் ஒரு சாரார், தமிழ் சொல்லென்பர். இன்னொரு சாரார், வேட்டுவமொழிச் சொல்லென்பர் பிறிதொருசாரார். கதிர்காமத்திலுள்ள கப்புராளைமார் வேட்டுச் சாதியின் வழித்தோன்றல்கள் என்பர் ஒரு சாரார். இவர்கள் பழந்தமிழரெனவும் பிற்காலத்தில் சிங்களவருடன் சேர்ந்து அவர்களுடைய மொழியை இப்பொழுது பேசி வருகிறார்கள் எனவும் குறிப்பிடுவர் வேறொரு சாரார். எவ்விதமிருப்பினும் கப்புராளைமார் கோயிற் பூசை செய்யும் முறையும் புதிய தொன்றும். கோயிலுக்குள் இருப்பது யாதெனப் பிறர் அறியாவண்ணம் வாசலில் முருகப்பெருமானின் திருவுருவம் வரைந்த திரைச்சீலை யொன்றை யிட்டு மறைத்து விட்டனர். இத்திரைச் சீலை ஒரு பொழுதும் எக்காரணத்தை முன்னிட்டும் எடுக்கப்படுவதில்லை.

கப்புராளைமார், தம் வாயை மஞ்சட்சீலைத் துண்டினுற்கட்டி அமுதினை உள்ளே காவிச் சென்று வைத்த பின்னர் வெளியே வந்து திரைச் சீலை முன்பாக நின்று, பக்தியுடன் கைகளிரண்டையும் மேலே கூப்பி வழிபாடு செய்கின்றனர். திருவிழாக் காலங்களில் யானைமீது எழுந்தருளிப் பல்லாயிரக்கணக்கான தொண்டர்களுக்குக் காட்சியளிப்பது, முன்னர் குறிப்பிட்ட எந்திரம் அமைந்த பெட்டியாகும். திருக்கோயிலுள்ளே வெண்கலத்தாலும், கருங்கல்லினுலும் செய்த ஆறுமுகவேலவர் திருவுருவங்கள் மாசுபடிந்து சீலையினுல் மறைக்கப்பட்டு கிடக்கின்றன என்று பௌத்த குரு ஒருவர் சுமார் 25 வருஷங்களுக்கு முன் கூறியுள்ளனர். இஃதுண்மையாயின் சிங்களவர் இக்கோயிலின் ஆட்சியைக் கைப்பற்று முன்னர், தமிழரே சைவ ஆகமம்படி திருவுருவம் அமைத்துத் தொழுது வந்தனர் என்பதும், இத்திருவுருவத்திற்கு வழிபாடற்றும் முறை சிங்களவர் அல்லது வேட்டுவர்க்குத் தெரியாமையால் இக்கோயிலின் வாசலை மறைத்துத் திரைச்சீலை இட்டனர் என்பதும் வலியுறும்.

தவிரவும், தஞ்சையை ஆண்ட முதலாம் இராஜ ராஜன், அவன் மகன் இராஜேந்திர சோழன் காலத்தில் இலங்கை சோழ மன்னர் கையில் அகப்பட்டு ஆளப்பட்டு வந்ததற்குச் சரித்திரத்தில் ஆதாரங்களுண்டு. இக்காலத்தில் சிங்களவர் வட இலங்கையைவிட்டு தென் இலங்கையில் ஆட்சி செலுத்தி வரலாயினர். சிங்கள மன்னர் பரம்பரையில்தோன்றிய மானவர்மன் என்ற அரசன் மறுபடியும் சோழ மன்னரை இலங்கையைவிட்டு வெளியேற்ற கதிர் காம வேலனை நாடியதாகவும் அச்சமயம் முருகப் பெருமான் காட்சி கொடுத்ததாகவும் கர்ண பரம்பரையாகச்சொல்லப்பட்டுவருவது கண்கூடு. இன்னும் சிலர் முருகக் கடவுளின் ஷட்கோண இயந்திரத்தின் உதவியால் தான் சித்தியடைந்தான் என்று கூறுவர். இது முற்றிலும் உண்மை. இந்த ஷட்கோணம் ஸ்தாபித்து



மாணிக்க கங்கையில் நீரருந்த வரும் யானைகளின் கூட்டம்.

தவம் செய்து வந்தால் இஷ்டகாரியம் உடன் நிறைவேறும் என ஆன்றோர் பலர் அறுதியிட்டுள்ளனர்.

அப்படிச் சோழ மன்னர் தஞ்சைக்கு திரும்ப வரும்காலத்து இக் கோயிலினுள் இருந்த கருங்கல் ஆறுமுகவேலனை எடுத்து வந்ததாகவும் கூறுவர். அவ்வழகிய சிலை கும்பகோணத்துக்கு அருகிலுள்ள பட்டீச்வரம் என்னும் கோயிலில் தற்சமயம் இருப்பதாக கூறுவர் இங்குள்ள புத்த பிட்சுக்கள். இது ஆராய்ச்சிக்குரிய விஷயம். இன்னும் சில தஞ்சைக் கலைக்கூடத்தில் உள்ளன. கலைக் கூடத்திலுள்ள சிற்பங்களை பெரும்பாலும் பல கோயில்களிலிருந்து எடுக்கப்பட்டு ஒன்று சேர்த்துள்ளது சமீப காலத்தில்தான் என்பது வெளிப்படை.

இதற்கு அனுசரணையாக டாக்டர் டேவிஸ் என்பவர் எழுதியுள்ள குறிப்பொன்றில், "ஏற்கனவே கதிர்காமக் கோயிலில் விக்கிரகங்கள் இருந்தன என்றும், அக்காலத்தில் இப்பகுதிகளில் படையெடுப்பும் கலகமுமாக இருந்ததால் விக்ரகங்களை எங்கேயோ மறைத்து ஒளித்துவிட்டார்கள்" என்றும் எழுதுகிறார். தவிரவும், விக்ரகங்களையோ, முருகப் பெருமானின் படங்களையோ கண்டால் சிங்களவர்களுக்குப் பக்தியைவிட பயமே அதிகம். படங்களை எழுதிக்காட்டவும் நடுக்கம் என்று காப்டன் நாக்ஸ் என்பவர் சொன்னார் என்று சிங்கள நூல்களில் காணப்படுகிறது.

ஆடித்திருநாள் காலத்திலும், கார்த்திகைத் திருநாள் காலத்தும் ஏராளமான பணம் உண்டியல்களில் வந்து விழுவது கண்கூடு. உண்டியல்களுக்குப் பணம் போடுபவர்களைக் கவனித்தால் 90 சதவீதம் தமிழர்களாகவே இருப்பார்கள். இந்துக்களால் பொருள் கொடுக்கப்பட்டு; இந்துக்களால் சேவை செய்யப்பட்டு வரும் இக்கோயிலின் நிர்வாகம் இந்துக்களிடமே இருக்க வேண்டும். ஆனால், நிர்வாகம் சிங்களவர்களால் நடத்தப்பட்டு வருவது வெளிப்படை.

கதிர்காம ஆடி உற்சவம் பதினான்கு நாட்கள் நடக்கும். அந்த காலத்தில் கொழும்பில் ஆடிவேல் உற்சவம் வெகு குதூகலமாக நடைபெறுகிறது. செட்டித்தெருவிலிருந்து வேல்ரதமும், சம்மாங்கோட்டிலிருந்து காவடி ரதமும், வெள்ளவத்தையிலிருந்து போய் கடைசி மூன்று நாட்கள் தங்கித்திரும்பும். வெள்ளவத்தையிலும் பம்பலப்பிட்டியிலும் இச்சமயம் வெகு கொண்டாட்டமாயிருக்கும். ஆடி அமாவாசையில் ஆரம்பித்து பௌர்ணமி முடிய 14 நாட்கள் உற்சவத்தில் வள்ளியம்மை கல்யாணம் நடக்கும். உற்சவம் ஆரம்பித்த எட்டு நாட்களுக்குமேல் கொழும்பிலிருந்து வேல்காவடி வந்த நாளிலிருந்து கூட்டம் வந்தபடியே இருக்கும். இன்றைக்குத்தான் வடபாகத்தில் உள்ள விஹாரைக்கு சுவாமியை அழைத்துச் செல்லுவார்கள். மறுநாட்காலையில் தீர்த்தம் கொடுத்து விழா முடிவு.

கதிர்காமத்தில் நடக்கும் சுவாமி ஊர்வலத்தில் ஒரு விசேஷம் என்னவென்றால், எண்ணெய் தீவர்த்திகள் (தீவட்டிகள்) இல்லை. பக்தர்கள் புதுச் சட்டி வாங்கி அதில் விபூதியை நிரப்பி கற்பூரம் கொளுத்திக்கொண்டு சுவாமியோடு செல்லுவார்கள். இந்த வெளிச்சந்தான் ஊர்வலத்திற்குள்ள வெளிச்சம். கோவிலுக்குப் போகிறவர்களும் தங்களாலான அளவிற்குக் கற்பூரம் வாங்கி, எல்லாக் கோவில்களிலும் அதற்கென வைக்கப்பட்டுள்ள கற்பூரத்தோடு சேர்ப்பார்கள். பெண்கள் மாவிளக்குப் போடுவார்கள். இதற்குத் தேனும் தினைமாவும் வாங்க கோயில்களில் வசதியுண்டு.

கனவில் தோன்றும் கட்டளை:

முற்காலத்தில் சைவப் பெருமக்கள் தாம் நினைத்தபடி கதிர்காம யாத்திரை செய்ய முடியாது. காரணம், கதிரையாண்டவன் கனவிற் றோன்றி வருமாறு விடை கொடுத்தாலன்றிப் பக்தர்கள் கதிர்காமம் செல்லப் புறப்படத் துணியார்கள். அங்ஙனம் உத்தரவின்றிச் சென்றால்

யானைக் கூட்டங்களினால் பல இன்னல்களை அனுபவிக்க நேரிடுமென்பது அவர்களுடைய கொள்கை. கதிர்காம யாத்திரை செய்வது இக்காலத்தில் ரொம்பவும் எளிது. தொண்டர்கள் ஆங்காங்கே பல மடங்கள் நிறுவி யாத்ரீகர்களுக்கு வேண்டிய வசதிகள் செய்து தருகிறார்கள். இதற்கு எவ்விதக் கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை.

கதிர்காமம் செல்லும் பாதை நெடுக சுமார் பன்னிரெண்டு மைல் வரையிலும் நடந்தே செல்ல வேண்டும். பக்தர்கள் கூட்டம் கூட்டமாகப் பாடிக்கொண்டும் ஆடிக்கொண்டும் செல்வார்கள். எங்கே பார்த்தாலும் 'அரோகரா' எனும் சத்தமே வானத்தையும் பிளந்துகொண்டு செல்லும். குளிர்ந்த நீரைப் பருகமாட்டார்கள், வெந்நீரையே யாத்ரீகர்கள் பயன்படுத்துவார்கள். ஏனெனில் இங்கு 'மலேரியா காய்ச்சல்' தாண்டவமாடும் இடங்கள் அருகில் பல உள்ளன. இதற்கு வேண்டிய வைத்திய உதவிகள் அரசாங்கம் செய்தும் கொடுக்கும்.

கதிரை மலையின் உச்சியில்தான் ஒரு வேலாயுதம் உண்டு. அங்கு போய் தேங்காய் உடைத்து கற்பூரம் கொளுத்துவோருமுண்டு. இம்மலைக்கு அருகில் விபூதி மலையொன்றுள்ளது. இங்கிருந்துதான் விபூதி வெட்டி எடுக்கப்பட்டு கதிர்காமக் கோயிலுக்குக் கொடுக்கப்படுகிறது. நல்ல வெள்ளையாக இருக்கும். இங்கிருந்து வெட்டி எடுத்து, இடித்து உற்சவ காலங்களில் படிக்கணக்காக யாத்ரீகர்களுக்கு விற்பனை செய்யப்பட்டு வருவது உள்ளங்கை நெல்லிக்கனியாகும்.

இவ்விரண்டு இடங்கள் தவிர செல்லக் கதிர்காமம் என்றோர் இடமுண்டு. இது சுமார் மூன்று மைல் தூரத்தில் உள்ளது, நல்ல யானைக் காட்டின் நடுவேயுள்ளது. இந்த இடத்தில் உற்சவ காலங்களைத் தவிர வேறு காலங்களில் ஜனப் போக்குவரத்துக் கிடையாது. தழை, முட்செடிகளின் ஊடே போகவேண்டிய இடம்; வண்டியிலும் செல்லலாம். உற்சவ காலங்களில் இக்கிளைகளை வெட்டிவிடுவார்கள்.

இந்த இடத்தில் பிள்ளையார் கோவிலுண்டு. அதற்கு ஆள்காட்டிப்பிள்ளையார் என்று பெயர். இங்குதான் மாணிக்க கங்கை சல சலவென்று யாதொரு களங்கமும் இல்லாமல் கற்பாறைகளின் மேல் ஓடுகிறது. தண்ணீர் மிகவும் தெளிவாக உள்ளது. காட்டு மிருகங்கள் இங்கு வந்து போவது நியாயமே. யாத்திரீகர்கள் இங்கு ஸ்நானம் செய்து பிள்ளையார் தரிசனம் செய்து போவார்கள். வள்ளி நாச்சியார் தினைப்புனம் காத்துக் கொண்டிருக்கையில் கதிர் காமவேலன், அம்மையாரை தன் வசப்படுத்த, அண்ணன் கணேசரை நாட, அவர் யானை உருவத்தில் வந்து

செல்லக் கதிர்காமம் ஆள் காட்டிப் பிள்ளையார்.
இக் கோயில் மாணிக்க கங்கையின் அருகில்
இருப்பதால், இப் பிள்ளையாரும் துதிக்கையில்
கங்கையினை வைத்துள்ளார்

வள்ளியம்மையாரைப் பயமுறுத்திய இடம் எனக் கூறுவாருளர்.

கதிர்காமத் தலத்தை அடைந்தால் மாணிக்க கங்கையில் கவலையின்றிக் களை தீர தண்ணீரை அள்ளி அள்ளிக் குடிக்கலாம். இந்த ஆறுமட்டும் இல்லையானால் பக்தர்களின் நிலைமை என்ன ஆகும்? என்று நினைக்கும்போது முருகப்பெருமானின் திருவருள் திறத்தை நினைந்து நினைந்து உருக நேரிடும். இக்கங்கையைக் கடந்தால் "உற்றாரை யான் வேண்டேன் ஊர் வேண்டேன் பேர் வேண்டேன்" என்ற ஞானமே பிறந்துவிடும். இந்த மாணிக்க கங்கை தேவர்கள், முனிவர்கள், பூத கணங்கள் இவர்களின் வேண்டுகோளுக்கிணங்க முருகப் பெருமானின் உத்தரவுப்படி வீரவாகு தேவரால் வெட்டப்பட்டதாக ஸ்தல புராணம் கூறுகின்றது.

முடிவுரை:

கதிர்காமத் திருவிழா முடிவுற்று மாணிக்க கங்கையைக் கடந்தவுடன் மீண்டும் உற்றார் உறவினருடைய நினைவு உதிக்கும். இந்த கங்கையின் சிறப்பு யாதெனின், மாசு படிந்த உள்ளத்தைக் கழுவி மாணிக்கமாக்கி இறைவன் திருவடி பதிதற்குரிய தூய்மையுடையதாக்கி விடுகின்றது

கதிர்காமத்திலுள்ள கருணைக்கடல்

எனவே இந்நதிக்கு மாணிக்க கங்கையெனும் பெயர் மிகப் பொருத்தமே! அன்றியும் இதனை யொரு பிறவிக் கடலாகவும் பிறிதொரு வழியிற் கொள்ளலாம். இதனை நீந்திச் சென்றார் இறைவனடி சேர்ந்தாராகக் கருத வேண்டும்.

கதிர்காமத்தில் முருகப்பெருமான் சிறியதொரு கோயிலிற்றான் வீற்றிருக்கின்றான். ஆகையால் அங்கு செல்லுபவர்கள் கோயிலின் வீதி அமைப்பைக்கண்டு களித்தற்கேனும் அல்லது அங்குள்ள கடைகளின் சிறப்பைக்கண்டு களித்தற்கேனும், அல்லது அங்கு நடைபெறும் அலங்கார விழாவைக் கண்டு களித்தற்கேனும் போக வில்லை. அங்ஙனமாயின் ஆயிரக்கணக்கான மக்கள் இந்த ஆடிவேல் உற்சவத்திற்குச் செல்லக் குரிய காரணந்தான் என்ன?

கலியுகவரதனாய் முருகப் பெருமான் வள்ளி நாச்சியாருடன் வீற்றிருந்து அடியார்களுக்கு அருள் புரிதலினால், இத்தலத்திலுள்ள திருவருட் சத்தியானது, காந்தசத்தி இரும்பை இழுப்ப தொப்ப அடியார்களை இழுத்துவிடுகின்றது எனக் கூறின் மிகையாகாது.

இந்திய முஸ்லீம்களில் பெரும்பாலோர் கதிர் காமத்திற்கு வந்துபோவது கண்கூடு; நாகூர் ஆண்டவர் சமாதியை இந்துக்கள் நாடோறும் தரிசித்துப்போவதுபோல, இங்கும் முஸ்லீம்கள் வந்து போகிறார்கள். தவிரவும், கதிர்காமத் துக்கு அருகிலுள்ள மாணிக்க கங்கையின் ஓரத் தில் ஓர் ஊற்று இருக்கிறது. அந்த ஊற்றின் நீரைப் பருகியவர் சிரஞ்சீவிகளாக இருக்கமுடியும் என்பது அம் முஸ்லீம்களின் கொள்கை. அவர் களுள் கிதிர் நபீ என்னும் பக்தர் அந்த ஊற்றின் நீரைப் பருகி சிரஞ்சீவியாய் இருந்தாரென்றும் அவரே இஸ்லாம் மார்க்கத்தை மாலத்தீவு முத லிய இடங்களில் பரப்பினார் என்றும் சொல்லப் படுகிறது. அந்த ஊற்று இருந்தவிடம் இப் பொழுது தெரியவில்லை. ஆனால், அவ்வூரைச் சுற்றிலும் கிணறுகளுமில்லை. ஊருக்கு வேண்டிய குடி தண்ணீர் இந்த மாணிக்க கங்கையைப் பொருத்ததுதான்.

வள்ளியம்மை கோவிலுக்கு அருகாமையில் ஒரு சிறு பள்ளியும் கட்டப்பட்டுள்ளது. அதன் அருகில் அம் முஸ்லீம் பெரியாரின் சமாதியு முள்ளது. அவர் முத்துலிங்கஸ்வாமியின் காலத் தவர் என்றும், அவருடைய தொண்டர் என்றும் இங்குள்ள பெரியோர்களால் சொல்லப்பட்டு வருகிறது. அவ்விரு பெரியார்களுள் "யார் பெரி யர் யார் சிறியர்? மத வித்தியாசந்தான் ஏது?" இந்து முஸ்லீம் ஒற்றுமைக்கு இது ஒரு சிறந்த ஸ்தலம் எனக் கூறினும் பொருந்தும்!

மறுபடியும் ஆச்சரியப்படும்படியான

ஆரோக்கியத்துடன் இருங்கள்

வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்

ஆரோக்கியத்தை அளிக்கும் சிறந்த டானிக் என்று நிருபணம் செய்யப்பட்டது. அதை ஆரோக்கியத்துடன் இருக்க விரும்புவோர்களும் அவர்களது குழந்தைகளும் உலகமெங்கும் தினசரி உபயோகப்படுத்துகிருர்கள்.

வாட்டர்பரீஸ் காம்பவுண்டில்

போஷாக்கை ஊட்டும் கலவைகள் இருக்கின்றன. அவைகள், நீங்களும், உங்கள் குடும்பத்தினரும் வீர்யத்துடனும், ஆரோக்கியத்துடனும் சந்தோஷத்துடனும் இருப்பதற்குத் தேவையான அதிகப்படி சக்தியை அளிக்கின்றன.

வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்

இடைவிடாதிருந்துவரும் இருமலையும், ஜலதோஷத்தையும், தொண்டைப்புண்ணையும் போக்குகிறது. நோயுற்று குணமடைந்தபின் உடம்பு சீக்கிரமாகத் தேறுவதற்கு டாக்டர்களால் சிபார்சு செய்யப்படுகிறது.

இப்பொழுது திருட இயலாத மூடியுடனும், புதிய சிகப்பு முத்திரையுடனும் கிடைக்கும்

சிவப்பு உறை இப்பொழுது நிறுத்தப் பட்டுள்ளது.

நீங்களும் ஆரோக்கியத்துடன் இருக்க நாவிற்கினிய

வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்

சாப்பிடுங்கள்

அடுத்த இதழில்...

'இன்பமே! இங்கே வா!' அழைக்கிறான் அவன்.

ஆம்! முதலாளிக்காகத்தான் தேன் எடுத்தான் அவன்! ஆனால் கையில் ஒட்டாமல் இருக்குமா அது? அதைச் சுவைக்காமல் இருக்கத்தான் முடியுமா?

அவன் அன்பின் சுனைகள், இன்பத்தின் சிமிழ்கள், காதல் தேன் மலர்கள், போதைதரும் பேதைகள், மங்கையர்களின் உள்ளப் பெட்டிகள், எளிதில் நெகிழ வைத்து விடும் வரம் பெற்றவன். அது அவனுக்கு எளிதில் கிடைக்கிறதா?

ஆம்! கிடைக்கிறது;
இல்லை; கிடைக்கவில்லை. அப்படியென்றால்...

சொல்லவேண்டாம், இப்பொழுது!
படித்துப்பாருங்கள்; தொடர்ந்து படித்து வாருங்கள்.

மொட்டும் நெகிழ்த்தல் கண்டிருப்பீர்,
மொழியும் வஞ்சக் கதை கேட்க!
விட்டுப் பறத்தல் கண்டிடுவீர்,
விருப்பஞ் சுவைத்தே வண்டதுவும்!

ஆம், படியுங்கள்
உள்ளத்திலே உவகை பொங்கும்!
சுவை தங்கும்! கருத்து தேங்கும்!

தாலாட்டும்;
ஆராட்டும்.

துள்ளும் நடை! தெள்ளிய கருத்து!
ஆம்! ஊர் உருப்பட நல்ல கருத்து.

தி. சேஷாத்திரி, M.A. எழுதும்

புதிய தொடர்கதை

"இன்பமே! இங்கே வா"

உங்கள் 'காவேரி' ஏஜண்டிடம் முன்னதாகவே சொல்லி வையுங்கள். தொடர்பு விட்டுப்போகாமல் படிக்க வாய்ப்பு ஏற்படுத்திக் கொள்ளுங்கள். கதைப்போக்கு அப்படி அமைந்துள்ளது. ஏஜண்ட் இல்லாவிட்டால் சந்தாதாரர்களாகச் சேர்ந்து விடுங்கள்.

காவேரி; பெஸண்ட் ரோடு, கும்பகோணம்.

வா, அங்கே செல்வோம்!

மூலம்: தாகூர்   தமிழ்: பேகன்

கனத்த கூடை தலைசுமந்து
களைப்புடன் செல்லும் இளம்பெண்ணே!
பணத்தைப் பெரிதாய் எண் ணித்தான்
பாழும் வெயிலில் செல்வாயோ?

காக்கைக் கண்ணின் இருட்டேபோல்
காணும் நீர்நிறை ஏரியைப்பார்!
பூக்கள் போன்றே மென்மையுள்ள
புல்லைப் பாராய் கரைப்புரத்தில்

நீசெல் தூரம் பெரிதாகும்
நேரம் கொல்லும் வெயிலாகும்!
மாசில் நீரில் கால்வைத்து
மானே நீயும் இன்புறுவாய்!

தென்றல் மெல்லிய விரலாலுன்
சிகையை அன்பாய்க் கோதிடுமே!
பண்ணை யுருக்கிப் புருக்கள்தான்
பெண்ணே யுன்னைத் தாலாட்டும்!

நிழலில் அமையும் ரகசியத்தை
நீள்குளிர் நாவலில் மலிகின்ற
இலைகள் தங்கள் தலையசைத்தே
இயம்பும் உனக்கு முணுமுணுத்தே!

சூரியன் மேற்கில் மறைந்தாலென்?
சூழும் அந்த இருட்டினிலே
நேரிய பாதை மறைந்தாலென்
நீயே எதற்கும் வருந்தற்க!

முல்லை மலரின் தோட்டத்துள்
முகிழ்த்த என்றன் வீட்டைப்பார்
கல்லை எறியும் தூரத்தில்
களைப்பற நீயும் வா அங்கே!

உனக்கே அதன்வழி காட்டிடுவேன்!
உவக்கும் முல்லை மலர்பெய்த
மணக்கும் மஞ்சம் அமைத்திடுவேன்!
மணிவிளக் கொன்றும் ஏற்றிடுவேன்!

பாலைக் கறக்கும் ஒலிவந்து
பறவைகள் தம்மை எழுப்பு(ம்) அதி
காலையில் உன்னை எழுப்பிடுவேன்!
கலங்கேல் செல்வோம் வா, அங்கே!



விரைவில் செயல்பட, ஆள்பலத்தாலும், இயந்திர பலத்தாலும் வாகன்களில் கரி நிரப்பப்படுகிறது.

கறுப்பு வைர வேட்டை - 4

கே. ஸ்ரீநிவாஸன்

பொகாரோ கரிக்குழியை விட்டு கற்களியை நோக்கி கிளம்பினோம். வழியில் "என். ஸி. டி. ஸி."யின் ரிபேர் ஆலைகளையும் பார்வையிட்டோம். ஏராளமான லாரிகளையும் மண் வெட்டிகளையும் உபயோகப்படுத்தும் 'ஒர்க்ஷாப்' அதிருப்திகரமாயிருந்தது. நம் ஊர் தொழில்கங்களில், எவ்வளவுதான் சிறியதாகயிருந்தாலும், இயந்திர ரிபேர் இலாகா தேவைக்கு அதிகமாகவே பெரியதாக இருக்கும். "சிறுகச் சிறுக இவைகளை விஸ்தரிப்போம். அந்நிய நாட்டு செலவாணி கட்டுப்பாடு காரணமாக உபரி பாகங்கள் தருவிப்பது கஷ்டமாக இருக்கிறது" என்றார் ஸ்ரீ பகராய். கோவணம் இல்லாதவன் பட்டறை கட்ட முற்பட்ட கதையைப் போல் இருந்தது அவர் கூறிய சாக்கு.

கரிச்சுரங்க தொழிலாளிகள் ஜோடி ஜோடியாக சுரங்க வேலையில் ஈடுபடுகிறார்கள். அவர்கள் வேலையில் ஈடுபட்டிருக்கும்பொழுது அவர்களின் குழந்தைகளை யார் பார்த்துக் கொள்ளுவார்கள் என்ற சந்தேகம் எழுகிறது அல்லவா? பாட்டி தாத்தா உள்ள வீட்டில் கவலையில்லை. ஆனால் எல்லா வீடுகளிலும் பாட்டிகளும் தாத்தாக்களும் இல்லையல்லவா? ஆகவே குழந்தைகளை சர்க்கார் 'பாட்டி'கள் "கிரீஷ்" என்று சொல்லப்படும் குழந்தைகள் பாதுகாப்பு விடுதியில் கவனித்துக் கொள்ளுகிறார்கள். இந்த விடுதியையும் சற்று பார்வையிடுங்கள் என்று "என். ஸி, டி. ஸி." தொழில் அதிகாரி கேட்டுக் கொள்ளவே நாங்கள் இறங்கி உள்ளே சென்றோம். ஒரு பெரிய அறையில் வரி

சையாகக் குழந்தைகள், பெரும்பாலும் மூன்றிலிருந்து ஐந்து வயதுக்குட்பட்டவர்கள் உட்கார்ந்திருந்தார்கள். ஒவ்வொரு குழந்தைக்கு முன்னால் ஏதாவதொரு பொம்மை இருந்தது. செவிலித் தாயை பாட்டி என்று சொன்னால் நன்றாகப் பொருந்தும். ஏனென்றால் நடை உடை பாவனைகளில்தான் சிறு வயதானவள் என்று காட்டிக் கொண்டாலும் முகம் தொண்டு கிழவி மாதிரி இருந்தது. "நமஸ்தே" சொல்லுங்கள் என்று மிகவும் தேன்சொட்டும் குரலில்தான் சொன்னாள். குழந்தைகள் கொஞ்சம் கூட பிசகாமல், அந்த அம்மாள் மேல் வைத்த கண் வாங்காமல் கையைக் கூப்பி "நமஸ்தே" என்றனர். சிம்ம சொப்பனமா அல்லது தெனாலி ராமன் பூனையா என்று சந்தேகமாயிருந்தது. அந்த சந்தேகத்தை தெளிய வைத்தான் அந்த விடுதி பியூன். "சமயத்தையொட்டி நடப்பதில் இந்த அம்மாள் மகா சாமர்த்தியக்காரி" என்று சொன்னான் அவன். இலவச சேவை முன் பின்னாகத்தான் இருக்கும் என்று என்னை நானே சமாதானப் படுத்திக் கொண்டேன்.

கற்களி கரி பிரிக்கும் சாலையை அடையு முன்னரே பலமான சப்தம் காதைத் துளைத்தது. ஜப்பானிய கண்டிராக்டர்கள் மூலம் நிறுவப்பட்ட இந்தத் தொழிற்சாலையில் சென்ற கட்டுரையில் கூறிய பிரகாரம் நிலக்கரி மூன்றுவிதமாக பிரிக்கப்படுகிறது, தொழிற்சாலைக்கு வெளியே உள்ள ஆராய்ச்சி நிலையத்தில் கண்ணாடி ஜாடிகளில் பலவித திராவகங்களை நிரப்பி வைத்து கரியை பிரிக்கும் முறையை விளக்கினார் தொழிற்சாலை சூப்பரின்டெண்டெண்டு. சுத்த தண்ணீரில் அமுங்கும் வஸ்து சமுத்திர ஜலத்தில் மிதக்கிறதல்லவா? ஏன்? சுத்த ஜலத்தைவிட சமுத்திர ஜலம் கனமானது. ஆங்கிலத்தில் இதை Specific Gravity என்பார்கள். இந்த தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது கரி பிரிக்கும் முறை. ஒவ்வொருவித கரிக்கும் தினுஸா தினுஸான கனம் கொண்ட திராவகத்தை உபயோகப்படுத்துகிறார்கள்.

தொழிற்சாலைக்குள் எங்களுக்குச் சுற்றிக் காட்டிய ஸ்ரீ முகர்ஜியும் ஓர் இளைஞர். ஜப்பானியருடன் நல்ல முறையில் ஒத்துழைத்து, இந்தத் தொழிற்சாலை நுணுக்கங்களை நன்றாகக் கற்றுக்கொண்டு, பிற்பாடு தொழிற்சாலை நிர்மாணிப்பதில் இந்தியர்களுக்கும் ஒரு பங்கு உண்டு என்று எடுத்துக்காட்டியிருப்பவர். தொழிற்சாலை எஃகு உத்திரங்களையும் சுவர்களையுமே கொண்டது. மாடிமாடியாக ஏறி எங்களுக்கு முழங்காலில் ரத்தம் கட்டிக் கொண்டுவிட்டது. ஒவ்வொரு மாடியிலும் அந்தப் பரந்த பிரதேசத்தில் நடப்பதை கண்காணிக்க "மர்ம கண்காணிப்பு" விசைகள் உள்ளன. இவைகளில் இமைக்கும் சிவப்பு பச்சை கண்களைக்கொண்டு ஒரு யோக்கியதாம்சம் உள்ள அதிகாரி ஒருமாடி பூராவும் உள்ள ஊழியர்களை மேற்பார்வை பார்க்கலாம்.

கரியைப் பிரிக்க பலவித கனமுள்ள திராவகங்கள் உபயோகப்படுத்தப்படுகின்றன என்றேன் அல்லவா? இந்தத் திராவகங்கள் பெரிய தொட்டிகளில் நிரப்பப்பட்டு இயந்திர விசையால் கலக்கப்படுகின்றன. இவைகளில் அமுங்கும் கரியைப் பிரித்து சில இடங்களுக்கும், மிதக்கும் கரியை பல்வேறு இடங்களுக்கும் அனுப்புகிறார்கள். பிரித்த கரி தானாகவே இயங்கும் கால்வாய்கள் மூலம் மற்றத் தொட்டிகளுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. ஒவ்வொரு விதக் கரியையும் பெரிய வாளிகளில் மின்சார மூலம் இயங்கும் ஆகாயப் பாதைகள் வழியாக பொகாரோ, ரௌர்கேலாவுக்கு செல்லும் சமீப ரயில் ஸ்டேஷன், ராஞ்சி முதலிய இடங்களுக்கு அனுப்புகிறார்கள்.

இந்தத் தொழிற்சாலைக்கு வெளியே டிராலி மார்க்கத்தைச் சுற்றி காட்டிய ஸ்ரீபகராய் அருகே நின்ற ஒரு வயதான ஆளைக் காட்டி "இவன் மகா சமர்த்தன். இவனைப் போன்றவர்கள் தான் இங்கு வேலை துரிதமாக முன்னேறுவதற்குக் காரண பூதர்கள்" என்று சொல்லி, "தமிழில் இவனுடன் பேசுங்கள்" என்றும் சொன்னார். தமிழிலா? இந்த வனாந்தரத்துக்குக் கூட தமிழ் பேசும் உழைப்பாளிகள் வந்து விட்டார்களா என்று யோசித்துக் கொண்டிருக்கும் பொழுது "சாமி வணக்கம்" என்று கும்பிடு போட்டான் முனிசாமி. சென்ற 30 வருஷங்களாக அவனும் பிற நூறு உழைப்பாளிகளும் வேலை பார்ப்பதாகவும், ஸ்ரீபகராய் "சாகிப்" மிகவும் நல்லவர் என்றும் தனக்குமட்டும் அவர் இன்னும் Overman என்ற உயர்ந்த கங்காணி வேலைக்கு உயர்வு கொடுக்கவில்லை என்றும் முனிசாமி தமிழனுக்கே உரித்தான நாஸுக்கான பாணியில் சொன்னான்.

ஸ்ரீபகராய் கைக்காரப் பேர்வழி "முனிசாமி! உன்பாஷை பேசும் விசேஷ அதிதியின் வருகையை முன்னிட்டு உனக்கு Overman பதவியை இன்று முதல் கொடுத்து விட்டேன்" என்றார். முனுசாமிக்கு வாய் எல்லாம் பற்கள். "மிகவும் வந்தனம்." "நீங்கள் வராவிட்டால் இந்த உயர்வு கட்டாயம் நம்பளுக்கு கிட்டாதுங்க," என்றான். "தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா" என்று நம் ஊரில் சோம்பேறி பாட்டு பாடுகிறார்கள். உடலை உழைத்து, சிபாரிசு என்பது இல்லாமல், மிகக்குறைந்த ஊதியத்தைப் பெற்று தலை நிமிர்ந்து நின்ற முனிசாமிதான் அசல் தமிழன் என்று தோன்றிற்று,

பொகாரோவை விட்டு நடுநிசியில் "மிக சமீபம்" என்று சொல்லப்பட்ட ரயில் ஸ்டேஷனுக்கு பஸ்ஸில் கிளம்பினோம். பொகாரோவில் மின்சாரம் ஏராளமாக உற்பத்தி செய்கிறார்களே ஒழிய இந்தப் பிராந்தியத்தில் யூனியன் இலாகா கிரோஸின் விளக்கை தெரு விளக்காக நட்டிருந்தது. "என்னப்பா சுற்றிச்சுற்றி வந்தும் பொகாரோவை விட்டு நகர்ந்த பாடில்லை" என்று முணு முணுத்துக் கொண்டே டிரைவர் வண்டியை பின் பக்கம் செலுத்தினான். திடீரென்று ஒரு கூச்சல் வெளியிலிருந்து கேட்டது. டிரைவர் வண்டியை நிறுத்தினான். எட்டிப் பார்த்தோம் வண்டிக்குப் பின்புறம் அன்று காலை பார்த்த பொகாரோ சுரங்கம் இருந்தது. நண்பர் சக்கரபாணி "ஐயோ கொலை சார்" என்று கழுத்தை இறுக்கிப் பிடித்துக் கொண்டார். நல்லவேளை; சுரங்கத் தொழிலாளி போட்ட சப்தத்தால் நாங்கள் உயிர் பிழைத்தோம். பிறகு அந்தத் தொழிலாளியையே எங்களுக்கு வழிகாட்டியாக அமர்த்திக்கொண்டு ரயில் ஸ்டேஷனை அடைந்தோம்.

அடுத்த முகாம் கல்கத்தா. இங்கு உண்மையில் ஒரு நாள் ஓய்வு. "ஜியலாஜிகல் ஸர்வே ஆப் இந்தியா" என்று சொல்லப்படும், இலாகா பூமிக் கடியில் கிடக்கும் உலோகங்கள் எங்கு இருக்கின்றன என்பதை ஆராய்வது வேலை. இந்த இலாகாவில் எப்பொழுதும் வங்காளிகள்தான் தலைமை வகிப்பது வழக்கமாகி விட்டது. நிருபர்கள் கேள்விகளுக்கு கஷ்டகாலமே என்று பதிலளித்த தலைவர் அவசரம் அவசரமாக எங்களை மூட்டை கட்டி அனுப்பினார். எங்களுக்கும் ஒரு விதத்தில் திருப்திதான். கல்கத்தாவில் மாமா, மச்சான் எல்லோரையும் பார்த்துவிட்டு ரசகுல்லா எதேஷ்டமாக சாப்பிட சந்தர்ப்பம் கிடைத்தது,



பத்திரிகை நிருபர்கள் சுரங்க டிராலியில் ஏற்றப்பட்டுள்ளனர்

கல்கத்தாவிலிருந்து குராஸியாவை அடைந்தோம். இங்கு சர்க்கார் நிர்வகிக்கும் சுரங்கம் உண்மையில் பூமிக்கடியில் கரி எடுக்கும் சுரங்கம் என்பதுடன் இந்தக் கரிஎஃகு ஆலைகளுக்கு மிகவும் உகந்தது என்பது விசேஷமாக குறிப்பிடவேண்டியது. ரயில்வே ஸ்டேஷனிலிருந்து பார்த்தால் நீலகிரியில் உள்ள குன்னூர் ரயில் ஸ்டேஷனைப் போல் இருந்தது குராஸியா ஸ்டேஷன். வெளியே சென்று கொஞ்சம் பார்த்த பிறகு இது மகாமட்டமான இடம் என்று தெரிய வந்தது. கரியை வெட்டி எடுக்கிறார்களே ஒழிய அந்த ஊருக்கு ஏதாவது சௌகரி

யங்கள் செய்துகொடுக்க வேண்டும் என்று எந்த சுரங்க முதலாளிகளுக்கும் ஏனோ தோன்றவில்லை? உண்மையில் குராஸியா வில் நல்ல ரஸ்தாகூட கிடையாது. இரவில் பாட்டரி விளக்கு இல்லாவிட்டால் இன்னும் மோசம். தெரு என்று நினைத்துக் கொண்டு சரிவில் காலை வைத்து உருள வேண்டியதுதான். "ஏன் இந்த நிலைமை யில் குராஸியா இருக்க வேண்டும்" என்று கேட்டதற்கு "என். ஸி. டி. ஸி." அதிகாரி "நாங்கள் மட்டுமா இங்கு கரி எடுக்கிறோம்? மற்ற தனிப்பட்டவர்களுக்கு பொறுப்பு இல்லையா?" என்று பதில் கேள்வி கேட்டு சாமர்த்தியமாக எங்களை மடக்கி விட்டதாக நினைத்தார். ஆதலால் குராஸியாவில் உள்ள கரியை சுரண்டுவதைத் தவிர அந்த ஊரின் நன்மையில் தங்களுக்கு அக்கரை இல்லை என்பதை சர்க்கார்கூட நன்றாக காட்டி விட்டது என்ற எண்ணமே எங்கள் மனதில் மேலோங்கியிருந்தது.

காலையுண்டி குராஸியா சர்க்கார் அதிதி கிருகத்தில். உண்டிக்குக் காத்திருக்கும் பொழுது வெளியே சென்னை மாகாணப் பெண்மாதிரி யாரோ செல்லுவதைப் பார்த்து "யாரோ இவர் யாரோ" என்று சிந்திக்கலானேன். அப்பெண்ணுக்கு சுமார் 13 வயதிருக்கும். எப்படியோ நான் தமிழன் என்று தெரிந்து கொண்டு குதித்து தன் வீட்டுக்குள் சென்று தன் தாயாரையும் எனக்கு அறிமுகம் செய்து வைத்தாள். கீதா! ஆம் அதுதான் அவள் பெயர்–மிகவும் சமர்த்து ஹிந்தியில் சக்கைபோடு போட்ட அவள் ஹிந்துஸ்தானி சங்கீதத்திலும் மகா சூடிகை. அன்று இரவு அவள் பிரமாத மாகப் பாடி எங்களை மகிழ்வித்தாள். தமிழ் பேசுபவர்கள் அங்கு இல்லாததால் மூன்று தமிழர்களைப் பார்த்ததும் அவளுக்கு ஆனந்தம். அவள் தகப்பனார் ஸ்ரீ டி. வி. ராதாகிருஷ்ணன், சுரங்க ஊழியர்கள் பயிற்சி பள்ளியின் பிரின்ஸிபால். அவர் என் காரியாலய சகபாடியின் தம்பி என்று பின்னர் அறிந்தேன். டில்லியை விட்டுக் கிளம்பி பல தினங்களுக்குப் பிறகு முதல் தடவையாக அவர்கள் வீட்டில் நல்ல காப்பி குடித்தேன்.

காலையுண்டிக்குப் பிறகு குராஸியா சுரங்கத்தைப் பார்க்கச் சென்றோம். முழுவதும் இயந்திர மயமாக்கப்பட்டது என்று சொல்லப்படும் சுரங்கங்களில் ஒன்று. முதலில் பார்த்தது ஏற்றுமதி பிளாட்பாரம். வெட்டியெடுக்கப்பட்ட கரி டிராலி மூலம் கொண்டு வரப்பட்டு ஓர் உயர்ந்த பரணிலிருந்து கீழே நிறுத்தப்பட்டிருக்கும் ரயில் பெட்டிகளில் கொட்டப்படுகிறது.

டிராலி மின்சார என்ஜினால் இயக்கப் படுகிறது. "இந்த டிராலியில் உட்கார்ந்து கொண்டுதான் சுரங்கத்துக்குள் போக வேண்டும்" என்றார் சுரங்க என்ஜினியர். இருப்புப்பாதை மலைக்குள் செல்லுமுன் குகைக்கு முகப்பு இருக்குமே அதுமாதிரி இருந்தது சுரங்க வாயில். டிராலிப்பெட்டிகளில் சாக்குகளைப்போட்டு மெத்தென்று செய்தார்கள். டிராலியும் கிளம்பியது.

இயற்கையில் உண்டான கரிச் சுவர்கள் இரு பக்கங்களிலும் இருந்தன. மின்சார விளக்குகள் முணுக்கு முணுக்கென்று அதிக பிரகாசம் இல்லாமல் எரிந்தன. சிறிது தூரத்துக்கு ஒரு தடவை இரு பக்கங்களிலும் சந்துகள் பிரிந்தன. இது பூமிக் கடியில் உள்ள சுரங்கமாதலால் எப்படி இதை வளர்த்திக்கொண்டு போவது என்பதை என்ஜினியர் விளக்கினார்.

முதலில் சுமார் எட்டு முதல் பத்து அடி வரை அகலமாகவும் சுமார் ஆறு அடி உயரமாகவும் உள்ள கரிப்பாதைகளை வெட்டிக் கொண்டே போவார்கள். சுமார் 50 முதல் 75 அடி தூரத்துக்கு ஒரு தடவை பக்க வாட்டிலும் வெட்டுவார்கள். ஆகவே சில வருஷங்களுக்குப்பிறகு ஒரு மெயின் பாதையும் பக்கத்தில் பல சந்துகளும் உருவாகும். சுமார் நான்கடி அகலமுள்ள சுவர்கள் மட்டும் தான் எங்கும் இருக்கும். இறுதியில், எல்லா கரியையும் வெட்டியெடுத்த பிறகு இந்த சுவர்களையும் வெட்டி யெடுக்க முற்படுவார்கள். அப்பொழுது முட்டுக் கொடுத்து சுவர்களை தகர்க்க வேண்டும். "இன்னும் 100 வருஷங்களுக்குப் பிறகு இதை செய்ய வேண்டி வரும். அப்பொழுது இந்த சுரங்கத்துக்கு மேல் உள்ள மலை, பாதை, வீடுகள் எல்லாம் உட்கார்ந்து விடும்" என்றார் இன்ஜினியர்.

டிராலிகள் சந்திப்பதற்கு சில இடங்கள் இருக்கின்றன. அங்கு காவலாளிகள் உட்கார்ந்து சிவப்பு பச்சை விளக்குகள் மூலம் போக்குவரத்தை கட்டுப்படுத்து கிறார்கள். ஒரு இடத்தில் பாதை மிகவும் தாழ்வாக இருந்தது. "குனிந்து கொள்ளுங்கள், தலைக்கு மேல் மின்சாரப்பாதையின் கம்பிகள்" என்றார் டிரைவர். நாங்கள்

L/P. 1-X52 TM

இந்துஸ்தான் லீவர் லிமிடெட் தயாரிப்பு

பெட்டிக்குள் ஆமை ஓட்டுக்குள் தலையை இழுத்துக் கொள்ளுவது போல ஒடுங்கிக் கொண்டோம். இந்த சமயம் பார்த்துத் தானா பெட்டிகள் தண்டவாளத்தை விட்டு இறங்க வேண்டும்? முதல் பெட்டி சாய்ந்ததுமே நாங்கள் தாண்டிக் குதித்தோம். இரண்டாம் பெட்டியில் உட்கார்ந்திருந்த சதுர்வேதி, சர்மா முதலியவர்களுடைய வெள்ளை உடுப்புகள் மாஜி வெள்ளை ஆயின.

கரி வெட்டுவதும் இங்கு இயந்திர மூலமாகதான் வெட்டுகிறார்கள். சுமார் இரு மைல்கள் டிராலியில் பிரயாணம் செய்த பிறகு டிராலி வெளிச்சத்தை நோக்கி செல்லலாயிற்று. என்ன ஆச்சரியம்! நாங்கள் பாறைகள் சூழ்ந்த திறந்த வெளிக்கு வந்திருந்தோம். "நாம் இப்பொழுது மலைக்குள் புகுந்து மறுபுறம்வந்து விட்டோம்" என்றார் சுரங்க ஓவர்ஸியர். அன்று மத்தியானம் நாங்கள் ஜீப்பில் செல்லும் பொழுது எங்கு டிராலியில் அரை மணிப் பிரயாணத்துக்குப் பிறகு வெளிப் பட்டமோ அங்கு இரு நிமிஷத்தில் வந்திருந்தோம்.

குராஸியாவிலும் 'திறந்தவெளிவெட்டு' முறையை பல இடங்களில் ஆரம்பித்திருக்கிறார்கள். என்னதான் சமாதானம் சொன்னாலும் பொன் வாத்தின் வயிற்றைக் கிழித்துப் பார்த்த குடியானவனைப் போல்தான் இருக்கிறது சர்க்கார் கரி நிர்வாகம். பூமிக்கடியில் லட்சணமாக குடைந்து சென்று வெளியே ஒன்றும் நாசமாகாமல் செல்லுவது ஒழுங்கு. பகாசுரன் சாப்பிட்டு விட்டுப் போன இடம்மாதிரி மலைகளை தகர்த்து விட்டு அங்கங்கு பெரிய காய்ந்த ஏரியளவு பள்ளங்களை விட்டுப்போவது அன்றுடங் காய்ச்சிமுறை. செய்ய வேண்டியதையே செய்யத் தயாராயில்லை சர்க்கார் இலாகா. மின்சார விளக்குகளாகட்டும், நல்ல ரோடுகளாகட்டும் குடி தண்ணீராகட்டும், இவைகளை ஜனங்களுக்குக் கொடுப்பதில் அக்கரை இல்லாத நிர்வாகமா வெட்டியெடுத்த அதபாதாளங்களை தூர்த்து விடப் போகிறது? நான் நிச்சயம் நம்பவில்லை.

"என். ஸி. டி. ஸி."யின் சுரங்கப் பயிற்சி பள்ளியை வெளியிலிருந்து பார்த்தோம். நம் ஊர்களில் உள்ள மாட்டுபபட்டிகள் இன்னும் கவர்ச்சிகரமாக இருக்கும். பள்ளி, காரியாலயம், நிர்வாகிகள் வீடுகள் கட்டுவதற்கு பணம் அனுமதித்தாகிவிட்டது. கட்டிடங்கள் கட்ட வேண்டியதுதான் பாக்கி என்றார் முக்கிய சுரங்க என்ஜினீயர் சேகல். உண்மையில் மற்ற இரு என்ஜினீயர்களுக்கும் இவருக்குப் பெரிய வித்தியாசம் என்னவென்றால் இவர் சுயகாரியப்புலி, இவர் மாப்பிள்ளைதான் குராஸியா சுரங்க சூப்பரின்டெண்டெண்டு. முடிந்தால், அவருக்கு மிகப் பெரிய குடும்பம் இருந்தால், ஸ்ரீ சேகல் தன் குடும்பத்தினரைத் தவிர மற்ற யாரையும் இங்கு உத்தியோகத்தில் வைக்க விரும்பமாட்டார். எப்படித்தான் சர்க்கார் நிர்வாகங்களில் இப்படிப் பட்ட "பண்ணை"களுக்கு இடம் இருக்கிறதோ. தெரியவில்லை.

மறுநாள் "கொரியா—2" என்ற அபிவிருத்திக்கு பொறுக்கப்பட்ட காட்டுப் பிரதேசத்தை சுற்றி வந்தோம். இங்கு பழக்கப்பட்டவர்களைத் தவிர மற்றவர்கள் ஜீப் ஓட்டுவது அநுசிதம், ஏனென்றால் பாதை என்பது பழக்கத்தில் வரும் சோடே தவிர பார்த்து ஓட்டக்கூடியது அல்ல. மற்ற இடங்களைப்போல இங்கும் இந்திய சுரங்க பீரோவின் இளைஞர்கள் நட்ட நடுக்காட்டில் கரியுள்ள பிரதேசங்களை கண்டு பிடிக்கவேண்டி முகாம் போட்டிருந்தார்கள். எங்களை வரவேற்ற வங்காளி இளைஞர் எங்களில் மற்றவர்கள் சுருட்டுப்பிடிப்பதை மிகவும் கூர்மையாக கவனித்ததைப் பார்த்ததும் "நீங்கள் சிகரெட் பிடிப்பதுண்டோ" என்று கேட்டேன். "ஆம், இரு தினங்களாக சிகரெட் தீர்ந்துவிட்டது. எங்கள் ஜீப் ரிபேர். ஆகையால் குராஸியாவுக்கு செல்ல முடியவில்லை" என்றதும் எங்கள் கண்களில் தண்ணீர் துளிர்த்தது. உடனே பல நிருபர்கள் பாக்கெட் பாக்கெட்டாக சிகரெட் நன்கொடை கொடுத்து எங்கள் சுகவாழ்வுக்குப் பிராயச்சித்தம் செய்துகொண்டோம்.

இந்தியாவில் உள்ள கரிக்கும் இரும்புக்கும் கணக்கேயில்லை. இவைகளை எடுத்து இரும்பாகவும் எஃகாவும் மாற்றி நவநாகரீக இயந்திரங்களையும் தொழில் சாதனங்களையும் செய்து நாட்டை முன்னேற்றுவது இந்தத் தலைமுறைக்குக் கிடைத்த வாய்ப்பு. இதை பயன்படுத்திக் கொள்ளுவோம் என்பதில் எனக்குச் சந்தேகம் இல்லை. இன்று உள்ள இளைஞர் சமூகம் மற்ற நாடுகளைப் பார்த்து நாமும் அவைகளைப்போல் முன்னேறவேண்டும் என்று ஆத்திரப்படுகிறது. அமெரிக்காவைப் போலவோ இங்கிலாந்தைப் போலவோ நாம் ஆகவேண்டுமானால் உழைப்பு அவசியம். மந்திரத்தால் மாங்காய் விழுந்தது அந்தக்காலம். தந்திரத்தால் அதை சாதிப்பது இந்தக்காலம். "குஞ்சியழகும் கொடுந்தானைக் கோட்டழகும் மஞ்சள் அழகும் அழகல்ல" என்ற பழமொழியை நம் பட்டணவாசத்து இளைஞர்கள் ஞாபகப்படுத்திக்கொண்டு போகாரோ, குராஸியா முதலிய இடங்களில்உள்ள தியாகிகளை பின்பற்றினால் இன்னும் 20 வருஷங்களில் நம் நாடு முதல் நம்பர் நாடாகிவிடும் என்பதில் சந்தேகம் இல்லை.

முற்றும்

புத்தக விமர்சனம்

மஹா பக்த விஜயம்

குகப்ரியை எழுதியது

விப்கோ மலிவுப் பதிப்பு 500 பக்கங்கள்

விலை 2—25

திவிட்டில் ப்ளவர் கம்பெனி சென்னை 17

இந்நூலின் முன்னுரையில் நாமக்கல் கவிஞர் குறிப்பிடுகிறார்: 'இதைப்போன்ற ஒரு நூல் இதுவரையிலும் வெளிவந்ததில்லை' என்று. காரணம், பழைய கதைகளைப் புது முறையில், 82 வடநாட்டு பக்தர்களின் சரிதத்தை தமிழரோடு ஒன்றியவண்ணம் சுவையுடன் எழுதி வெளியிட்டிருப்பதுதான். ஆழ்வார், நாயன்மார்கள் சரித்திரங்களையே மறுமுறை படிக்கின்றோமா என்று தோன்றும் வண்ணம் தெய்வம் நம்முன் நின்று பணியாற்றுவது விளங்குகிறது. ஒவ்வொரு வீட்டுக்கும் வேண்டிய நூல் இது.

திருவிளையாடற் புராணம்

அருணா பதிப்பகம் 127, தெற்காவணி மூலவீதி மதுரை 1—50

300 பக்கங்களில் சொக்கநாதரின் 64 திருவிளையாடல்களும், திருமாலின் பத்து அவதாரங்களும் சுருக்கிக் கூறப்பட்டிருக்கின்றன. உபயோகப்படும் முறையில் எழுதப்பட்டிருக்கிறது.

பத்மாவதி சரித்திரம்

விப்கோ மலிவுப் பதிப்பு 320 பக்கங்கள்

விலை 1—80

அ. மாதவய்யர் எழுதியது, 7-ம் பதிப்பு

தமிழகத்தின் முதல் நாவல் ராஜம் ஐயரது கமலாம்பாள் சரித்திரம், இரண்டாவது நாவல் இது. சமூக சீர்திருத்தக் கொள்கைகளும், தமிழ் இலக்கியச் சுவையும் மிளிரும் இந்நூல் சென்னை சர்வகலாசாலையில் பாடப் புத்தகமாகவும் ஒரு சமயம் இருந்ததுண்டு.

பூவும் கனியும்

கலைக்கதிர் வெளியீடு, கோவை

Director of Public Instrucions, சுந்திர வடிவேலு அவர்கள் அவ்வப்போது நிகழ்த்திய மேடைப் பேச்சுக்களில் 6 பேச்சுக்களை திரு ஜி. ஆர். தாமோதரன் அவர்கள் அழகான முறையில் ஆர்வத்துடன் பிரசுரித்திருக்கிறார்கள். "குழந்தைகள் அனிச்ச மலர்கள்" "எல்லாக்குழந்தைகளும் தேற முடியும்" "தனி உணர்ச்சி குறைந்து சமூக உணர்ச்சி வளர வளரத்தான் நம் துன்பங்கள் தொலையும்" "சான்றோன் ஆக்குவதே கல்வியின் குறிக்கோள்" 'தேர்ந்த கல்வி அடக்கத்தை அளிக்கும்' "ஒழுக்கமும் கட்டுப்பாடும் தமிழின் தனிச் சொத்து" என்றெல்லாம் வற்புறுத்தியிருப்பது பாராட்டத்தக்கது.

நன்னுள் அன்பளிப்பு

வி. எஸ். கிருஷ்ணஸ்வாமி எழுதியது விலை ரூ-2

திவிட்டில் ப்ளவர் கம்பெனி தி-நகர் சென்னை 17

ஒரு நல்ல நாளுக்கு அன்போடு பரிசளிக்க என்றே எழுதப்பட்ட அழகான இந்நூலில் நல்ல முறையில் குடும்பம் நடத்தவும் பிறரோடு பழகவும் வழிகள் கூறப்பட்டிருக்கின்றன.

ஏட்டில் எழுதாக் கவிதைகள்

செ. அன்னகாமு, காந்தி கிராமம் விலை-ரூ 2

ஆதாரக் கல்வித் தொண்டர் மதுரை மாவட்டத்தில் வழங்கி வரும் நாட்டுப் பாடல்களை திரட்டித் தொகுத்து அவைகளின்சிறப்பும் தெளிவும் பாமர இலக்கியத்தின் வெற்றியும் புலப்படும்படி நமக்குத் தந்திருக்கிறார். மற்றை மாவட்டங்களில் நிலவும் நாட்டுப் பாடல்களையும் அவ்வாறே திரட்டிப் பார்த்தால் ஒற்றுமையும் தமிழ்த் தாயின் முதல் குரலும் வெளியாகும். தாகூரின் கவியில் திளைக்கும் தொண்டர் ஆதிவாசிகளின் பாடல்களிலும் மனமுவந்து ஒன்றிவிடுகிறார்.

முகில்

அசேன் ராஜ் எழுதியது விலை-ரூ. 1-25

சாந்தி நூலகம், பிராட்வே, சென்னை

'காவேரி'யில் வெளிவந்த 'முகில்' 'உதிரக்கிண்ணம்' என்ற இரு நாட்கத் துண்டுகளும் புத்தக வடிவில் வந்து நம்மை மகிழ்விக்கிறது. புரட்சிக் கருத்துக்களும் விறு விறுப்பான நடையும் சோக முடிவும் சிறந்திருப்பினும், ஆசிரியருக்கு வாழ்க்கையின் பெரும் பகுதி ஆய்ந்தனுபவிக்கக் காத்திருக்கிறது. படிப்பைப் பணமாக்க முடியாத பெண் வனப்பை விலையாக்கிக் கொள்ளும் சதை வியாபாரத்தை தடுக்க முற்படும். காதலன் சமூகத்துக்கு பலியாகத்தான் வேண்டுமா?

நடுத் தெரு மோகினி

ஏ. சுப்பையா விலை- 0-75

ஆனந்தா புக் சென்டர், சென்னை-18

'காவேரி' ஆசிரியர் திரு ராமானுஜத்துக்கு சமர்ப்பணம் செய்யப்பட்டிருக்கும் இத் துப்பறி

யும் நாவல் துளசிங்கத்தின் திறனைத் தொடர்ந்து காட்டுகிறது.

பொதுமக்களும் பொருளாதாரமும் 1—25
செல்வமும் சுதந்திரமும் 1—00

க. சந்தானம் இயற்றியவை.
புக்ஸ் (இந்தியா) பிரைவேட் லிட்
135 பவழக்காரத்தெரு சென்னை 1.

திரு சந்தானம் அவர்கள் 'கல்கி'யில் எழுதி வந்த கட்டுரைகள் புத்தக வடிவில் வெளியிடப்பட்டு பள்ளிப் பிள்ளைகளுக்கும் அரசியல்வாதிகளுக்கும் கையோடு இருக்கவேண்டிய புத்தகங்களாகிவிட்டன. சுதந்திரத்தைக் கற்றுவிட்டுக் கொடுக்காமல் இயந்திர சகாப்தம் சாத்யமில்லை என்பதும், இயந்திரம் செய்தவர்களிடமிருந்து போதிய வரி விதி வருமானம் சர்க்காருக்குகிடைக்காததாலேயே பண வீக்கம் ஏற்படுகிறதென்றும் விவசாயமும், குடிசைத்தொழிலும் நூதன விஞ்ஞான முறைகளைக் கையாண்டு வளர வேண்டும்என்றும் செல்வ தாரதம்யம்குறைந்து, மிதமாக வாழ்க்கை நடத்தி திருப்தி பெறுவதே, பாரதத்தின் லக்ஷ்யம் என்று விளக்கியிருக்கிறார்.

Great Men and Women

By

H. H. Sri Swami Sivananda
Yoga Vedanta Forest University
Rishikesh.

பண்டைய பெருமக்களைப்பற்றியும் இன்றைய பெருந்தகைகளைப்பற்றியும் எழுதப்பட்டிருக்கும் இந்நூல் எல்லோரிடமும் நற்பண்புகளைக் காட்டும் ஸ்வாமிகளின் அருளுக்கு ஓர் அடையாளம்.

Paramahamsa Yogananda — In memoriam

Self Realisation Fellowship, Los Angeles
California I—00

அழகான காகிதத்தில் அச்சடிக்கப்பட்டிருக்கும் இப்புத்தகத்தின் வாயிலாக அமெரிக்காவில் யோகமுறைகளை கற்று உணர இருக்கும் ஆவலும் ஆஸ்திகமும் வெளிப்படுகின்றன. ஆத்மஞானத்தை அமெரிக்காவில் வளர்த்த பரமஹம்ஸ யோகானந்தர் 1952-ல் பரமனடி சேர்ந்த விதமானது உருக்கமாக இந்நூலில் வர்ணிக்கப்படுகிறது.

நீண்ட அடர்ந்த கூந்தலுக்கு
ராம்தீர்த் பிராம்மி எண்ணெயை உபயோகியுங்கள்
ஸ்பெஷல் நெ. 1 (ரிஜிஸ்டர்ட்) ஆயுர்வேத முறை
கேசத்திற்கும், புத்திக்கும் சிறந்த நிகரற்ற டானிக்.

மயிர் விழுதலை தடுப்பதற்கும்
புஷ்டியுள்ள கேசம் வளரவும்
இயல்பான கருமை
பெறுவதற்கும் உதவுகிறது

பொடுகு, ஞாபக சக்தி,
நல்ல தூக்கம் யாவற்றுக்கும்
எல்லா பருவத்திலும்
எல்லோருக்கும் பயன்படும்

பெரிய பாட்டில் ரூ. 4—00 சிறிய பாட்டில் ரூ. 2—00
தபால் செலவு தனி. வி. பி. பி. அனுப்பப்படமாட்டாது.

ஆரோக்கியமாகவும், திடமாகவும் வாழ்வதற்கு யோகாஸனங்களை விவரித்திருக்கும் எங்கள் ஆஸன படத்தை வாங்கிப்பாருங்கள். ரூ. 2—50 அனுப்பினால் தபால் செலவின்றி அனுப்பப்படும். இந்த ஆஸனப் பயிற்சியை வீட்டிலேயே சுலபமாகச் செய்யலாம்.

ஸ்ரீ ராம்தீர்த் யோகாச்ரமம்
தாதர் (மத்திய ரயில்வே) பம்பாய்-14
போன்: 62899 தந்தி: "பிராணயாமம்" தாதர், பம்பாய்
சென்னை டெப்போ:- ராம்தீர்த் பிராம்மி டிப்போ, 257, தங்கசாலைத்தெரு, சென்னை-1

சங்கமம்.. "லல்லு"

அவள் உட்கார்ந்திருந்த அந்தக் குடிசையி லிருந்து பார்த்தால் நாலாப் பக்கங் களிலும் ஒரே தண்ணீராகத் தெரியும்!

ஒரு பக்கம் அலை மோதும் நீலக்கடல்.

மற்ற பக்கங்களில்...எங்கோ மேற்கிலிருந்து ஆடிப் பாடிக்கொண்டு ஓடிவந்த நதி, அலை கட லுடன் ஐக்கியமாவதற்கு முன் இரண்டாகப் பிரிந்து, ஆழ்ந்த அமைதியுடன் அவள் வாழ்ந்த குடிசையின் இரு பக்கங்களிலும் ஓடிக் கடலோடு கலந்தது. அதனால் அவளும், அவள் குடும்பத் தாரும் அவர்களைப்போல மேலும் நாற்பதைம் பது செம்படவக் குடும்பங்களும் வாழ்ந்து வந்த அந்த இடம் ஒரு தீவு போலிருந்தது. அதுவும் அந்தக்குடிசை சற்று உயரமான இடத்தில் அமைந்திருந்ததால், அங்கிருந்து எந்தப் பக்கம் பார்த்தாலும் தண்ணீர்தான் தெரியும்.

ஒரு புறம், கரையோரத்தில் வெள்ளிக் கோடுகளை அலைகளால் இழைக்கும் அமைதி யான கடல்!

மற்ற பக்கங்களில் எக்காலத்திலும், எந்நேரத் திலும் சற்றே சிவந்த நிறத்துடன் ஓடிவந்து கடலோடு கலக்கும் நதி!

சூரிய உதயத்தின் பொழுதும், அந்தி வேளை யிலும் ஆயிரமாயிரம் வண்ணங்களை வாரி இறைத்துக்கொண்டு துள்ளிக்குதிக்கும் அலைகளை அவளும் புத்தி தெரிந்த காலத்திலிருந்தே பார்த் துக் கொண்டிருக்கிறாள். கடலையும், நதியையும் மாறி, மாறிப் பார்த்துக்கொண்டிருப்பதில் அவ ளுக்கு என்றுமே சலிப்பு ஏற்பட்டதில்லை...

குப்பச்சி சிறுமியாக இருந்தபொழுதெல்லாம் இதே காட்சியைப் பார்த்துக்கொண்டு எத்த னையோ நாட்கள் நேரம் போவது தெரியாமல் உட்கார்ந்து கொண்டிருந்திருக்கிறாள். தாங்கள் இருக்கும் குடிசையை மட்டும் விட்டுவிட்டு, மரியாதையாகச் சுற்றி வளைத்துச்செல்லும் அந்த ஆற்றிடம் அவளுக்கு அளவிடமுடியாத மதிப்பு! கடலையும் நதியையும் மாறி, மாறிப் பார்த்துக் கொண்டே உட்கார்ந்து கொண்டிருப்பாள். அந்த நதி தன்னுடைய ஜீவனையெல்லாம் கொண்டுவந்து கடலில் கொட்டிக்கொண்டே இருக்கிறது. ஆனால் அதைப் பற்றிக் கொஞ்ச மும் கவலைப்படாமல் ஓங்கார நாதத்துடன் தாண்டவமாடுகிறது கடல்!...பாவம்!...இந்த ஆறு ஏன் இப்படித் தன் தண்ணீரையெல்லாம் கொண்டுவந்து கொட்டுகிறது! எவ்வளவு அடக்க ஒடுக்கத்துடன் கொண்டுவந்து கொடுக் கிறது! இந்தக் கடலுக்குக் கொஞ்சமாவது புத்தியிருக்கிறதா? ஆறு கொண்டுவந்து கொட் டும் அழகான சிவந்த தண்ணீரையெல்லாம் நீலமாக்கி எடுத்துக்கொண்டு ஒன்றும் நடக்கா ததுபோல இருந்து விடுகிறதே சமுத்திரம்! ! என்ன சமுத்திரம்!—சிறு வயதிலேயே அவளு டைய இளம் மனதில் அந்தக் கடலிடம் இன மறியாத வெறுப்பு தோன்றிவிட்டது அவளுக்கு! அந்த நேரத்தில் நதியைக்கண்டு பரிதாபப்பட் டாள்!

இவ்வாறு யோசனை செய்துகொண்டே பேசா மல் உட்கார்ந்திருப்பாள், அவளுடைய தாய்க்கு இவற்றையெல்லாம் கவனிக்க நேரமேது!

'ஏண்டி கழுதை. அந்த தரித்திரம் பிடிச்ச ஆத்தாலே என்னதான் வைச்சிருக்குது. அப்ப

டிப் பார்த்துக்கிட்டுக் கெடக்கறே' என்று திட்டு வாள். தன் தாய் அந்த நதியைத் திட்டுவதைக் அவள் விரும்பவில்லை...! 'தரித்திரம் பிடிச்ச ஆறும்! அது கிட்ட எம்மாம் தண்ணி இருக்கு! பாவம்! அவ்வளவையும் கொண்டுபோய் கட லிலே கொட்டறதே! அதுவா தரித்திரம்பிடிச்ச ஆறு! இந்த ஆறு அதையெல்லாம் சேர்த்து வைச்சா என்ன?' என்று நினைப்பாள்.

ஒருநாள் தன் தந்தையிடம் இதைப் பற்றிச் கேட்டாள். அவனுக்கு ஒன்றும் புரியவில்லை!

'என்ன...அது அப்படித்தான். ஆறு தண் ணியை எங்கே சேத்து வைக்கறது. சேத்து வைச்சி என்ன பண்றது? கடலிலேதான் கொட் டணும். எல்லா ஆறும் அப்படித்தான் செய்யுது. இதெல்லாம் என்ன அர்த்தமில்லாமெ கேக்கி றியே குட்டி' என்று அவளையே பரிகாசம் செய்துவிட்டான். ஆனல் அந்த பதில் அவளுக் குத் திருப்தியளிக்கவில்லை. அவள் மனம் மீண்டும் மீண்டும் நதியையும் கடலையுமே சுற்றிச்சுற்றி வட்டமிட்டது.

ஒருநாள் தன்னோடு விளையாடும் பக்கத்துக் குடிசைப் பையன் குப்பனும் அவளும் பேசிக் கொண்டிருந்தார்கள்.

'ஏண்டா குப்பா. இந்த ஆறு எங்கிருந்து வருது? அதுவும் நம்மைப்போல சின்னக் குழந் தையா இருந்திருக்குமா?' என்று கேட்டாள்.

'அதுவா...அது எங்கேயோ மலைமேலே யிருந்து ஓடியாருதாம்.'

'மலையிலேயிருந்து வந்தா வேகமா ஓடியா ராதா?'

'ஆமாம்...எங்கய்யா சொன்னரு......பெரிய பெரிய கல்லு, மரம் இதையெல்லாம் புரட்டிச் கிட்டு ஓடியாருமாம்'

'ஐயோ...இங்கே வரச்சே சாதுவா போயி டுதே...ஆமா... அது ஏன் இங்கே ஓடியாரணும்?'

'ஓடியாந்து...பெரிசாயி சமுத்திரத்துலே சேர வேண்டாமா?'

'ஏன் சமுத்திரத்துலே சேரணும்?'

அதற்குமேல் குப்பனல் பதில் சொல்ல முடிய வில்லை. அவனும் 'அது...அப்படித்தான்' என்று முடித்து விட்டான்.

'ஏண்டா குப்பா... நீ சமுத்திரத்துலே போயி ருக்கயா? பார்த்தாலே பயமாயிருக்கே' என்று கேட்டாள்.

'நான் கூட போனதில்லை...இந்தச் சமுத்திரம் ரொம்ப பொல்லாதாம்... இம்மாம் பெரிய ஆற்றையே சாப்பிடுதே...எத்தனையோ பெரிய, பெரிய ஆளுங்களைக்கூட சாப்பிட்டிருக்காம்... அதனலே நான் போகக்கூடாதுன்னு எங்காத்தா சொல்லியிருக்கு' என்று குப்பன் முடிக்கும் பொழுதே அவள் உடல் நடுங்கியது.

'ஆமான்டா... நீ போகாதே' என்று அவளும் புத்தி சொன்னள்...

இன்று அதை நினைத்தால் கூட அவள் உடல் நடுங்குகிறது' கடலை நிமிர்ந்து பார்த்தாள்... அமைதியான கடல்தான்... ஆனல் எவ்வளவு கொந்தளிப்பு! எத்தனை உயிர்களை, எத்தனை ஜீவன்களின் இரத்தத்தைக் குடித்திருக்கும்! பின் அது ஏன் சிவக்கவில்லை! கறைகூடப்படிய வில்லை! அந்த நீலத்தின் தூய்மைகூட மாற வில்லை.

ஒருநாள்... அவளோடு ஆடிப் பாடித்திரிந்த குப்பனைக் காணவில்லை... அந்தத்திட்டில் இருந்த குடிசையில் வாழ்ந்த அத்தனைபேரும் ஓடித் தேடினர்கள், குப்பனுடைய தாயார் மூன்று நாட்கள் இடைவிடாமல் பிலாக்கணம் பாடினள். இரவும் பகலும் தேடினர்கள். நான்காவது நாள் மூன்று மைல்களுக்கப்பால் கடற்கரையோரம் ஒரு பையனின் பிணத்தைக் கண்டுபிடித்துத் தூக்கி வந்தார்கள். அதைக் கேட்ட குப்பச்சி யின் உள்ளம் துடித்தது... வைத்த கண் வாங் காமல் கடலையே பார்த்துக் கொண்டிருந்தாள். பெரிய துரோகம் செய்துவிட்ட ஒருவனின் முகத்தைத் துருவிப் பார்ப்பது போலிருந்தது அந்தப்பார்வை...... அதில்தான் எவ்வளவு வெறுப்பு!

'கடல் குப்பனை ஏன் கொன்றது? அவன் என்ன தப்பு செய்தான்?'—அவள் உள்ளம் குமுறியது.

கடலைப் பார்த்துக் கொண்டேயிருந்தாள்.

ஒன்றுமே நடக்காததுபோல் கடல் தன் அலைகளை வீசி ஆடிப்பாடிக் கொண்டிருந்தது.

சூரியன் உதித்தான்... அஸ்தமித்தான். சந்திரன் தோன்றி வளர்ந்தான்... தேய்ந்தான். நட்சத்திரங்கள் மின்னின...உதிர்ந்தன.

சில சமயங்களில் இரவு வேளைகளில் கூட எழுந்து நின்றுகொண்டு ஓங்காரத்துடன் ஒல மிடும் கடலைப் பார்த்துக் கொண்டிருப்பாள். என்ன அமைதி! எவ்வளவு ஆர்ப்பாட்டம்! சலனமற்ற சலனம்! அமைதியற்ற அமைதி!

குப்பனின் ரத்தத்தைக் குடித்ததும் கடலின் நீல நிறம் மாறவில்லை!... அதே சலனம்! அதே அமைதி!

ஆறு தன் ஜீவனன சிவந்த நீரையெல்லாம் கொண்டு வந்து கொட்டிக் கொண்டே யிருந் தது! ஆனல் கடலின் நீலம் மாறவில்லை!... அதே சலனம்! அதே அமைதி!

* * * *

அன்று இரவும் வழக்கம் போல் கடலைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

நல்ல நிலா... எங்கு பார்த்தாலும் நீலவான்... நீலக்கடல்...

ஆனல் அந்த அழகைக்கண்டு அவள் ரசிக்க வில்லை. அவள் முகத்தில் வெறுப்பும், வேதனை

யும் தாண்டவ மாடின... அதே நேரத்தில் எல்லை யில்லா பெருங் கடலையும், மிகவும் மரியாதை யுடனும், அடக்கத்துடனும் தன் நீரையெல்லாம் காணிக்கையாகச் செலுத்திக் கொண்டிருக்கும் ஆற்றையும் பார்த்தாள், அவளையறியாமலே கடலிடம் ஒரு வகை பக்தி தோன்றும். அது அன்பின் அடிப்படையில் ஏற்பட்டதல்ல... பயத்தில் தோன்றிய பக்தி.

வெகு தூரத்தில் ஒரு படகு நில வொளியில் இருட் பொட்டுப் போலத் தெரிகின்றது. அதில் இரு ஜீவன்கள். ஆம்! அவளுடைய அண்ண னும் தகப்பனும் தான்! நல்ல நிலவு என்று மீன் பிடிக்கச் சென்று விட்டார்கள்... அவர்கள் நின்று கொண்டிருந்த கட்டுமரம் மெள்ள, மெள்ள அசைந்தாடுகிறது. வரவர அது வேக மாக அசைவது போல் தோன்றுகிறது.

அப்பா! கட்டுமரம் வேகமாக அசைந்து பேயாட்டாம் ஆட ஆரம்பித்து விட்டது!

குப்பச்சியின் இதயம் பட, பட வென்று அடித்துக் கொள்ளுகிறது!

ஏதோ ஓர் அலை... கட்டுமரத்தை வேகமாக இழுத்துச் செல்லுகின்றது.

குப்பச்சி ஆகாயத்தை அண்ணாந்து பார்த் தாள். இரண்டு நட்சத்திரங்கள் பொடியாகி விழுந்தன.

'அம்மா... அ அ அ!'

குப்பச்சி நினைவு தவறி குடிசைக்குள் வந்து விழுந்து விட்டாள்.

எவ்வளவு நேரம் சென்றதோ...

மீண்டும் எழுந்து கடலைப் பார்த்தாள்.

இருள்! எங்கும் இருள்!... அந்த இருளிலும் ஒளி காட்டும் நீலக்கடல்!... 'ஓ' வென்ற பயங்கர இறைச்சல்...

இரண்டு நாட்கள் கழித்து கரையில் தள்ளப் பட்ட இரண்டு பிணங்களைச் செம்படவர்கள் சுமந்து கொண்டுவந்து போட்டார்கள். ஒரே அழுகை... ஆனால் என்ன பயன்?

குப்பச்சி மீண்டும் கடலைப் பார்த்தாள்! தன் குடும்பத்திற்கே ஆதரவான இரண்டு ஜீவன் களையும் ஒரேயடியாக பலிகொண்டு விட்டது!

அவள் உள்ளத்தில் ஆத்திரம் பிரளயம்போல் பொங்கி எழுந்தது! ஆனால் என்ன செய்வது?

அந்தக் கடல் மீண்டும் அதே அமைதியோடு அசைந்து நெளிந்து கொடுத்துக் கொண்டது! மீண்டும் சூரிய கிரணங்கள் அதன் மடியில் ஓடி விளையாடின! மீண்டும் செம்படவர்கள் அதன் மடியில் மீன் பிடிக்கச் சென்றார்கள்! மீண்டும் அந்த நதியும் தன் நீரைக்கொண்டு வந்து கொட்டி கொண்டிருந்தது!

குப்பச்சி மட்டும் அந்தக்கடலை என்னசெய்து விட முடியும்? அதனோடு சண்டைபோட முடியுமா? அதை அடித்து விரட்டி விடத்தான் முடியுமா? அதை ஒன்றும் செய்ய முடியாது. அதன் சக்தியை அளவிட முடியாது. அதன் போக்கை, அதனுடைய ஆட்ட பாட்டங்களைக் கட்டுப்படுத்த முடியாது. அந்த தைரியத்தில் தான் அது தன் அலைகளை வாரி வீசிக்கொண்டு கம்பீரமாக நடை போடுகிறது. குப்பச்சி, வெறுப்பு கலந்த பயத்துடன் தன் கரங்களை எடுத்துக் கடலைக் கும்பிட்டாள்... ஆம்! அது தெய்வம்! அந்த தெய்வம்—அவளுக்கு உயிரான மூன்று உயிர்களின் உதிரத்தைக் குடித்துக் விட்டும் நீலம் மாறாத அந்த நீலக்கடல்; ஏன் இப்படி உயிர்களைப் பலி கொள்ளுகிறது என்று யோசித்தாள். அதற்குக் கருணையே இல்லையா? அந்தக்கடலை அகோரப் பசிவெறி பிடித்தலை யும் அரக்கனாக நினைத்தாள். ஆனால் மறுகணம் பயந்து நடுங்கினாள். பயத்தில் தோன்றிய பக்தியோடு அதைக் கும்பிட்டாள்.

ஆனால் குப்பச்சி என்ன நினைக்கிறாள் என்பதை பற்றியெல்லாம் கவலைப்படாமல் கடல் அசைந்து நெளிந்து கொடுத்தது.

சூரியன் உதித்தான்...அஸ்தமித்தான். சந்திரன் தோன்றி வளர்ந்தான்...தேய்ந்தான். நட்சத்திரங்கள் மின்னின...உதிர்ந்தன.

இரண்டு ஜீவன்களின் உதிரத்தைக் குடித்தும் அதன் நீலம் மாறவில்லை. அதே சலனமற்ற சலனம்! அமைதியற்ற அமைதி!

ஆறு தன் ஜீவனுன சிவந்த தண்ணீரையெல்லாம் கொண்டுவந்து கொட்டிக்கொண்டேயிருந்தது! ஆனால் கடலின் நீலம் மாறவில்லை!—அதே சலனம்! அதே அமைதி!

* * *

குப்பச்சி, குப்பச்சியாகவே இருந்துவிடவில்லை. குப்பம்மாளானுள்! அவள் தாய், தங்கள் குடும்பத்திற்கு ஓர் ஆண் துணை வேண்டுமென்று நினைத்தாள். குப்பம்மாளின் வாழ்வு, வீரனுடைய வாழ்வுடன் இணைந்தது.

குப்பம்மாளின் வாழ்க்கை நதியும் ஓடியது...

அவள் இதயத்திலிருந்து உணர்ச்சி ஊற்றுப் பெருக்கெடுத்து ஓடியது...இன்ப, துன்ப வெள்ளங்கள் பெருக்கெடுத்து ஓட ஆரம்பித்தன. வீரன் அவள் வாழ்வில் பல மாறுதல்களை அளித்தான். அவள் வாழ்வில் வசந்தம் வந்தது...... கோடை, குளிர் எல்லாம் வந்தன.

கால வெள்ளம் ஓடிக்கொண்டேயிருந்தது.

சில ஆண்டுகளில் அவள் தாயும் இறந்தாள். குப்பம்மாளும் ஒரு பெண்ணுக்கும், ஓர் ஆணுக்கும் தாயானுள்.

தன்னுடைய சுக துக்கங்களுக்கும், வீட்டு வேலைகளுக்கு மிடையில் அவள் முன்போல அடிக்கடி கடலைப் பார்க்க முடியவில்லை. முன்பெல்லாம் அதிக நேரம் கிடைத்தது. பார்த்தாள்...நினைத்துப் பார்த்தாள். இப்பொழுது நேரமில்லை. சற்று நேரங் கிடைத்தாலும் அதை வீரன் எடுத்துக்கொண்டு விடுகிறான். அவளுடைய வாழ்வு வேகமாக ஓடிக்கொண்டிருந்தது. அந்த வேகத்தில் அவளால் வேறு எதையும் கவனிக்க முடியவில்லை.

ஒருநாள் வீரன் குப்பம்மாளைத் தன் படகில் ஏற்றிக்கொண்டு போய்க் கடலைக் காண்பித்தான்...கடலின் அழகையெல்லாம் காட்டினான்... நல்ல நிலா...நிலவு தன் வெள்ளிக் கரங்களால் அலைகளைத் தழுவித் தூங்கச் செய்தது. வெகு தூரத்தில் கரையில் விளக்குகள் மின்னின... மேலே வானத்தில் விண்மீன்கள் வரிசை. வரிசையாக மின்னின. நடுவில் நிலவு ராஜநடை போட்டது. பக்கத்தில் கட்டுத்தளராத வீரன்... குப்பம்மாள் சுவர்க்கத்தில் இருப்பது போல் எண்ணிக்கொண்டாள். இதுபோன்ற இன்பத்தை உலகில் யாருமே அனுபவித்திருக்க முடியாது என்று அவள் எண்ணினுள்...

குப்பம்மாளின் வாழ்க்கை நதி வேகமாக ஓடிற்று. அவளுடைய வாழ்க்கை மட்டுமா என்ன? அவளுடைய கணவன் வீரனுடைய வாழ்க்கை, அவளுடைய குழந்தைகளின் வாழ்க்கை, அவள் வாழ்ந்த சேரி மக்களின் வாழ்க்கை, நாட்டு மக்களின் வாழ்க்கை...

இதைப்பற்றியெல்லாம் குப்பம்மாள் சிந்திக்கவில்லை. இப்பொழுதெல்லாம், அவள் தங்கள் குடிசையின் பக்கத்தில் ஓடும் நதியைக் கூட கவனிப்பதை விட்டுவிட்டாள்?

ஆனால் நீலக் கடல் குப்பம்மாளின் கவனத்தைத் தன் பக்கம் இழுக்க நினைத்துவிட்டது!

ஒரு நாள் வழக்கம்போல் மீன் பிடிக்கச்சென்ற வீரன் திரும்பவில்லை... திரும்பிவரவேயில்லை.

வீரன் போய் ஆறு நாட்களாகிவிட்டன. செம்படவர்கள் பல இடங்களிலும் தேடிப் பார்த்தார்கள். பிரேதம்கூட கிடைக்கவில்லை.

குப்பம்மாள் பிரமை பிடித்தவள் போலக் இரவு பகலாகக் கடலைப் பார்த்துக்கொண்டே ஆறு நாட்கள் உட்கார்ந்து விட்டாள். எல்லா வேலைகளையும் மறந்து, உலகை மறந்து நீலக் கடலில் அவள் பார்வை நிலைத்துவிட்டது.

கடலலைகளோடு போட்டியிட்டுக் கொண்டு மோதும் எண்ண அலைகள்...

அலையோசையோடு போட்டியிடும் இதயத்தின் அலறல்...

அந்தக் கடல்—குப்பன், அவள் அண்ணன், தந்தை — இன்று அவள் கணவன் — அத்தனை ஜீவன்களையும் ஏற்றுக்கொண்டு, அமைதி குலையாமல் அசைந்து, நெளிகிறது.

ஆறு நாட்களாக, இருந்த இடத்தைவிட்டு அசையாமல் அவள் கடலையே பார்த்துக்கொண்டிருந்தாள்.

சூரியன் உதித்தான்... அஸ்தமித்தான். சந்திரன் வளர்ந்தான்... தேய்ந்தான். நட்சத்திரங்கள் மின்னின... உதிர்ந்தன.

இன்னும் கடலின் நீல நிறம் மாறவில்லை. அதே சலனமற்ற சலனம்! அமைதியற்ற அமைதி!

ஆறு தன் ஜீவனுன சிவந்த நீரையெல்லாம் கொண்டுவந்து கொட்டிக்கொண்டேயிருந்தது! ஆனல் கடலின் நீலம் மாறவில்லை! அதே சலனம்! அதே அமைதி!

* * *

ஏழாவது நாள் காலை.

குப்பம்மாளுடைய ஒரே மகன், காத்தான், உள்ளே நுழைந்தான்.

குப்பம்மாள் அவனையே வெறிச்சிட்டுப் பார்த்தாள்.

அவன் எதையோ தேடிக் கொண்டிருந்தான்.

'ஏய்... மாராத்தா... அந்தக் கயிறு எங்கே என்று சத்தம் போட்டான்.

உங்கள் அழகுக்கு
அழகு செய்பவை!
டி.ஸி.எம். ஸில்க் ரகங்கள்
வழவழப்பானவை, உடலில் எழிலுடன் படிந்து கொள்பவை, வெகு நாட்கள் நீடித்திருப்பவை...டி.ஸி.எம். நைலான், ஸில்க், ரேயான், ஜார்ஜெட், க்ரேப், டபெட்டா முதலியவை அழகான பிரின்டுகளுள்ளவையும் ப்ளெயின் ரகங்களும் விதவித நிறங்களில் கிடைக்கின்றன...அருகாமையிலுள்ள டி.ஸி எம். கடையில் உங்களுக்குப் பிடித்தமானவைகளைத் தேர்ந்தெடுங்கள்.
டி
ஸி
எம்
எல்லா முக்கிய
நகரங்களிலுமுள்ள பிரபல
டி.ஸி.எம். ரீடெய்ல் ஸ்டோர்களிலும்
கிடைக்கின்றன
சென்னையில் :
213, கோவிந்தப்ப நாய்க் தெரு.
தி டெல்லி க்ளாத் அண்டு ஜெனரல் மில்ஸ் கோ. லிட்., டெல்லி

'அந்த மூலைக் கட்டுலே கட்டி வைச்சிருக்கு. பாரு' என்று குரல் கொடுத்துக் கொண்டே, அவன் தங்கை மாராத்தா உள்ளேயிருந்து வந்தாள்.

'சீக்கிரம் எடு அதை. இப்பவே நான் போக ணும்' என்று அவசரப் படுத்தினன் அவன்.

'ஏண்டா காத்தான். உங்கப்பனோடை பொணம் கரைக்கு வந்தா, கட்டி இழுத்துப் போடகூட ஓர் ஆள் இல்லாமே 'நீ போறீயே. என்ன அவசரம்'— எங்கோ வெகு தூரத்திலிருந்து பேசுவது போலிருந்தது குப்பம்மாளின் குரல். அவளுக்கு மேல் மூச்சு, கீழ் மூச்சு வாங்கியது. தொண்டை யெல்லாம் கட்டிப் போயிருந்தது.

'ஆறு நாளாப் பாத்தாச்சு. இனிதான் வரப் போவுதாக்கும். இனி காத்து கிட்டிருந்தா வயித்துப் பொழப்பு நடக்காது. இன்னிக்கு நான் போறேன்' என்று சொல்லிக் கொண்டே, கயிற்றையும், வலையையும் எடுத்துத் தோளில் போட்டுக் கொண்டான் அவன்.

'ஏண்டா... நான் சொல்றதைக் கேளுடா... இன்னிக்கு நீ போவ வேண்டாம்... இனிமே நீ போவவே வேண்டாம்... எனக்கு ஒரே பிள்ளை... உனக்கு ஏதாச்சும்...' குப்பம்மாள் விட்டு, விட்டுப் பேசிக் கொண்டே யிருந்தாள்.

ஆனல் அவன் அதைக் காதில் வாங்கிக் கொள்ளவேயில்லை. பேசாமல் வெளியில் போய் விட்டாள்.

'ஏண்டியாத்தா உனக்குப் புத்திகித்தி ஈக்குதா. போறவனை நல்ல வார்த்தை சொல்லியனுப் பாமே... உனக்கு ஏதாவது ஆச்சுன்னுன்னு ஏன் பெலாக்கணம் பாடறே' என்று மகள் தாயின் மேல் சீறி விழுந்தாள்.

குப்பம்மாளின் கவனமோ கடலின் மீது நிலைத்து விட்டது. அவள் கற்சிலை மாதிரி நின்று விட்டாள்.

சற்று நேரம் கழிந்தது. என்ன தோன்றிற்றோ என்னவோ. 'ஏய் மாராத்தா' என்று கூப்பிட் டாள். பதில் இல்லை. 'ஏய் மாராத்தா, என்று மீண்டும் கூப்பிட்டாள்.

'என்னடியிது... தரித்திரம்... சும்மா, சும்மா கூவின ஊட்டுவேலையில்லியா' என்று அலுத்துக் கொண்டே மகள் வந்தாள்.

'மாராத்தா... சின்ன சட்டியிலே ரவ கூழு ஊத்தியா... நான் போயி அவன் கிட்ட கொடுத்துப் பார்த்துவிட்டு வாரேன்!' என்று சொல்லிக்கொண்டே குப்பம்மாள், பக்கத்தில் கிடந்த தடி ஒன்றை எடுத்து ஊன்றிப் பிடித்துக் கொண்டாள்.

மகளும் தன் தாய் வீட்டை விட்டுப் போனல் போதும் என்ற நினைப்பில் ஒரு சட்டியில் கொஞ்சம் கூழை ஊற்றி எடுத்துக்கொண்டு வந்து அவளிடம் கொடுத்து, 'போயி... நல்ல பேச்சு சொல்லிவிட்டு வா... போ... போ... அது போயிடப் போவுது' என்று வழியனுப்பி வைத்தாள்.

குப்பம்மாளால் நடக்கக்கூட முடியவில்லை. தன் சக்தியை யெல்லாம் திரட்டிக்கொண்டு வேகம்வேகமாக நடந்தாள். அந்த மணலில் வேகமாக ஓடினள். வெளியே மணற்காற்று பலமாக அடித்துக் கொண்டிருந்தது.

ஆனல் அவள் கரையோரம் போவதற்குள் படகுகள் புறப்பட்டு விட்டன. அவனும் மற்றும் சிலரும் கூப்பிடு தூரத்திற்கு அப்பால் போய் விட்டார்கள்.

'காத்தான்... டேய் காத்தான்' என்று அடி வயிற்றிலிருந்து கத்தினள். ஆனல் 'ஓ' வென்ற பேரிரைச்சலுடன் எழுந்த அலை ஓசையில் அவள் குரல் எங்கே கேட்கப்போகிறது!

அவன் போய்விட்டான்! அவள் தள்ளாடிக் கொண்டே குடிசைக்குத் திரும்பிவிட்டாள்.

குடிசையினுள் வந்து அவளுடைய இடத்தில் உட்கார்ந்துவிட்டாள்.

'ஏண்டியாத்தா, அதைப்பாத்தியா' என்று மகள் கேட்டாள்.

பதிலே இல்லை!

'அடியாத்தா. வாயைத் தொறந்து சொல் லேன். ஏன் இப்படிப் பேய்புடிச்சாப்போலே குந்திக் கிடக்கிறே. அதுக்கு என்ன ஆச்சு. பாத்தியா' என்று அவளைப்பிடித்து உலுக்கினள்.

'இன்னிக்கு என் தலை வெடிச்சுடும்' என்று ஏதோ அர்த்தமில்லாமல் உளறினள் குப்பம்மாள்.

மாராத்தா கடலின் பக்கம் கூர்ந்து பார்த்தாள்.

'அப்பா' அதுக்குத்தான் ஏதாச்சுமோன்னு பயந்தே போனேன்' என்னு மாராத்தா பெரு மூச்சு விட்டாள்.

'இன்னிக்கு என் தலை வெடிச்சுடும்டி... வெடிச் சுடும்' என்று பயங்கரமாகக் 'கட கட' வென்று சிரித்துவிட்டு கடலையே வெறிச்சிட்டுப் பார்த் தாள் குப்பம்மாள்.

'ஆத்தா... இங்கப்பாரு டீ' என்று மாராத்தா அவளைப் பிடித்து உலுக்கினள்.

'அதோ... அதோ... உங்கப்பன் வாரான்... உங்கப்பன் வாராண்டி'

மாராத்தா சுற்றும் முற்றும் பார்த்தாள். யாரையும் காணவில்லை.

'அப்பன... அது போயிதான் ஆறு நாளாச்சே உனக்கு புத்திமாறிப் போச்சுடி' மாராத்தா கதறினள்.



‘போயிட்டானா... இப்ப என் புள்ளையும் போச்சு... ஆமா... இன்னிக்கு அவன் போயிடுவான்... அந்தப்பிசாசு அவனை விடாது... அது என் குப்பனைச் சாப்பிட்டுது... என் அப்பனை, அண்ணனை, புருசனை அத்தனை பேரையும் சாப்பிட்டது... பக்கத்துக் குடிசையிலே இருந்த கட்டையனை, மூக்கனை சாப்பிட்டுது... சொக்காத்தா புள்ள வீங்கலானை சாப்பிட்டுது... அதோ... அதோ... கிழக்கரீச்சு அழுது... கேளு கேளு... ஆமாம்... அவ புள்ளை ராக்கி... இப்பத்தான் அவனும் காத்தானோடே போனான்... அவனையும் தின்னுப்பிட்டுது.

வெளியில் யாரோ சிலர் நடந்துவரும் சப்தம் கேட்டது.

மாராத்தா வெளியே ஓடிப்போய்ப் பார்த்தாள்.

ஆம்! அவர்கள் காத்தானைத் தூக்கிக்கொண்டு வருகிறார்கள்.

‘என்ன... அவனும் போயிட்டானா’—அவளுக்கும் அழுகை வரவில்லை.

பிணத்தைக்கொண்டு போய்க் குடிசையினுள் போட்டார்கள்.

குப்பம்மாள் மெதுவாக எழுந்து பிணத்தின் தலைப்பக்கம் வந்து உட்கார்ந்தாள், சற்று நேரம் பேசவேயில்லை. பிணத்தையே பார்த்துக்கொண்டிருந்தாள்.

‘இதோடு முடிஞ்சு போச்சு... இனி நான் எதுக்கும் வேதனைப்பட வேண்டாம்... இதோடு முடிஞ்சு போச்சு’ என்று முணுமுணுத்தாள்.

பிணத்தைத் தூக்கி வந்த செம்படவர்கள் பேசாமல் நின்றுகொண்டிருந்தார்கள்.

‘இனிமே நான் அந்தப் பிசாசைப் பார்த்து பயப்படவேண்டாம். இனி எங்கிட்டேயிருந்து எடுக்க ஒண்ணுமில்லை...நான் கொட்டவேண்டி

யதை யெல்லாம் கொண்டு கொட்டிவிட்டேன்... வேதனை முடிஞ்சு போச்சு...எல்லாம் முடிஞ்க போச்சு!—அவளுக்குப் பைத்தியம் பிடித்து விட்டதாக மற்றவர்கள் நினைத்தார்கள்.

அவள் எழுந்து நின்று கடலைப் பார்த்தாள்... இன்னும் அதன் நீல நிறம் மாறவில்லை!

ஆற்றின் பக்கம் திரும்பினாள். இன்னும் அது தன் ஜீவத் தண்ணீரையெல்லாம் கொண்டு கொட்டிக்கொண்டே யிருந்தது!

மீண்டும் கடலைப் பார்த்தாள். அதன் நீல நிறம் மாறவில்லை!

குப்பம்மாளுக்கு ரகஸ்யம் புரிந்துவிட்டது. அவள் பெரிய ஞானியில்லை. ஆனால் கடந்த நாற்பது ஆண்டுகளாக அவள் மனதில் விடு படாமல் கிடந்த புதிர் விடுபட்டுவிட்டது.

அவள் கடலையும், நதியையும் மாறி மாறிப் பார்த்தாள்...

அவள் கண்முன் ஓடுவது ஒரு நதியல்ல... மனித நதிகள் பல துள்ளிக் குதித்துக்கொண்டு எழுந்து, ஆடிப்பாடி, அடங்கி ஒடுங்கி ஓடுகின்றன...உணர்ச்சிக் கொந்தளிப்புகள், வெறுப்புச் சூழ்ச்சிகள்· காதல் ஓட்டங்கள்; பணம், புகழ் பசி இவற்றில் ஏற்பட்ட வெறியாட்டங்கள் ஜாதி, மத, அரசியல் புயல்கள்; உனது; எனது என்னும் பேதங்கள்... இத்தனை கோலாகலங்களுடன் நதிகள் ஓடிக்கொண்டேயிருக்கின்றன... எத்தனை விதவிதமான வண்ணங்கள்...கறுப்பு, வெள்ளை, மஞ்சள், மாநிறம்—இப்படி வகைவகையான இனங்கள்...அவைகளும் உணர்ச்சிக் கொந்தளிப்புக்குத் தக்கபடி மாறி, மாறிக் காட்சி அளித்துக்கொண்டு ஓடுகின்றன... ஓடிக்கொண்டேயிருக்கின்றன...எல்லாம் இறுதியில் கடலில் சென்று கலக்கத்தான். அந்தக் கடலைச்சென்று அடைவதற்குத்தான் அவைகள் துடித்துக் கொண்டு ஓடுகின்றன... அந்தக்கடல்தான் அவைகளின் தாய்; மூலாதாரம்; பிறப்பிடம்... அந்த நதிகளின் வாழ்க்கை லட்சியமே கடலை அடைவதுதான். அந்த நீலக் கடலில் ஒன்றிக் கலப்பதில்தான் எத்தகைய இன்பம்! எந்த நிறத்துடன் சென்றாலும் அதைத் தன் நிறமாக மாற்றும் ஆற்றல் அந்த நீலத்திற்குத்தான் உண்டு. அது எல்லையற்றது; ஈடு இணையற்ற இன்பத்தை அளிப்பது; எதனாலும் மாறாதது... அது மாறாமல் இருப்பதால் தான் உலகம் வாழ்கிறது... அது தான் இறையின் வடிவம்... நீலவான்... நீலக்கடல்... அது சக்தியின் வண்ணம்... சிவனும்—அங்கே ஐக்கியமாக வேண்டியது தான். அளவிட முடியாத ஆழங்காண முடியாத அனைத்தையும் தன்னுள் கொண்ட நீலத்துடன் ஐக்கியமாவதுதான் வாழ்வின் லட்சியம்...அது தான் இயற்கை... பிறந்த உயிர் அனைத்தும் அதை அடையத்தான் வேண்டும்... அதற்காக மனம் சஞ்சலப்படுவது பேதமை.

குப்பம்மாளின் மனதில் நாற்பதாண்டுகளாக மோதிய எண்ண அலைகள் தணிந்தன, அவள் உள்ளத்தில் ஆழங்காண முடியாத அமைதி ஏற்பட்டு விட்டது. சஞ்சலம் ஓய்ந்து சாந்தி பிறந்து விட்டது. அவள் உள்ள உணர்ச்சிகளும் கடலுடன் சங்கமமாகும் நதியின் போக்கைப் போல் அடங்கி ஒடுங்கி, ஆழ்ந்து நெளிந்து ஓட ஆரம்பித்து விட்டன.

மிகவும் பயபக்தியுடன் கையெடுத்து நீலக் கடலைக் கும்பிட்டாள். இப்பொழுது அது பயத்தினால் தோன்றிய பக்தியல்ல. அன்பில் விளைந்த ஆழ்ந்த பக்தி! எல்லையற்ற நீலக்கடலில் அவள் எல்லையற்றவனைக் கண்டாளோ என்னவோ!

எவ்வளவு நேரம் கழிந்ததோ... தெரியாது,

சுய நினைவு பெற்றபின் குடிசையினுள் பார்த்தாள். யாரையும் காணவில்லை.

அவளாகவே தன் கணவனுடைய வேஷ்டி ஒன்றை எடுத்து மகனுடைய பிரேதத்தை மூடினாள், சற்று நேரம் அவனுடைய முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் கண்கள் ஒரு சொட்டுக் கண்ணீரைக் கூடச் சிந்தவில்லை.

பிறகு எழுந்து தள்ளாடிக் கொண்டே வெளியே சென்று விட்டாள்.

மறுநாள் காலை செம்படவர்கள் குப்பம்மாளின் பிரேதத்தைக் கடற்கரையிலே கண்டெடுத்துத் தூக்கிச் சென்றார்கள்.

அவள் மகள் அதைக் கட்டிக்கொண்டு பிலாக்கணம் பாடினாள்.

நீலக்கடல் அசைந்து, நெளிந்து கொடுத்தது.

சூரியன் உதித்தான்... அஸ்தமித்தான். சந்திரன் தோன்றி வளர்ந்தான்... தேய்ந்தான். நட்சத்திரங்கள் மின்னின... உதிர்ந்தன.

கடலின் நீலம் மாறவேயில்லை. அதே சலனமற்ற சலனம்! அமைதியற்ற அமைதி!

ஆறு தன் ஜீவனான சிவந்த நீரையெல்லாம் கொண்டுவந்து கொட்டிக்கொண்டே யிருந்தது. ஆனால் கடலின் நீலம் மாறவில்லை! அதே சலனம்! அதே அமைதி!

விஞ்ஞானத் துணுக்குகள்

நா. கி. நாகராசன்

அணுசக்தி ஆகாயக் கப்பல்

ஆகாய விமானம் பழக்கத்துக்கு வருமுன் ஆகாயக் கப்பல்கள் பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு பறந்து சென்றன. பல காரணங்களால் ஆகாயக் கப்பல் போக்குவரத்து சுமார் இருபது ஆண்டுகட்குமுன் நின்று போயிற்று. இரண்டாம் உலகப் போரின் போது கடலுக்குள் செல்லும் நீர் மூழ்கிகளையும், தொலைவில் பறந்து வரும் எதிரி விமானங்களையும் கண்டு பிடிப்பதற்கு இங்கிலாந்திலும், அமெரிக்காவிலும் ஆகாயக் கப்பல்களைப் பயன் படுத்தினார்கள். வேவு வேலைக்கும் அது அப்போது பயன்பட்டது. குட்யியர் டயர் கம்பெனியார் இப்போது அணுசக்தியால் இயங்கும் ஆகாயக் கப்பல் ஒன்றை அமைத்து வருகிறார்கள். இது 1963-ம் ஆண்டுக்குள் பழக்கத்துக்கு வரும் என்று அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். டேக்ரான் (Dacron) என்னும் சேர்க்கை இழையால் துணி நெய்து அதன் மேல் ரப்பரைப் படியச்செய்து இதன் வாயுப் பையை அமைப்பார்கள். இது சுமார் 540 அடி நீளம் இருக்கும். இதன் அடியில் மனிதரை ஏற்றிச் செல்லுவதற்கு 86 அடி நீளமுள்ள கூண்டு இருக்கும். இதில் இரு தளங்கள் இருக்கும். இவற்றில் 24 மனிதர்கள் தமது சாமான்களோடு பிரயாணம் செய்யலாம். இது பத்தாயிரம் அடி உயரத்தில் மணிக்குச் சுமார் 80 மைல் வேகத்தில் பறக்கவல்லது. இதில் ஓரிடத்தில் ஏறிக்கொண்டு கீழே இறங்காமலே உலகெங்கும் சுற்றி வரலாம்.

பூஞ்சையை நஞ்சாக்கலாம்

மழை நாட்களில் எலுமிச்சம் பழத்தின் மேல் படியும் பூஞ்சையை நீங்கள் பார்த்திருக்கலாம். அதை போன்ற சிற்றுயிர்களில் பல வகைகள் உள்ளன. அவற்றுள் சில காதுவலி, சரும ரோய் முதலியவற்றை விளைவிக்கும். இவை உடலுக்குள் ஊசி மூலம் செலுத்தினால் ஒருவிதத் தொல்லையும் ஏற்படுவதில்லை. ஆனால் கொடிய நோயை விளைவிக்கும் சிற்றுயிர்களாக மாற்றுவதற்கு விஞ்ஞானியொருவர் ஒரு முறையைக் கண்டுபிடித்திருக்கிறார். மூன்றுவகைப் பூஞ்சைகளை அவர் சிறு சவ்வுப் பைகளில் வைத்து முயல்களின் உடலுக்குள் பொருத்தி மூடிவிட்டார். பைக்குள் இருக்கும் பூஞ்சை வெளிவர முடியாது. ஆனால் அதற்கு வேண்டிய உணவு ஊட்டப் பொருள்கள் மட்டும் பையின் வழியே உள்ளே செல்லலாம். உடலின் ஊட்டத்தை உட்கொண்டு பூஞ்சைகள் வளர்ந்தன. அதோடு சுமார் இருபது நாட்களில் அவை ஒவ்வொன்றின் வடிவமும், தன்மையும் அறவே மாறிவிட்டது இவற்றை வெளியே எடுத்து சிறிதளவை வேறு விலங்குகளின் உடலில் அந்த விஞ்ஞானி செலுத்தினார். அப்போது அவ்விலங்குகளுக்குக் கொடிய நோய் கண்டது. அவற்றின் அக உறுப்புக்கள் அழிந்து போயின. எவ்வித சிகிச்சை முறையாலும் இம்மர்ம நோயைக் குணமாக்க இயலவில்லை. இந்த நோயை விளைவித்த சிற்றுயிரை ஒரு விலங்கின் உடலில் இருந்து மற்றோர் உடலில் செலுத்தினால் அந்த இரண்டாவது விலங்குக்கு இன்னும் கொடிய நோய் ஏற்பட்டது. தீங்கற்ற சிற்றுயிர்களை இவ்வாறு மாற்றி, புத்தம் புது நோய்களைப் பரப்ப முடியும் என்று அவ்விஞ்ஞானி கருதுகிறார். உலக நாடுகளுக்கிடையே பகைமையுணர்ச்சி மறையும் என்பதற்கு எவ்வித அறிகுறியும் இல்லாத இந்நாளில் இத்

தகையதொரு விஞ்ஞான சாதனையால் எத்தகைய பயங்கரங்கள் தோன்றக் கூடும் என்பதை எளிதில் ஊகிக்கலாம். எவ்விதத் தீமையையும் விளைவிக்காமல் அப்பாவி களாக உலகில் திரியும் சிற்றுயிர்கள் சில சமயங்களில் உருமாறிக் கொடிய நோய் களை விளைவிக்கும் அரக்க உயிர்களாக ஆகி விடுவதுண்டு. இது எவ்வாறு நிகழ்கிறது என்று அறிய இவ்வாராய்ச்சி உதவலாம்.

தட்ப வெப்பமும் உடல் நிலையும்

ஓர் இடத்தின் வெப்ப நிலைக்கும், அங் குள்ளவர்களது உடல்நிலைக்கும் நெருங்கிய தொடர்புள்ளது. மனிதர்களே அல்லாமல் பசு முதல் பாக்டீரியா வரை எல்லா உயிர் களையும் வெப்ப தட்ப நிலை வெகுவாகப் பாதிக்கிறது. குளிர்காலத்தில் சளியும் காய்ச்சலும் அதிகமாவது அனைவரும் அறிந்ததே. நேற்று ஒரு டாக்டரிடம் பேசிக் கொண்டிருந்தேன். "பருவ மழை தொடங்கி முடியும் வரை மூன்று மாதங்கள் பம்பாய் நகரில் எங்களுக்கு "சீஸன்" (Season)" என்று அவர் சொல்லிக் கொண்டார்! என் மனைவியை அடுத்து மகளுக்குச் சளி சுரம் வந்ததால் ஒரு வாரமாக என் வீட்டுக்கு வந்ததில் அவர் அவ்வளவு நெருங்கிய நண்பராகி விட்டார்! மேனடுகளில் கோடையின் துவக் கம் இளம்பிள்ளை வாதம் என்ற கொடிய நோயின் தாண்டவத்துக்கும் துவக்கம் ஆகும். வாத நோய்களுக்கு மழையும் குளிரும் கொண்டாட்டம் என்பது இந்த உபாதைகள் உள்ளவர்களுக்குத் தெரியும். நீரிழிவு, ரத்தக்குழல் இருதய நோய்கள் போன்ற வேறுபல நோய்களும் வெப்ப தட்ப நிலையை யொட்டி அதிகமாகிக் குறை கின்றன என்று ஒரு மருத்துவர் பல ஆண்டுகள் ஆராய்ச்சி நடத்திக் கண்டு பிடித்திருக்கிறார். உடலுக்குள் உள்ள சிறு சுரப்பிகள் சில ரசாயன நீர்களை வெளி விடுகின்றன. ஹார்மோன்கள் என்னும் இந்நீர்கள் உடல்நிலையைக் கட்டுப்படுத்து கின்றன. வெப்ப தட்ப நிலையையொட்டி இச்சுரப்பிகளின் இயக்கம் பாதிக்கப் படுகிறது என்றும், இதனால் உடல்நிலை மாறுபடுகிறது என்றும் அவர் கூறுகிறார்.

மிகையான வெப்பத்தையும், கடுங் குளிரையும் தவிர்க்க மானிடன் இப்போது முறை கண்டு பிடித்திருக்கிறான். வீடுகளில் கூட "ஏர்-கண்டிஷனிங்" செய்து கொண்டு செல்வந்தர் வாழ்கிறார்கள். இதனால் சவுகரி யம் இருப்பதென்னவோ உண்மைதான். ஆனால் இத்தகைய செயற்கைச் சூழ்நிலை யில் வாழும் மானிடன் வருங்காலத்தில் புதுவகையான சுவாசகோச, இருதய நோய்களுக்கு ஆளாகக்கூடும் என்று அம் மருத்துவர் எச்சரிக்கிறார். இயற்கையை ஒருவகையில் வெற்றி கண்டால் அது நம்மை வேறொரு வகையில் பழிவாங்கக் காத்திருக்கிறது.

களிமண் காந்தங்கள்

இரும்பு, நிக்கல் போன்ற மிகச் சில உலோகங்கள் காந்தத் தன்மை உள்ளவை. தூய உலோகங்களைவிடச் சில உலோகக் கலவைகள் திறமையான காந்தங்களாக இயங்கும் என்று தெரிய வந்தபின் புதுக் காந்தங்கள் வழக்கத்துக்கு வந்தன. இப்போது இவற்றைவிட வலிவான காந்தத் தன்மையுள்ள கலப்புப் பொருள் ஒன்றைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். சாதாரணக் களிமண்ணில் உள்ள இரு ரசாயனப் பொருள்களின் கலப்பு இது. இரும்பு ஆக்ஸைடு, பேரியம் ஆக்ஸைடு ஆகிய இருபொருள்கள் இவை. இவ்விரு பொருள்களையும் தக்க விகிதத்தில் கலந்து மிகையாகச் சூடேற்றி அழுத்தினால் இக் கலவை பீங்கானை யொத்த கடினமான பொருளாகமாறும். இப்பொருளை ஆக்கும் போதே வலிவான மின்னோட்டத்தின் உதவியால் இதை காந்தத் தன்மையுள்ள தாகச் செய்து விடலாம். இரும்பினாலான காந்தத்தைப் போல் இது மும்மடங்கு காந்த வலிமையுள்ளது. இரும்புக் காந்தங்களின் காந்தத்தன்மை காலப் போக்கில் மறைந்துவிடும். பல மாதங்கள் வரை இப்புதுவகைக் காந்தங்களின் தன்மை மாறுவதில்லை. ஒரு காந்தத்தைச் சூடேற்றினால் அதன் தன்மை அறவே போய்விடும். ஆனால் பீங்கானை யொத்த இப்புதுப் பொருளோ உயர்ந்த சூட்டிலும் தனது தன்மையை இழப்பதில்லை. வெப் பத்துக்கு உள்ளாகும் அளவு கருவிகளிலும், மின்சாரக் கருவிகளிலும் இவை பயன்படும் என்று எதிர்பார்க்கிறார்கள்.

பறவை நாகரீகம்

பறவை உலகில் ஆண் இனம் எப் போதும் அழகானது. சேவலின் கொண் டையும் வண்ண வண்ணமான சிறகுகளும் பெட்டையின் கருத்தைத் தன்பால் இழுப் பதற் கென்றே அமைந்தவை. அழகிய சிறகைக் காட்டித் தன் காதலியின் அன்பைப் பெற முயலும் பறவையைவிட,

நாளொரு மேனியாய், பொழுதொரு வண்ணமாய்...
ரெக்ஸோனு
சோப்
உங்கள் சருமத்தை
எழிலோங்கச் செய்கிறது
ரெக்ஸோனு சோப்பினுல் நீங்கள் முகங் கழுவும் ஒவ்வொரு முறையும்... உங்கள் சருமம் அதிக மென்மையுடனும், மழமழப்புடனும் மிளிரும்; காரணம், ரெக்ஸோனுவில் அடங்கியுள்ள 'கேடில்'. எழிலூட்டும் பற்பல எண்ணெய்கள் இணைந்த விசேஷத் தைலமாகிய 'கேடில்' உங்கள் சருமத்திற்கு ஊட்டமளிக்கிறது. ரெக்ஸோனுவின் மிருதுவான நுரையினுல் நன்ருகத் தேய்த்துக் குளித்து, உங்கள் சருமம் நாளொரு மேனியாக எழில் மிகுந்து விளங்குவதைப் பாருங்கள்!
உங்கள் எழிலுக்கு ... ரெக்ஸோனு
Rexona
Rexona
BLENDED WITH CADYL
RP. 158-X52 TM

பளபளப்பான கண்ணாடித் துண்டையோ, நல்ல நிறமுள்ள பழத்தையோ அன்பளிப்பாகக் கொடுத்துத் தன் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளும் பறவை அறிவிற் சிறந்தது என்று விலங்கு நூலறிஞர் ஒருவர் கூறுகிறார். ஒரே இனத்தைச் சேர்ந்த பல பறவைகளை அவர் ஆராய்ந்து இந்த முடிவுக்கு வந்திருக்கிறார். காதலிக்கு அன்பளிப்புக் கொடுத்தல் பரிணாம வழியில் முன்னேற்றத்தைக் குறிக்கிறது. மனிதனுக்கு அழகிய சிகையும், ஆடை அணியும் இருந்து விட்டால் மட்டும் அவன் காதல் விளையாட்டில் வெற்றி பெற்றுத் தனது ஆசை நாயகியை அடைந்துவிட முடியுமா?

உயரிய பொருள்களை அன்பளிப்பாகக் கொடுத்தும், பிற வகைகளிலும் அவளது நல்லெண்ணத்தை அவன் சம்பாதித்துக் கொள்ள வேண்டும். பறவை உலகிலும் இதைப் போலவே நாகரிகமான பெண்கள் அன்பளிப்பையே மேலாகக் கருதுகிறார்கள் போலும்! பறவை இனக் காதல் என்பது விலங்கு நூலில் மிக ரசமான பகுதி. இது வரை தெரியாததொரு ரசமான உண்மையை அவர் வெளியிட்டிருக்கிறார். சிறியதொரு வகைப் பறவையினம் உண்டு. அவ்வினத்தில் ஆண் பறவை கொடிகளையும் பாசிகளையும் கொண்டு அழகிய கூண்டொன்றைப் பிணைந்து அதன் வாயிலில் நத்தைக் கூடு, பல நிறமுள்ள நூல் துண்டங்கள், பளபளப்பான பிசின் துண்டுகள் முதலியவற்றை வைத்து அலங்கரித்து விட்டு உள்ளே காத்திருக்கும். பெண் பறவை கூட்டைக் கண்டு உள்ளே வந்ததும் ஆண் பறவை சிறு குஞ்சைப் போல் கீழே படுத்துக்கொண்டு, இறக்கைகளை அடித்துக்கொண்டு வாயை திறந்து மூடும். இரைக்காகக் கெஞ்சும் சிறு குஞ்சைப் போலவே அதன் நடிப்பு இருக்கும். வயிற்றுப் பசிக்காக அல்லாமல் காதற் பசிக்காக ஏங்கி இவ்வாறு செய்யும் ஆணின் மேல் பெண்ணுக்கு இரக்கம் பிறந்து அது ஆணின் காதலை ஏற்கும். குழந்தைத் தனம் மிகுந்த ஆணின் மேல்பெண்களில் ஒரு சாரார் தம்மையும் மீறி அன்பு செலுத்துவர் என்று உளநூலோர் கூறுவர். பறவை உலகிலும் இதைப்போன்றதொரு வகை அன்பு உண்டுபோலும்.

இன்றல்ல! நேற்றல்ல!

50 ஆண்டுகளாகப் புகழ்பெற்றது

ஆர். எஸ். பதி மருந்து

(Regd.)

தலைவலி, ஜலதோஷம், கைகால்வலி, ஜுரம் முதலிய வியாதிகளுக்குக் கைகண்ட மருந்து.

இது வீட்டில் இருந்தால் உங்கள் அருகே ஒரு டாக்டர் இருப்பது போலாகும்.

புட்டி 1-க்கு விலை 75 காசுகள்

எங்கள் இதர தயாரிப்புகளுக்கு விரிவான இலவச கேட்லாக் வேண்டுவோர் எழுதவும்.

தயாரிப்பவர்கள்:

ஆர். எஸ். பதி அண்டு கோ

(ஸ்தாபிதம்: 1909)

த. பெ. எண் 99 ... 214 & 215 மேலமாசிவீதி, மதுரை

திருச்சி, தஞ்சை இவ்விரு ஜில்லாக்களில் உள்ளவர்கள் மட்டும் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதுக

மெஸர்ஸ் சுகுமாரி ஏஜன்ஸீஸ்

தபால் பை எண் 172 .... 213, மேலமாசி வீதி, மதுரை-1.

சாபக்கேடு

வெங்கடலட்சுமி

1

அபலா காலனியின் முதல் வீடு நர்ஸ் லீலாமணியினுடையது. கோயமுத்தூரில் மூன்று வருஷங்களாக வேலை பார்த்து வந்த அவள், இந்தப் பக்கத்துக்கு வேலைக்கு வந்து ஒரு மாசம் தான் ஆகியிருந்தது. முதலில் ஒரு வாரம் வரையில் அவளுக்குக் கண்களைக் கட்டிக் காட்டில் விட்டாற் போலிருந்தது. எதையோ பறிகொடுத்ததுபோன்ற ஓர் உணர்ச்சியில் வளையவந்துகொண்டிருந்தாள். இப்பொழுது ஏறக்குறைய சகஜமாகிக் கொண்டிருந்தது.

ஒரு மாதம் முன்பு கையில் பிடித்த ஒரேயொரு சிறிய பெட்டியுடன் குன்னூர் ரயில் நிலையத்தில் வந்திறங்கினாள் அவள். அன்று மழைத்தூறலுடன் பனிப்படலம் எங்கும் வியாபித்திருந்தது. ஒரு வினாடி திகைத்து நின்றுவிட்டு வெளியே வந்தாள். குளிர் வெட வெட வென்று உடலை நடுக்கியது. வண்டியோ, மனிதர்களோ யாரையுமே காணவில்லை. அங்கு நின்றிருந்த ஒரேயொரு போர்ட்டரைக் கூப்பிட்டாள். "எங்கே போகணுங்க? அபலா காலனியா? எனக்குத் தெரியுமே! இங்கே கிட்டத்தானிருக்கிறது; நடந்தே போயிடலாம்," என்று உற்சாகத்துடன் கூறியபடி பெட்டியை வாங்கிக் கொண்டான் அவன். குடையைப் பிரித்துப் பிடித்தபடி அவன் பின்னால் நடந்தாள் லீலாமணி. சுமார் பத்து நிமிஷத்தில் காலனியை யடைந்து விட்டார்கள். போர்ட்டருடைய கூலியைக் கொடுத்தனுப்பி விட்டுத் தன்னிடமிருந்த சாவியால் கதவைத் திறந்தாள். பெட்டியை ஒரு மூலையில் வைத்துவிட்டு வீட்டைச் சுற்றிப் பார்த்தாள். ஒரு சின்னப் படுக்கையறை, சமைக்குமிடம், கூடம், குளியலறை. இவ்வளவு தான்' நல்ல அழகாகவும் வசதியாகவுமிருந்தது. அவளுடைய தேவைக்கு எதேஷ்டம்.

குளியலறைக்குள் நுழைந்து குழாயைத் திருப்பினாள். சரீரென்று உறைத்த தண்ணீரின் குளிர்ச்சியில் விரல்கள் விறைத்து விட்டன. 'சரி, குளிப்பது சாத்தியமில்லை, என்றெண்ணியபடி முகத்தை மட்டும் கழுவிக்கொண்டு வெளியே வந்தாள். விளக்கைப் போட்டுவிட்டுச் சன்னலண்டை வந்து நின்றபொழுது உள்ளே நுழைந்தாள் ஒருபெண். வயது பதினைந்திருக்கும். நல்ல உருண்டை முகத்தில் களையான பெரிய கண்கள். பாவாடை தாவணியுடன் நீண்ட பின்னல் போட்டுத் தலையில் கட்டுக் கனகாம்பரம் சூடியிருந்தாள். கையிற் கொண்டு வந்த ஒருசிறு கூஜாவை நீட்டிய படியே குழந்தைபோன்ற ஒரு புன்னகையுடன், "காப்பி கொண்டுவந்திருக்கிறேன்–ரயில் லேட்டாய் வந்தது போலிருக்கே!" என்றாள்.

அவளை வியப்புடன் பார்த்தாள் லீலாமணி. 'யார் இந்தப் பெண்? நமக்காகக் காப்பி போட்டுக் கொண்டு வந்திருக்கிறாளே!' என்று எண்ணிக்கொண்டாள். அவள் மனதில் ஓடிய எண்ணங்களை

அறிந்தவள்போல் அந்தப்பெண், "ஓ! நான் யாரென்பதைச் சொல்லவில்லையல்லவா? உங்களுக்குக் கடிதம் எழுதினாரே, டாக்டர் சூர்யா! அவருடைய தங்கை நான். பக்கத்து குவாட்டர்ஸில்தான் இருக்கிறோம்; என் பெயர் அகல்யா" என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டாள்.

லீலாமணி இப்பொழுது விழித்துக் கொண்டாள். "டாக்டர் சூர்யாவின் தங்கையா நீங்கள்? உங்களுடைய அண்ணாவுக்கு ஆஸ்பத்திரிக்குப் பக்கத்திலேயே பெரிய குவாட்டர்ஸ் இருக்குமே!" என்று கேட்டாள்.

"இருக்கிறது. ஆனால் அது ரொம்பப்பெரிசு. அண்ணா வேலைக்குப் போய்விட்டால் நான் மட்டும்தான் அங்கே தனியாயிருக்கணும். மேலும் ராத்திரி வேளையில் அங்கே சிறுத்தைகள் நடமாட்டம் உண்டாம். அதனால் அண்ணா இந்தச் சின்ன குவார்ட்டர்ஸ் போதுமென்று சொல்லிவிட்டார். காப்பியைச் சாப்பிடுங்கள். அடுப்பிலிருந்து இறக்குமுன்பே ஆறிப்போய் விடும் இந்த ஊரிலே" என்று சிரித்தாள் அகல்யா. லீலாவின் அற்புதமான அழகு அவளைக் கவர்ந்துவிட்டது. வியப்பு நீங்கிய லீலாமணி அவள் கொண்டுவந்த காப்பியை ஆவலுடன் குடித்தாள். குளிரில் விறைத்துக் கொண்டிருந்த அவளுக்கு அந்தக் கொதிக்கும் காப்பி புதிய உயிரைக் கொடுத்தது.

"இப்பொழுது உங்களுக்கு வேலையொன்றும் இல்லையே! கதவைப் பூட்டிக்கொண்டு எங்கள் வீட்டுக்கு வாருங்கள். ராத்திரி அங்கேதான் உங்களுக்குச் சாப்பாடு. அண்ணா வந்தவுடன் மூன்று பேருமாகச் சாப்பிடலாம்" என்றபடி வாசலை நோக்கி நடந்தாள் அகல்யா.

முதலில் மறுக்க நினைத்தாள் லீலாமணி. அடுத்த நிமிடம் அவ்வாறு செய்தால் நன்றாக இராது என்றெண்ணியவளாய் வீட்டுக் கதவைப் பூட்டிக்கொண்டு அவளைத் தொடர்ந்தாள்.

அண்ணனும் தங்கையும் நல்ல பண்பாடுடையவர்களென்பதை அவ்வீட்டுக்குள் நுழைந்தவுடனேயே உணர்ந்துகொண்டாள் லீலாமணி. முன் பக்கத்தறையில் அடுக்கப்பட்டிருந்த புத்தகங்களும், இரண்டொரு உயர்ந்த கலைப்பொருள்களும், சமயலறையின் ஒழுங்கும் அவளைக் கவர்ந்தன. சமயலறையில் அவள் உட்காருவதற்கு ஒரு ஸ்டூலை எடுத்துப் போட்டுவிட்டு மின்விசையடுப்பில், பாதியில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த சமையலைத்தொடர்ந்தாள் அகல்யா... துருதுருவென்று அவள் கைகள் வேலை செய்ததுபோலவே வாயும் கலகலவென்று பேசிக்கொண்டிருந்தது.

எத்தனையோ விஷயங்கள் கூறினாள் அவள். குழந்தைபோல் சிரித்துச் சிரித்து அவள் பேசியதை ஆவலுடன் ரஸித்தாள் லீலாமணி.

சூர்யாவுக்கும் அவளுக்கும் பெற்றோர் கிடையாது. உயர்நிலைத் தேர்வு கொடுத்திருந்தாள் அகல்யா; அதற்குப்பின் அண்ணாவை இங்கே மாற்றிவிட்டபடியால் தொடர்ந்து படிக்கவில்லை ...வீட்டைக் கவனிக்க யாருமில்லாததால் ஹாஸ்டலிலும் இருந்து படிக்க முடியவில்லை... அண்ணாவுக்குக் கல்யாணம் ஆய்விட்டால் பிறகு தன்னுடைய படிப்பை தொடர முடியும்'—'அப்பொழுது உங்களுக்கு—உனக்கு,—கல்யாணம் பண்ண வேண்டுமென்று உன் அண்ணா சொல்லவில்லையா?—" என்று குறும்பாகக் கேட்டாள் லீலா.

"இல்லையில்லை!—குறைந்த பட்சம் பீ. ஏ.—யாவது முடிந்தப்புறம்தான் எனக்குக் கல்யாணம்!"—முகம் சிவக்கக் கூறிவிட்டு அடுப்பில் கொதித்துக்கொண்டிருந்த குழம்பை இறக்கினாள் அகல்யா—

"வாருங்கள்!—அகல்யா என்ன, பெரிய லெக்சர் பண்ணுகிறாள் போலிருக்கே!"—என்று சிரித்தபடியே உள்ளே நுழைந்தார் டாக்டர் சூர்யா—திடுக்கிட்டு எழுந்து நின்றாள் லீலாமணி.

2

அடுக்கடுக்கான மலைச்சிகரங்களின்மீது கதிரவனின் பொன்னொளியில் ஊறிய மேகச் சுருள்கள் ஊர்ந்துகொண்டிருந்தன. கண்ணுக்கெட்டிய தூரம் வரிசை வரிசையாகத் தொடுத்த செண்டுபோன்ற நீலப்பிசின் மரங்கள்—பசுமை பரவிப் பச்சைத் தகடாய் மின்னிய தேயிலைச்சரிவுகள் அவற்றிற்கிடையே அபலா காலனி அமைந்திருந்த மேட்டுக்குக் கிழக்கே தென்பட்டது. அகன்றதோர் பள்ளத்தாக்கு. அதிலிருந்து நான்கு வரிசை வீடுகளும் அணைக்கட்டில் வேலையெடுக்கும் தொழிலாளிகளுக்காகக் கட்டப்படவை. சிவப்புக் கூரை வேய்ந்து சில குழந்தைகள் விளையாடும் செப்பு வீடுகளைப் போற் காட்சியளித்தன. அதையும் தாண்டி வட்டமான ஒரு பெரிய மேட்டில் அமைந்திருந்தது ஆஸ்பத்திரிக் கட்டிடம். அதற்கடுத்த சற்று சிறிதான கட்டிடம்தான் டாக்டருக்காக ஒதுக்கிவைக்கப்பட்டிருந்தது. அங்கிருந்து பார்த்தால் படுக மக்களின் குடியிருப்புகள் அங்கங்கே தென்படும்.

எங்கு பார்த்தாலும் மஞ்சள் வாடாமல்லிகை மலர்கள் சிறு சிறு பொற்கிண்ணங்களைப்போல் மலர்ந்திருந்தன. இடையிடையே மலைச்சாரல்களுக்கே உரித்தான பலவண்ணப் புஷ்பக் குவியல்கள் எல்லாவற்றையும் அணைத்துக் கொண்டு ஓடியது வெள்ளியுருக்காய் மின்னிய ஹல்லா நதி.

ஆஸ்பத்திரி வேலையெல்லாம் முடித்து விட்டு மெல்ல வெளியே வந்தாள் லீலாமணி. அன்று அவளுக்கு ஒரே வேலை. ஆஸ்பத்திரிக்குள் சுற்றி சுற்றி வந்து காலெல்லாம் ரணமாய் வலித்தது, மேஜையருகில் உட்கார்ந்து ஏதோ எழுதிக்கொண்டிருந்த டாக்டரிடம் வந்து நின்றாள். "நான் வீட்டுக்குப் போகிறேன்; வேலையெல்லாம் முடிந்துவிட்டது" என்றாள். அழகிய

அவள் முகத்தை உற்று நோக்கியபடியே "நடந்தா போகிறீர்கள்? இன்னும் அரைமணி காத்திருந்தால் ஜீப் வந்துவிடுமே! நானும் அதில்தான் போகப்போகிறேன்! பாவம், இன்று உங்களுக்குச் சரியான வேலை!" என்று அனுதாபத்துடன் பேசினுர் டாக்டர் சூரியா.

லீலாவுக்கு ஜீப்பில் போக இஷ்டமில்லை. ஆனால் வழக்கம்போல் நாலைந்து மேடுகள் ஏறிச் சென்று வீட்டையடைய முடியாது போலிருந்தது அவளுக்கு. ஆகவே மௌன மாய்த் தலையசைத்துவிட்டுப் படிகளிலிறங்கி அழகாய் மலர்ந்திருந்த புஷ்பப் பாத்திகளண்டை வந்து நின்ருள். நீலம், சிவப்பு, மஞ்சள், இப்படிப் பல வண்ண மலர்கள் அழகாய், ஒழுங்காய் மலர்ந் திருந்தன. அவற்றையெல்லாம் தாண்டிக் கட்டி டத்தின் பின்பக்கத்தை நோக்கி நடந்தாள். பச்சைப் பிள்ளைகளின் புன்னகையையொத்த சின்னஞ்சிறு இலைக்கோசுச் செடிகள் வரிசை வரிசையாய் நகைத்தன. குனிந்து அவற்றின் பட்டுப்போன்ற இலைகளை விரலாற்தொட்டுப் பார்த்துவிட்டு மீண்டும் ஆஸ்பத்திரியின் வாச லுக்கு வந்து சேர்ந்தாள்.

"பூம் பூம்," என்றலறியது ஜீப்.

"போகலாமா?" என்று கேட்டார் டாக்டர்.

"ஓ!" என்ற வண்ணம் வண்டியின் பின் ஆசனத்தில் உட்கார்ந்தாள் லீலா. டாக்டர் டிரைவருக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொள்ள

மேடும் பள்ளமுமான ரஸ்தாவில் விரைந்தது வண்டி.

அபலா காலனிக்குச் சற்று தூரத்திலேயே வண்டி நின்று விட்டது. அதற்குப்பின் வீடுவரையில் நடந்துதான் செல்லவேண்டும்; சட்டென்று இறங்கிய லீலாமணி, மேலே அணிந்திருந்த கம்பிளிக்கோட்டை இழுத்து விட்டுக்கொண்டு ஏதோ யோசித்தவண்ணமே வீட்டுப் படியின் மேல் ஏறிக்கொண்டிருந்தாள். பின்னால் வந்து கொண்டிருந்த டாக்டரை அவள் கவனிக்கவேயில்லை. ஆகவே அவர் சமீபத்தில் வந்து, "ஸிஸ்டர்"! என்றழைத்ததும் திடுக்கிட்டாள். சட்டென்று திரும்பியவளாய் மன்னிக்கணும்! ஏதோ யோசித்தவண்ணம் வந்து விட்டேன்!" என்றாள் ஒரு புன்னகை இதழ்களில் விரிய.

"இல்லை, உங்களிடம் ஒரு விஷயம் சொல்லணும்;" என்றார் டாக்டர் சூரியா.

"சொல்லலாமே!" என்றாள் லீலா.

"நம் அகல்யாவுக்குக் கல்யாணத்துக்குப் பார்த்துக் கொண்டிருக்கிறேன்! ஓர் இடம் கூடி வந்திருக்கிறது, நாளையதினம் அவர்கள் பெண்ணைப் பார்க்க வருகிறார்கள்! வீட்டில் வேறு யாருமில்லாததனால் நீங்கள் தான் கொஞ்சம் வந்து உதவி செய்யணும்." என்றார் சிரித்தபடியே.

"அப்படியா? அகல்யா என்னிடம் ஒன்றுமே சொல்லவில்லையே!"

"அவளுக்கு ஒரே வெட்கம்," என்று மீண்டும் சிரித்தார் டாக்டர்.

"அதற்கென்ன? கட்டாயமாய் வந்து செய்கிறேன்!" என்று கூறிவிட்டுத் தன் வீட்டுக்குள் நுழைந்து விட்டாள் லீலாமணி.

"இந்தப்பெண் ஓர் அதிசயப்பிறவி; இரண்டுக்கு மேல் மூன்றாவது வார்த்தை பேச மாட்டேனென்கிறாளே!" என்றெண்ணியபடியே மேலே நடந்தார் டாக்டர்.

அதே சமயத்தில் தன் வீட்டுக்குள் நுழைந்து கதவைத் தாளிட்ட லீலாமணி, மேலே போட்டிருந்த கம்பளிக்கோட்டைக் கூடக் கழற்றாமல் தன்னுடைய கட்டிலின்மீது படுத்துக் கண்களை இறுக மூடிக்கொண்டாள்.

"அகல்யாவுக்குக் கல்யாணம்!" கல்யாணமென்ற அந்த ஒருவார்த்தை அவள் மனதில் பூகம்பத்தையும், எரிமலையையும், பிரளயத்தையும் ஒன்றாகக் கிளப்பிவிட்டு விட்டது. மூன்று வருஷங்களாகத் தன் மனதில் சமாதிக்கட்டிப் புதைத்து வைக்கப்பட்டிருந்த அந்த நினைவுகள் டாக்டர் கூறிய அந்த ஒரேயொரு வார்த்தையினால் பூதாகாரமான உருவம்பெற்று எழுந்து வந்து அவளைப் பயமுறுத்தின. நெற்றியை ஒருகையால் அழுத்திக் கொண்டாள். குமுறி வந்த எண்ணங்களின் வேகத்தில் நெஞ்சம் படீரென வெடித்து விடுமோவென்று தோன்றியது. ஏதோவொரு வேகத்தில் எழுந்து மேஜைமீதிருந்த கண்ணாடியண்டை வந்து நின்றாள்.

'ஆம்' மூன்று வருடங்கள் ஓடிவிட்டபோதிலும் அவளுடைய தோற்றத்தில் பெரிய மாறுதலொன்றும் உண்டாகவில்லை. அதே கரிய பெரிய விழிகள், சின்னஞ்சிறு நாசி, நெற்றியில் வந்து விழுந்த குழற்கற்றைகள், பவழ இதழ்கள், பொன்னின் மெருகேறிய மேனி, அட கடவுளே! இந்த அழகு வேண்டுமென்று யார் அழுதார்கள்? அதனால் ஏற்பட்ட நாசம் போதாதா? இன்னும் ஏதாவது பாக்கியிருக்கிறதா?

* * *

அவள் முன்னால் விரிந்தது ஒரு காட்சி. பட்டணத்து நெருக்கமான சந்துகளிலொன்றில் ஒரு சிறுவீடு. அம்மா அடுக்களையில் வேலையாகயிருக்கிறாள். ஒருதட்டில் பிச்சிப்பூவை வைத்துத் தொடுத்துக் கொண்டிருக்கிறாள் அக்கா வனஜா. மேஜையண்டையுட்கார்ந்து ஏதோ படித்துக் கொண்டிருக்கிறாள் லீலாமணி. ஜோடுச் சப்தம் கேட்டுத் திரும்பிப் பார்க்கிறாள். கையில் ஒரு கடிதத்துடன் உள்ளே நுழைகிறார் அப்பா; பூ தொடுப்பதை நிறுத்திவிட்டு ஆவலுடன் நிமிர்ந்து பார்க்கிறாள் வனஜா. அம்மா வேகமாய் வெளியே வருகிறாள்.

"என்ன எழுதியிருக்கிறார்கள்?" அம்மாவின் கேள்வி இது.

"அதேதான்; லீலாவைக் கொடுப்பதானால் பண்ணிக்கொள்ளப் பிரியப்படுகிறோம்," அப்பா கடிதத்தை அவளிடம் வீசிவிட்டுச் சோகத்துடன் நாற்காலியிற் சாய்கிறார். லீலா மெல்லத் தலை நிமிர்ந்து பார்க்கிறாள். சடக்கென்றெழுந்த வனஜா அவளைச் சுட்டெரிப்பதுபோற் பார்த்துவிட்டு நீர் ததும்பும் விழிகளுடன் சமையலறைக்குள் விரைகிறாள். பொங்கிவரும் அழுகையுடன் தலை குனிகிறாள் லீலா.

இன்னொரு காட்சி. "லீலா!— நீ அவர்களெல்லாம் போகும் வரையில் மாடியிலேயே இரு அம்மா!" என்கிறாள் அம்மா.–மௌனமாய்த் தலையசைத்துவிட்டு மாடிக்குப் போகிறாள் லீலா. வனஜா அவளைத் திரும்பிக்கூடப்பார்க்கவில்லை— அழுகை பொத்துக்கொண்டு வருகிறது லீலாவுக்கு.

சற்று நேரத்துக்கெல்லாம் வாசலில் ஒருமோட்டார் வந்து நிற்கிறது. மறைந்தபடியே எட்டிப் பார்க்கிறாள் லீலா. முதலில் ஒருவயதான தம்பதியும் அப்புறம் உயரமான ஓர் இளைஞனும் இறங்குகிறார்கள்.—அப்பா வாசலில் வந்து அவர்களை வரவேற்கிறார்—லீலா அறைக்குள் வந்து உட்காருகிறாள்—கீழேயிருந்து வீணையை மீட்டும் ஒலியும் வனஜாவின் பாட்டும் கேட்கின்றன.—அப்புறம் ஏதேதோ பேசும் சப்தம்—பலகாரத்தட்டுகளும் காப்பி தம்ளர்களும் கிளம்பும் ஒலி—"போய் வருகிறோம்" என்கிறார் இளைஞனின் தகப்பனார்

பிறகு மெதுவாக ஏதோ சொல்லும் சப்தம். வார்த்தைகள் தெளிவாகக் கேட்கவில்லை—பிறகு அப்பாவின் குரல்—" பெரிய பெண்ணிருக்கும் பொழுது சின்னவளின் கல்யாணத்தைப்பற்றி எப்படி யோசிப்பது?—வனஜாவின் கல்யாணத் துக்கப்புறம்தான் லீலாவின் ஜாதகம் எடுக்க முடியும்'—

"உங்களுடைய இஷ்டம்—பையன் உங்களுடைய சின்னப் பெண்ணைக் காலேஜில் பார்த்திருக்கிறான்!—உங்களுக்குப் பிரியமிருந்தால் இந்தத் தையிலேயே முடித்துவிடலாம்!

"இல்லை—மன்னிக்கணும்,—இப்பொழுது அந்த எண்ணமே எனக்குக் கிடையாது"

"அப்பொழுது நாங்கள் விடை பெற்றுக் கொள்ளுகிறோம்!—

மோட்டார் கிளம்பும் சப்தம்—லீலாமணி அப்படியே மரமாய் நிற்கிறாள்—அவள் மனதில் ஓர் உறுதி உண்டாகிறது.

இன்னொரு காட்சி.

பெட்டி படுக்கையெல்லாம் கட்டிவைக்கப்பட்டிருக்கின்றன. லீலாமணி ரயிலுக்குக் கிளம்பச் சித்தமாயிருக்கிறாள்.

"சொன்னால், கேட்கமாட்டேனென்கிறாயே!—நான் என்ன செய்ய?" அம்மாவின் விழிகளில் கண்ணீர் ததும்புகிறது.

நெஞ்சையடைக்கும் துயரத்துடன், ஆனால் மேலுக்கு ஒரு புன்னகையுடன் பேசுகிறாள் லீலா.—"இரண்டு வருஷத்தில் பயிற்சி முடிந்துவிடும்,—அப்புறம் உன்னிடமே திரும்பிவந்துவிடுவேனே!—உனக்கு ஒரு பிள்ளையிருந்தால் வேலைக்கு அனுப்பமாட்டாயா அம்மா? என்னைப் பிள்ளையாக எண்ணிக் கொள்ளவும். உனக்கும் அப்பாவுக்கும் வயசாகும்பொழுது நான் சம்பாதித்துப் போட்டு உங்களைக் காப்பாற்றுவேன்!—சிரிக்க முயலுகிறாள்.—

"அக்கா!—நான் போய்வருகிறேன்!"—வனஜா தலை நிமிரவில்லை.

"அப்பா!"—

"நம் குடும்பத்தில் இதுவரையில் பெண்கள் யாரும் வேலைக்குப்போனதேயில்லையே, அம்மா!"

"அதனால் என்ன அம்மா?—யாராவது ஒருவர் முதலில் வழி காட்டத்தானே வேண்டும்?—நான் முதலில் ஆரம்பித்து வைத்தால் அப்புறம் எவ்வளவோ பெண்கள் என்னைப் பின்பற்றி வேலைக்குக் கிளம்பி விடுவார்கள்,—நீங்கள் வேண்டுமானால் பாருங்களேன்!"

"அப்படியானால் உன்னிஷ்டம்!"

அப்பாவுடன் மோட்டாரில் ஏறிக்கொள்ளுகிறாள்;—மோட்டார் கிளம்புகிறது. அம்மாவும் வனஜாவும் பார்த்துக்கொண்டே நிற்கிறார்கள்.

3

கோயமுத்தூர் ஆஸ்பத்திரியொன்றில் நர்ஸ்களின் விடுதி — வேலையெல்லாம் முடித்து விட்டுத் தன்னறைக்குத் திரும்பிய லீலாமணி மாலைக்காப்பி குடித்துவிட்டு வேறுடையணிந்து கொண்டு வெளியே கிளம்புகிறாள். அங்கே நின்றுகொண்டு அவளைக் கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்த வேறிரண்டு நர்ஸ்கள் தங்களுக்குள்ளேயே ஏதோ குசுகுசுவென்று பேசிக்கொண்டிருக்கின்றனர் — லீலா அவர்களைக் கவனியாததுபோல் மேலே நடக்கிறாள். ஆஸ்பத்திரி வாசலையடைந்ததும் அங்கு நின்றிருக்கும் ஒரு மோட்டார்காரிலிருந்து வெளியே குதிக்கிறான் இளைஞனொருவன்—ஆஸ்பத்திரியில் ஆறு மாதங்களுக்கு முன்பு வேலையாக வந்த புதிய டாக்டர்—அவன் பெயர் சுரேஷ் என்பதுமட்டும் லீலாவுக்குத் தெரியும். தலை குனிந்தபடியே அவனைத்தாண்டி நடக்கிறாள் அவள்—விரைவாக அவளைத் தொடர்கிறான் டாக்டர் சுரேஷ். "ஹலோ! மிஸ் லீலா! எங்கே இவ்வளவு தூரம்? —ஷாப்பிங்கா?"

"இல்லையில்லை,—கோயிலுக்குப் போகிறேன்!" —சொல்லிவிட்டு இன்னும் வேகமாய் நடக்கிறாள்—

"அட! நீ ரிலிஜியஸ் மைண்டெட் என்பது அதிசயமாயிருக்கிறதே!—அதுதான் சரி,—அழகுடன்கூட ரிலிஜியனும் இருந்தால்தான் சோபிக்கும்—காரில் ஏறிக்கொள்!—கோயிலுக்கு நானே கொண்டுவிடுகிறேன்!"

"இல்லையில்லை,—நான் நடந்தே போகிறேன்!" என்று அவனைத் திரும்பிப் பாராமலே வேகமாய்ப் போய்விடுகிறாள்.—தன்னுடன் அவன் பேசியதை யாராவது பார்த்திருப்பார்களோவென்று எண்ணத்தில் அவள் உடலும் மனமும் நெருப்பாக எரிகின்றன.

அன்றிரவு சீக்கிரமே உணவை முடித்துப் படுக்கைக்குச் சென்றுவிட்ட லீலாவின் காதுகளில் வராந்தாவில் நாலைந்து நர்ஸ்கள் பேசிக்கொள்ளுவது லேசாய்க் கேட்கிறது.

"டாக்டர் சுரேஷ்—அந்த லீலாமணியைச் சுற்றி வருகிருரே!"—

"அதற்கு அவள் என்ன செய்வாள், பாவம்!"

"வாஸ்தவம்தான்.—அவளென்னமோ அவரை அண்டவிடுவதேயில்லை ரொம்ப அழகாயிருப்பது கூட சிலசமயம் கஷ்டமாகத்தானிருக்கிறது!"

"ஆமாம்! அழகியான ராணி கிளியோபாட்ரா, டிராய் நகரத்து ஹெலன், இவர்களுடைய பேரழகெல்லாம் கடைசியில் நாசத்தைத்தானே உண்டாக்கின; பாவம், லீலாமணியைப் பார்த்தால் கஷ்டமாயிருக்கிறது! இவ்வளவு அழகாக இருப்பது அவளுடைய குற்றமல்லவே!"

"அதென்னவோ, மூன்று நாளாக அந்த நர்ஸ் விலாசினி அழுது கொண்டேயிருக்கிருள்; டாக்டர் சுரேஷ்கூட அவளைக் கல்யாணம் பண்ணிக்கொள்ளப் போவதாகச் சொல்லிக் கொண்டார்களே!" இப்பொழுது அவளை அவர் திரும்பிக்கூடப் பார்ப்பதில்லையாம்!"

லீலாமணிக்கு நெஞ்சில்ஈட்டி புகுந்தாற்போலிருந்தது. ஈசுவரா! அழகுள்ள பெண்ணுகயிருப்பதும் ஒரு சாபக்கேடுதான் போலிருக்கே! காதுகளைப் பொத்திக் கொள்ளுகிருள். குபுக்கென்று பொங்குகிறது கண்ணீர். ஒரு வாரத்தில் குன்னூருக்குக் கிளம்பிவிடுகிருள்.

4

"அண்ணு! நர்ஸ் லீலாமணி ஊருக்குப்போய் விட்டாள்!" என்று தெரிவித்தாள் அகல்யா. "அவளுடைய அக்காவுக்குக் கல்யாணமாம்!"

டாக்டர் சூர்யா ஒரு நிமிஷம் திகைத்தார். பிறகு புன்சிரிப்புடன், "போகட்டும்! அவளுக்கு கல்யாணமில்லையே!" என்ருர் வேடிக்கையாக.

"ஏன் அண்ணு? அவள் எவ்வளவு அழகு? தங்கமான குணம்! நான்கூட நினைச்சேன் நீ அவளைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளலாமென்று!" என்று கவடில்லாமற் பேசினுள் அகல்யா.

"அட என்னுடைய எண்ணம் உனக்குத் தெரிந்து விட்டதே! உன்னுடைய கல்யாணம் முடிந்ததும் பட்டணத்துக்குப்போய் அவளைத் தேடிப் பிடித்துக் கழுத்தில் தாலியைக்கட்டி அழைத்து வந்து விடுகிறேன் பார்!"

"நிஜமாகவா, அண்ணு?" என்று கண்களை அகல விரித்தாள் அகல்யா.

"ஆமாம்! நிஜமாகத்தான்; நான் எப்பொழுதாவது பொய்பேசி நீ பார்த்திருக்கிருயா?... சரி;... சரி;... நீ போய் உன்னைத்தயார் பண்ணிக் கொள்! அவர்களெல்லாம் வரும் வேளையாகி விட்டது!" என்று சிரித்துக்கொண்டே அவளை விரட்டினுர் உள்ளே.

* * * *

இரண்டு மாதங்களுக்குப் பின்பு குன்னூர் ஸ்டேஷனில் மீண்டும் வந்திறங்கினுள் லீலாமணி. ஆனுல் இப்பொழுது நர்ஸ் லீலாமணியாகவல்ல; ஸ்ரீமதி சூர்யாவாக.

"அகல்யா இருப்பாளோ இல்லையோ?" என்று கேட்டாள் கணவனிடம் மெதுவாக—

"அவள் மட்டுமா?—அவளுடைய கணவனும் உன்னை வரவேற்பதற்காக நேற்றே வந்திருக்கிருன்!—உன்னுடைய அழகைப் பற்றிப் பத்தி பத்தியாய் வர்ணித்திருக்கிருளே அகல்யா—பார்க்கவேண்டுமென்று அவனுக்கு மட்டும் ஆவல் இராதா?" என்று பரிகாசம் பண்ணினுர் டாக்டர் சூர்யா.

"சரிதான், போங்கள்,—கடைசி வரையில் இந்த அழகே எனக்கு ஒரு சாபக்கேடாய் முடிந்துவிடுமோ, என்று நடுங்கிக்கொண்டிருந்தேன்." என்ருள் லீலா.

"அதெல்லாம் நான் அருகிலிருக்கையில் ஒரு சாபக்கேடும் உன்னை நெருங்காது—கவலைப்படாதே!" என்று வேடிக்கையாகக் கூறியபடியே அவளுடைய கரத்தை இறுகப்பிடித்தார் டாக்டர் சூர்யா—நாணத்தின் செம்மை முகத்தில் படர சட்டென்று தன் கையை விடுவித்துக்கொண்டு மோட்டாரில் ஏறினுள் லீலாமணி.

துஷார்

வைடமின் நிறைந்த வனஸ்பதி

துஷார் வனஸ்பதி சமையலுக்கு ஏற்ற சாதனம் மட்டுமல்ல. இதில் ஏ, டி. வைடமின் சத்துக்கள் நிறைந்து, சமையலின் ருசியையும் வாசனையை ஊட்டமளிக்கும் சக்தியையும் அதிகரிக்கச் செய்கின்றன.

துங்கபத்ரா இண்டஸ்ட்ரீஸ் லிட், கர்நூல்

TI-3/58



டில்லிக் தபால்

கே. ஸ்ரீநிவாஸன்.

இந்தியா வெங்கும் இன்று விவாதிக்கப் படும் விஷயம்: கேரள அட்டுழியத்தில் மத்திய சர்க்கார் தலையிடுமா? கேரளத்து களேபரம் இன்று தேசமெங்கும் தெரிந்திருக்கிறது. கம்யூனிஸ்ட்கள் பதவிக்கு வந்தால் எந்தெந்த விஷயத்தில் ஜனநாயகத்தை குழி தோண்டிப் புதைப்பார்கள், எப்படி சர்க்கார் நிர்வாகத்தை கட்சியை பலப்படுத்திக் கொள்ளுவதற்கு உபயோகப்படுத்திக் கொள்ளுவார்கள், எப்படி கம்யூனிஸ்ட் அல்லாதவர்களுக்கு உபத்திரவம் ஏற்படுகிறது என்பதை காங்கிரஸ் தலைவர்கள் மட்டும் அல்லாது எதிர் கட்சித் தலைவர்கள் யாவரும் சாங்கோபாங்கமாக எடுத்துரைத்துள்ளார்கள். கம்யூனிஸ்ட்கள் கூட தங்கள் மேல் சாட்டியுள்ள குற்றங்களை மறுக்க வில்லை. எப்படி சட்டப்படி தேர்ந்தெடுக்கப்பட்டு, ஜனநாயக முறைப்படி அமைக்கப்பட்ட சர்க்காரை மத்திய சர்க்கார் அப்புறப் படுத்துவது என்று மட்டும் அவர்கள் கேட்கிறார்கள். அதற்குப்பதில் ஜனநாயக சட்ட வரம்புக்குள் சர்க்கார் வேலை செய்தால் அல்லவோ அவர்கள் விஷயத்தில் தலையிடாமல் இருப்பது? வேலியே பயிரை மேயும் பொழுது நட்டவன் வாளா விருப்பானா?

கேரள நிலைமையில் இன்று கம்யூனிஸ்ட்கள் பூராவாகத் தங்கள் உண்மை ஸ்வருபத்தில் படம் பிடிக்கப்பட்டு விட்டார்கள். நேற்றுவரை கம்யூனிஸ்ட்கள் அப்படிச் செய்வார்கள், இப்படி செய்வார்கள் என்று சொல்லிக் கொண்டிருந்ததெல்லாம் இன்று நிருபிக்கப்பட்டு விட்டது. இதில் விசேஷம் என்ன வென்றால் கம்யூனிஸ்ட் சர்க்கார் கலைக்கப்பட வேண்டும் என்ற கோஷத்தை எதிர்கட்சிகள் பலமாகப் போடுகின்றன, பல்லாயிரக் கணக்கில் மக்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டு இன்று ஜெயிலில் இருக்கிறார்கள் என்பதுமட்டும் ஆச்சரியம் இல்லை. இது மாதிரி கங்குகரை இல்லாமல் ஜனப் போராட்டத்தைச் சென்ற சில தலைமுறைகளில் கண்டதே இல்லை என்று பாட்டாளி மக்களின் தலைவர்கள் தாராளமாக ஒப்புக் கொள்ளுகிறார்கள். இந்த சந்தர்ப்பத்தில் காங்கிரஸ் போராட்டத்திலிருந்து விலகுவது என்பது அந்தக் கட்சியின் நலத்திற்கல்ல. அப்படிச் செய்தால் காங்கிரஸ் மறுபடி கேரளத்தில் தன் செல்வாக்கை என்றென்றும் இழந்துவிடும் என்பதை கேரள காங்கிரஸ் தலைவர்கள் அறிவார்கள். கேரள காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ சங்கர் இந்த அபிப்பிராயத்தை பலமாக காங்கிரஸ் மேலி

டத்தில் வற்புறுத்தி காங்கிரஸ் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட அனுமதி பெற்ருர்.

* * *

இவ்வளவு அல்லோலகல்லோலப்படும் நிலைமையில் ஏன் மத்திய சர்க்கார் வாளாவிருக்கிருர்கள் என்று மக்கள் வியக்கிருர்கள். அதற்குக் காரணம் உண்டு. காங்கிரஸ் மட்டும் கேரளசர்க்கார் கலைக்கப்பட வேண்டும் என்று வாதாடுகிறது. என்ற எண்ணம் நாட்டில் ஏற்படக்கூடாது என்பது நேருவின் அபிப்பிராயம். இது மிகவும் அவசியம் என்பதைக் காங்கிரஸ் தீவிரவாதிகள்கூட ஒப்புக் கொண்டார்கள். இந்தக்கட்டம் நேருவின் கேரள விஜயத்திற்குப் பிறகு தாண்டப்பட்டு விட்டது. எதிர்கட்சி மக்கள் தலைவர்கள் ஸ்ரீ மன்னத் பத்மனுபன் முதல் ஸ்ரீ பட்டம் தாணுபிள்ளை வரை கேரளத்தின் நிலைமையை தெளிவாக விளக்கினர்கள். அதைத்தொடர்ந்து பிரதமர் நேரு தன்னுடைய அபிப்பிராயத்தை தெரிவித்து இந்நிலைமையில் கேரள சர்க்கார் புதுத் தேர்தல்கள் நடத்துவது தான் சமாதானத்துக்கு வழி என்று யோசனை கூறினர்.

இந்த யோசனையை கம்யூனிஸ்ட்கள் ஒப்புக் கொள்ளமாட்டார்கள் என்பதை அரசியல் ஞானம் உள்ளவர்கள் எதிர் பார்த்தார்கள். ஏனென்ருல் இன்று கேரளத்தில் தேர்தல்கள் நடந்தால் கம்யூனிஸ்ட் கட்சி நிச்சயம் மண்ணைக் கவ்வும் என்பதில் சந்தேகமில்லை. ஸ்ரீ நம்பூதிரிபாத் கூட ஒரு கட்டத்தில் தேர்தல்கள் நடத்தத் தயாராக இருந்தார். ஆனல் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தன் திருவனந்தபுரம் கூட்டத்தில் தேர்தல் என்பது நடக்காத காரியம் என்று சொல்லிவிட்டது. இதிலிருந்து எவ்வளவுதான் மக்களின் நம்பிக்கையை இழந்துவிட்டோம் என்று தெரிந்தும் கம்யூனிஸ்ட்கள் பதவியில் முடிந்தவரை ஒட்டிக்கொண்டிருக்க விரும்புகிருர்கள் என்று தெரிகிறதல்லவா? இந்த சந்தர்ப்பத்தில்தான் மத்திய சர்க்கார் தலையிட வேண்டும் என்று எதிர் கட்சிகள் கூப்பாடு போடுகின்றன. மத்திய சர்க்கார் தலையிட்டு நடுவாந்தர தேர்தல்கள் நடத்த உத்தரவு போடுவார்கள் என்பது ஹேஷ்யம். அதற்கு அர்த்தம் மத்திய தலையீடு இல்லை, மக்களின் மனதைத் தெரிந்து கொள்ளும் முறை என்று வியாக்கியானம் செய்யலாம். அதற்கும் கம்யூனிஸ்ட்கள் அசைந்து கொடுக்கா விட்டால் கேரள சர்க்காரைக் கலைத்து தற்காலிகமாக ஜனதிபதி ஆட்சி ஏற்படும். இன்றுள்ள நிலைமையில் பாரபட்சமற்ற நிர்வாகத்தின் மூலம் தான் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் என்பதில் சந்தேகம் இல்லை.

* * *

கேரளத்தில் தலையிட்டால் கம்யூனிஸ்ட் கட்சி இந்தியா வெங்கும் குழப்பம் உண்டாக்கும் என்று சிலர் பூச்சாண்டி காட்டுகிருர்கள். கம்யூனிஸ்ட்கள் தங்கள் கை வரிசையைக் காட்டாத மாகாணம் இன்று எங்கு இருக்கிறது? 'உம்' என்ருல் பத்து போராட்டங்களும் 'இம்' என்ருல் இருபது போராட்டங்களும் நடத்தியவர்கள் தான் கம்யூனிஸ்ட்கள். கேரளத்தில் நடத்தியது போல அவர்கள் மற்றெங்கும் நடத்த முடியாது என்று திண்ணமாக சொல்லலாம். ஏனென்ருல் அவ்வளவு அட்டூழியம் நடத்த எந்தக் கட்சிக்கும் தைரியம் கிடையாது, கம்யூனிஸ்ட்களுக்கு உள்ளது போன்ற நாசப்பயிற்சியும் அவர்களுக்குக் கிடையாது. கம்யூனிஸ்ட்களை பதவியிலிருந்து விரட்டினல் ஆத்திரத்தில் அவர்கள் மற்ற மாகாணங்களில் பூச்சாண்டி காட்டுவார்கள். ஆனல் அதைக் கண்டு மற்ற சர்க்கார்கள் அஞ்சவேண்டியதில்லை.

* * *

நம் நாட்டில் பொதுவாக ஞாபகம் என்பது மிகக் குறைவு; இல்லாவிட்டால் மலைபோன்ற தலைவர்களை மறந்துவிடுவோமா? எட்டு வருஷங்களில் சர்தார் படேலைப்பற்றி எடுத்துரைக்கும் நிலைமை வந்துவிட்டது என்ருல் பார்த்துக் கொள்ளுங்களேன். இதனல்தான் ஏதாவது பிரச்னை என்று வந்தால் அதை சட்புட்டென்று முடித்துவிடவேண்டி வருகிறது.

இதுமாதிரி பொதுஜனங்கள் மறந்துவிடலாம் என்று பயப்படவேண்டி வந்துவிட்ட விஷயம் திபெத். டலாய்லாமா இந்தியா வந்து இப்பொழுது கிட்டத்தட்ட மூன்று மாதங்களாகிவிட்டன. டலாய்லாமா ஏன் இந்தியாவுக்கு வந்தார் என்பதை ஜனங்கள் மறக்கும் நிலைமை வந்துவிட்டது. திபெத்துடன் நெருங்கிய தொடர்புள்ள இந்தியாவின் கதியே இப்படி என்ருல் மற்ற நாடுகளைப்பற்றி கேட்கவா வேண்டும்? திபெத் என்று ஒரு பிரச்னை இருக்கிறது என்பதை மற்றவர்கள்

மறக்கவேண்டும் என்றுதான் சீனவும் விரும்புகிறது.

டலாய் லாமா சென்ற மாதம் பத்திரிகை நிருபர்கள் கூட்டம் ஒன்றில் பேசும் பொழுது திபெத் மக்கள் அவர் எங்கு இருந்தாலும் அவரைத்தான் திபெத் சர்க்கார் என்று மதிப்பதாகவும், திபெத்தில் கொன்று குவிக்கும் படலம் சீக்கிரம் முடியும் என்று தான் எதிர்பார்ப்பதாகவும், திபெத்தின் வருங்காலம் பற்றி தான் யோசித்து வருவதாகவும், வெகு சீக்கிரம் ஒரு திட்டம் வகுக்க முடிவு செய்வதாகவும் சொன்னர். அவர் பேசி முடிந்ததும் டில்லியில் பரபரப்பு உண்டாயிற்று. டலாய் லாமா பரதேசி சர்க்கார் அந்தஸ்து கோருகிருர் என்ற வியாக்யானம் பற்றி இந்திய சர்க்கார் வெளி நாட்டு இலாகா ஒரு மட்டமான அறிக்கையை வெளியிட்டது. அதில் டலாய் லாமாவை திபெத் சர்க்கார் என்று இந்திய சர்க்கார் மதிக்கவில்லை என்றும் "அவர் அந்தஸ்துக்குத் தகுந்தபடி அவரை நடத்துவதாகவும்" அந்த அறிக்கை தெரிவித்தது.

இந்திய சர்க்கார் டலாய் லாமாவுக்கு அடைக்கலம் கொடுத்த சூழ்நிலை பொது ஜனங்களுக்கு ஞாபகம் இருக்கலாம். திபெத் பிரச்னையைக் குறித்து எதிர் கட்சிகள் ஆர்ப்பாட்டம் செய்து இந்தியா பூராவும் சீனவின் ஆக்கிரமிப்பைப் பற்றி அருவருப்பைத் தெரிவித்த பிறகு தான் பிரதமர் நேரு டலாய் லாமாவுக்கு அடைக்கலம் கொடுக்க முடிவு செய்தார். நேருவுக்கு சீன மோகம் அபாரமாக உண்டு; பொது ஜன அபிப்பிராயம் என்று ஒன்று ஏற்படாமல் இருந்தால் 1950-ல் ஒத்துப் பாடியது போல் சென்ற மார்ச்சு மாதத்திலும் செய்திருப்பார்.

இன்று டலாய்லாமா திபெத்திலிருந்து அகதி. பலாத்காரமாக வெளியேற்றப்பட்டவர். இந்த நிலைமைக்கு நிவர்த்தி என்ன? அவர் எப்பொழுதுமே, பண்டாரம் மாதிரி அயல்நாட்டில் பாடிக்கொண்டிருக்க வேண்டுமா என்பதுதான் கேள்வி. "கூடாது. திபெத் பிரச்னையை ஐ. நா. ஸ்தாபனத்தில் எழுப்ப வேண்டும். இன்று இல்லாவிட்டால் என்ருவது வருங்காலத்தில் டலாய் லாமா தன் நாட்டுக்குத் திரும்பவேண்டிய சூழ்நிலையை உண்டாக்கவேண்டும்" என்பது சர்வோதய தலைவர் ஸ்ரீ ஜெயப்பிரகாச நாராயணரின் கருத்து. இதையொட்டி அவர் ஆசிய ஸ்தானீகர்களை டில்லியில சந்தித்து இந்தப் பிரச்னையை ஐ. நா வில் எழுப்ப அவர்கள் ஒத்துழைப்பைக் கோரினர். ஸ்தானீகர்கள் தாங்கள் உதவி செய்வதாக வாக்குறுதி கொடுத்திருக்கிருர்கள். இதற்கும் பிரதமரின் ஆக்ஷேபனை. "ஸ்ரீ ஜெயப்பிரகாசரின் வேலை மத்திய சர்க்காருக்குக் கஷ்டங்களை உண்டாக்குகிறது" என்ருர் நேரு.

மார்ச்சு மாதத்தில் பொதுஜன அபிப்பிராயத்தை தட்டியெழுப்பியதுபோல் இப்பொழுது தொடர்ந்து பொதுஜனங்களை திபெத்தில் அக்கரை காட்டி, இந்திய சர்க்காரின் போக்கை மாற்றவேண்டியது ஜன நாயகத்தில் அக்கரை உள்ளவர்களின் பொறுப்பு. "சீன திபெத்துடன் நிற்காது. நேபாளம், பூடான், சிக்கிம் முதலிய நாடுகளில் தங்கள் நாசகார வேலைகளை ஆரம்பிப்பார்கள்" என்ற ஸ்ரீ ஜெயப்பிரகாசரின் வார்த்தைகளை, முன்னள் சோஷலிஸ்ட் பார்லிமெண்ட் மெம்பரும் மத்திய பிரதேச சோஷலிஸ்ட் கட்சி தலைவருமான ஸ்ரீ எச். வி. காமத் உறுதிப் படுத்தியிருக்கிருர். இந்த இருதலைவர்களும் சாமான்யமானவர்கள் இல்லை என்பதை இந்திய சர்க்கார் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

* * *

டில்லியில் உள்ளவர்கள் சில விதத்தில் ஆங்கிலேயர்களை ஒத்தவர்கள். இங்கிலாந்தில் சீதோஷ்ணத்தைப் பற்றி பேசுவது தான் நாகரீகப் போக்கு. அதைப் போல கோடையானலும் சரி, குளிர்காலமானலும் சரி டில்லிவாசிகள் சீதோஷ்ணத்தைப் பற்றிப் பேசா விட்டால் பொழுது போகாது. சென்ற கோடையை விட இந்த வருஷக் கோடை கடுமையாக இருக்கும். "உஸ் அப்பாடா, இந்த மாதிரி சீதோஷ்ணத்தில் எப்படி சார் மனுஷன் இருப்பது? உயிருடன் இருந்தால் தானே வேலை செய்ய முடியும்?" என்று வருடா வருடம் அலுத்துக் கொள்ளுகிருேம். இதனல் யாரும் கோடை வெயிலில் உருகி விடுவதில்லை; உயிருடன் தான் இருந்து வருகிருேம்.

இந்த வருஷம் மே மாதம் கோடை மாதமாகவேயில்லை. ஏனென்ருல் இரவுகளில் சில்லென்று காற்று வீசிற்று. அதற்குப் பிராயச்சித்தமாக ஜூன் மாதமும் இந்த மாதமும் உஷ்ணம் கடுமை. இந்தியா பூராவும் மழை பெய்கிறது. ஏன்

டில்லியைச் சுற்றிலும் கூடத்தான் மழை. ஆனால் டில்லியில் தூற்றல் கூட சரியாகப் போடுவதில்லை. டில்லியின் பஸ் மார்க்கத்தில் மணிக் கணக்கில் கார்த்திருப்போம். பஸ் வரும். காலியாகவே கூட இருக்கும். ஆனால் பஸ் நிற்குமிடம் வந்ததும் டிரைவர் கொஞ்சம் வேகமாகவே ஓட்டிக்கொண்டு போய் விடுவார். ஒருக்கால் இது வருண பகவானுக்குக் கூட தெரிந்து விட்டது போலும். உத்தரப் பிரதேசம் வரை மழையைக் கொண்டு வந்து டில்லியின் அருகே பிரேக் போட்டு மழையை பஞ்சாபிற்குக் கொண்டு போய் விடுகிறார், காஷ்மீரத்தில் வெள்ளம் என்று பத்திரிகையில் படிக்கும்பொழுது டில்லி வாசிகளுக்குச் சீதோஷ்ணம் தங்களை நையாண்டி செய்வது போன்ற உணர்ச்சி ஏற்படுகிறது. இதனால்தான் வெள்ள நிவாரண நிதிகளுக்கு வசூல் ஆவது குதிரைக் கொம்பாக இருக்கிறது. "என்னய்யா மனுஷன் சாகிறான். உண்டியைக் குலுக்கிக் கொண்டு வந்துவிட்டார்கள் தீவட்டித் தடியர்கள். அந்த வெள்ளத்தை இந்தப் பக்கம் கொஞ்சம் திருப்பச் சொல்லும் ஐயா" என்று சொல்லும் டில்லிவாசியை கடிந்து கொள்ளாதீர்கள். அவருடைய நிலையைக் கண்டு பச்சாதாபப்படுங்கள்.

* * *

"புஷ்பேஷு ஜாதி, புருஷேஷு விஷ்ணு,
நாரிஷு ரம்பா, நகரேஷு காஞ்சி"

என்ற சுலோக வரிசையில் "ஆமேஷு தசேரி" என்று சேர்த்துக்கொள்ளுங்கள். இது சொந்த கவனம். "ஆம்" என்றால் ஹிந்தியில் மாம்பழத்திற்குப் பெயர். இந்தப் பக்கத்தில் சிரௌலி, லங்கடா, பஸலி என்ற வர்க்கங்கள் உண்டு. சிரௌலி சுமாராக இருக்கும். ஆனால் காறும். லங்கடா இனிமையாக இருக்கும். பஸலி பார்வைக்கு கனிசமே ஒழிய கொட்டை பழத்தை ஒத்திருக்கும். ஆனால் இவை தசேரிக்கு உறைபோடக் காணா. சுமார் லக்ஷம் பழங்கள் கொண்ட குவியல் ஒன்று இருக்கிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். அதில் எந்தப் பழத்தை எடுத்தாலும் மற்றதைப்போல அல்வாத்துண்டு மாதிரி பிரமாதமாக இருக்கும். நம் ஊர்களில் "கல்கண்டு சாமி" என்று சொல்லுவான் கூடைக்காரன். கூடவே கொஞ்சம் கல்கண்டையும் விற்றிருக்கக்

கூடாதா என்று பிற்பாடு தோன்றும். மாம்பழ காலத்தில் நம் ஊரில் வாங்கும் பழங்களிலிருந்து கிடைக்கும் நாரைக் கொண்டு கிணற்றுக்குத் தாம்புக் கயிறு போட்டு விடலாம். மதராஸில் ருமானி என்ற பழத்தை வாசகர்களில் எவ்வளவு பேர் தின்றிருக்கிருர்களோ தெரியாது. ஒரு பழமாவது முழுதும் இனிப்பாக இருக்காது.

இந்த பீடிகை எதற்கு என்று நேயர்கள் வியக்கலாம். இந்த தசேரி மாம்பழம் வெளி நாட்டாரின் கவனத்தைக் கவர்ந்து வருகிறது. ஏற்றுமதி என்பது நடக்கக் கூடியது என்ற ஸ்திதியை இப்பொழுது அடைந்திருக்கிரோம். இந்த தசேரி மாங் கன்றுகளை ஏன் தெற்கே பயிராக்கக் கூடாது என்று தோன்றுகிறது? பெரிய தோட்டங்கள் உள்ளவர்கள் உத்தரப் பிரதேசத்து சர்க்கார் விவசாய இலாகா வுக்கு எழுதினுல் முழு விபரங்கள் கிடைக் கும். ஏன், சென்னை சர்க்கார் விவசாய மந்திரி ஸ்ரீ பக்தவத்சலத்தை அணுகினுல் அவருடைய ஒத்துழைப்பை நிச்சயம் பெற லாம்.

தசேரி மாம்பழம் தெற்கே எதேஷ்ட மாகக் கிடைக்கும் நிலைமை வந்தால் ஒருக் கால் "வடக்கு ஒழிக" கோஷமே ஒழியலாம். தசேரியைத் தின்ற பிறகு அதைக் கொடுத்த உத்தரப் பிரதேசத்தை திட்ட நிச்சயம் நாக்கு எழாது.

* * *

கோடை விடுமுறைக்குப் பிறகு சர்வ கலாசாலைகளும், கல்லூரிகளும், பள்ளிக்கூடங்களும் திறக்கப்பட்டன. கூட வே இடம் இல்லாத் திண்டாட்டமும் ஆரம் பித்துவிட்டது. ஒரு ஸ்தானத்திற்கு இரு வர் போட்டியிடுவதால் கல்லூரிகள் பள்ளிக் கூட இறுதிப் பரீக்ஷையில் சராசரியில் 50 சதம் வாங்கினவர்களுக்கே இடம் கொடுத் திருக்கிருர்கள். சுமார் 12,000 மனுதார் களில் சரிபாதி பேர்களுக்குத்தான் இடம் கிடைத்திருக்கிறது.

இந்த பிரச்னையை ஒட்டி ஒருகேள்வி கேட்கப்படுகிறது. "கல்லூரி படிப்பு நாடு கிறவர்களுக்கெல்லாம் கிடையாதா?" உண் மையில் கொடுக்க வேண்டியதுதான். ஆனுல் கல்லூரிப் படிப்பால் பயனடையக் கூடிய மாணவர்களுக்கு மட்டுமே அது கிட்டவேண்டுமே யல்லாது கேட்டவர் களுக்கெல்லாம் இடம் கொடுப்பது என்பது சாத்தியமும் இல்லை, உசிதமும் இல்லை.

டில்லி சர்வகலாசாலையின் உப அத்யக்ஷ கர் டாக்டர் வி. கே. ஆர். வி. ராவ் இந்தப் பிரச்னையை சமாளிப்பதில் மிகவும் முன் யோசனையையும் திறந்த மனப்பான்மை யையும் காட்டியிருக்கிருர். "நீ பூணூல் போட்டிருக்கிருயா? உனக்கு இடம் கிடை யாது" என்று டில்லியில் சொல்லவில்லை. ஐம்பது சதத்திலிருந்து ஆரம்பித்து கீழே யிறங்கி 42 சதம் வாங்கினவர்களுக்குக்கூட ஸ்தானம் கிடைத்திருக்கிறது. எல்லாவற் றிலும் பெரிய சாதனை டாக்டர் ராவ் பணம் உள்ள பிரபுக்களை நாடி, ஆளுக்கு சுமார் 12 லக்ஷம் ரூபாய்சுட்டி மூன்று ஆரம்ப கல்லூரிகளை உடனடியாக ஆரம்பித் திருப்பது மிகவும் போற்ற வேண்டிய விஷயம்.

கல்லூரிப் பிரச்னை வருடா வருடம் பெரிதாகும் என்பதில் சந்தேகமில்லை. அதைத் துவக்குவதில் சர்க்கார் சிரத்தை காட்டினுல் பிழைத்தது, இல்லா விட்டால் இதை முகாந்தரமாகக்கொண்டு எதிர் கட்சிகள் அவ்வப்பொழுது கிளர்ச்சிகளை ஆரம்பிக்கலாம். இளம் மனங்களில் விஷத்தைப் பாய்ச்சுவது மிகவும் எளிது.

ருஷ்யாவில் சென்ற 10 வருஷங்களில் விஞ்ஞானப் படிப்புக்கு எதேஷ்டமாக பணம் செலவு செய்து பல்லாயிரக் கணக் கான விஞ்ஞானிகளைத் தயார் செய்துள் ளார்கள். ருஷ்ய கல்வி முன்னேற்றத்தைக் கண்டு மகோன்னத நாகரீகம் மண்டிய அமெரிக்காவும் இங்கிலாந்தும் கிலி கொண் டிருக்கின்றன.

இந்தியாவில் கல்லூரிப் படிப்பு சம்பந்த மாக அறிவுக்கு எட்டும் சிந்தனையை சர்க்கார் காட்டியதாகத் தோன்றவில்லை. அதற்கு மாருக சர்க்கார் காரியாலயங்களில் பியூன் வரை பட்டதாரிகளாக இருக்க வேண்டும் என்று வற்புறுத்துகிருர்கள். "டாணு" "டாவன்ணு" என்று நோண்டும் சிப்பந்திகளுக்குப் பட்டம் தேவையாம். விஞ்ஞானப் பட்டம் வாங்கிய பட்டதாரிகள் கூட சர்க்கார் காரியாலயங்களில் குமாஸ்தா வாக முன் வருகிருர்கள் என்ருல் அது இந்தியாவைப் பிடித்த துரதிர்ஷ்டம் தான்.

மோகினிப் பெண்

திருவரங்கம் அமிழ்தன்

இராமேஸ்வரத்திற்குச் செல்லுகிறவர்கள், வழியிலுள்ள 'பாம்பன்' ரயில் நிலையத்தில் இறங்கி, வண்டி மாற வேண்டும்! பெரும்பாலும் தீர்த்த யாத்திரைக்கு வருகிறவர்கள் நேராக தனுஷ்கோடிக்குச் சென்று, சமுத்திரத்தில் ஸ்நானம் செய்துவிட்டு மீண்டும் 'பாம்பனு'க்கே வந்து, இராமேஸ்வரம் வண்டியில் ஏறுவார்கள்.

"இவ்வளவு தூரம் வந்துவிட்டு, பாம்பனிலுள்ள நண்பர் விநாயகத்தைச் சந்திக்காமல் போனால் அவ்வளவு நன்றாக இருக்காது! என்று உள்ளம்சொல்ல அவரைப் பார்த்து விட்டுத்தான் ஊருக்குப் போக வேண்டுமென்று ஏகமனதாகத் தீர்மானித்தேன்!"

என்னைக் கண்டவுடன், விநாயகம் அக மகிழ்ந்து போனார்! முக மலர்ச்சியோடு, அப்படியே என்னை மார்போடு அணைத்துக் கொண்டார்!

அந்த அம்மாள் – விநாயகத்தின் மனைவி பார்வதியம்மாள், "என்ன சுகமா, இருக்கீங்களா?" என்று குசலம் விசாரித்தார்கள்! பற்கள் இருந்திருந்தால் முப்பத்திரெண்டும் வெளியே தெரிந்திருக்கும்; அவைகள்தாம் காலவெள்ளத்தில் போய் விட்டனவே! இனிமேல் சொல்லி என்ன பிரயோஜனம்?

விநாயகம் நிரம்பவும் நல்லவர்; வயதாகி விட்டது என்று அவருடைய நரைத்த தலைமயிரும், சுருங்கிய தோலும் சொல்லுகின்

றனவேத் தவிர, உழைப்பில் — உள்ளத்தில் அவர் இருபது வயது வாலிபரேதான்!

பெரிய பனங்காடும், தென்னந் தோப்பும், வாழைத் தோட்டமும் சொந்தமாக உள்ளன! இவைகளை பார்த்துக்கொண்டு வாழ்க்கை நடத்தி வருகிறார்! ஆசைக்கு ஒரு பெண்ணும் ஆள் வதற்கு ஒரு பிள்ளையும் அவருக்கு உண்டு.

அரிசி விலையைப் பற்றியும் துணி ஏற்றத்தைப் பற்றியும் பேசினேன்! முடிவில் இரவு வண்டிக்கு ஊருக்குப் போக இருப்பதாகவும் சொல்லி வைத்தேன்.

விநாயகம் ஒன்றும் சொல்லாமல், எழுந்து விடு விடு வென்று உள்ளே போனார்! ஏதோ கதவை இழுத்து பூட்டுகிற சப்தம் கேட்டது!

கொஞ்ச நேரம் கழித்து அவர் திரும்பி வந்து, "தம்பி, எல்லா தடவையும் போல, இந்த தடவையும் என்னை ஏமாத்திட்டுப் போக முடியாது! நாலு நாளைக்கு நம்ப வீட்டிலே இருந்துட்டுத்தான் போகணும்! உங்கள் துணி மணி பையை, அறையில் வைச்சுப் பூட்டிட்டேன்!" என்றார், சிரித்தபடி விநாயகம்.

'பாம்பன்', ஒரு மணற் பிரதேசம்! எங்கு நோக்கினும், ஒரே ஓலைக் குடிசைகளாகத்தான் கண்ணிற்குத் தென்படும்!. கல் வீடுகளை, விரல் விட்டு எண்ணி விடலாம்! மீன் பிடிப்பதும், உலர்த்துவதும், வெளியூர்களுக்கு அனுப்புவதும் இங்குள்ளோர்களுடைய தொழிலாகும்!

இங்கு நெல்லும் விளையாது; வரகும் முளைக்காது! வாசலில் வண்ண வண்ண கோலங் களைத் தீட்டி மகிழமுடியாது! ஒரே மணற்புழுதி தான்! தென்னையும் பனையும் போட்டி போட்டுக் கொண்டு வளர்ந்திருக்கும்! மாலை வேளையில் கொல்லையில், மங்கையர்கள், 'கொல்' லென்று சிரிப்பதை போல், முல்லை மலர்கள் மலர்ந்திருக் கும்! வெற்றிலைக் கொடியின் செந்தளிர்களின் மீது, மஞ்சள் வெயில் படும்போது, அவை கள் தங்கத் தகடுகளாக மின்னும்! ஆகா, அந்த இன்பக் காட்சிக்கு, உலகில் ஈடு இணை உண்டா!

இரவு பத்து மணி.

திடீரென்று, ஒரு வித அழுகை சத்தம் கேட்டது! வெகு நாழிகைக்குப் பிறகும் கேட்டது! பல மணி நேரங்களுக்குப் பிறகும், தொடர்ந்து கேட்டுக் கொண்டேயிருந்தது! அந்தக் குரலில் கலந்துவரும் பொருளை புரிந்து கொள்ள முடியவில்லை!

தவிழ்ந்து வரும் அழுகையிலும் ஒருவித ராகலயம் இழையோடியது! இப்படி, ஒரு மணி இரண்டு மணி நேரமா? நடுச் சாமம் வரைக்கும் அழுகுரல் கேட்டது! பிறகு, சட்டென்று நின்று விட்டது. எனக்கு ஒன்றும் புரியவில்லை! குழம்பிய உள்ளத்தோடு, தூங்கிப் போனேன்.

பொழுது விடிந்ததும் விடியாததுமாக, விநாயகத்திடம் இரவில் கேட்ட அழுகையைப் பற்றி வினவினேன். அவர், வெகு அலட்சியமாக, "நீங்க, ஒரு பைத்தியக்கார புள்ளைங்க. யாரோ எதுக்கோ அழுதா, அதைப் போயி கேட்டு கிட்டு...!" என்று சொல்லிவிட்டு, வாழைத் தோட்டத்திற்குத் தண்ணீர் பாய்ச்சப் போய் விட்டார்.

எப்படியாவது இரவில் கேட்ட அழுகையின் மர்மத்தை தெரிந்துக் கொள்ள வேண்டுமென்று, உள்ளம் பறந்தது!

பார்வதியம்மாள், காலை ஆகாரத்தைப் பரிமா றும்போது, மர்ம அழுகையைப் பற்றி ஆரம்பித் தேன். அந்த அம்மாள், நான் சொல்லுவதை பூராவும் கேட்டுவிட்டு, பயந்தபடி பதில் சொன் னார்கள். அந்த பதில், எனக்கு ஆச்சரியத்தை யும் அச்சத்தையும் அளித்தது!

யாரோ மோகினி பிசாசாம்; ராத்திரி பூராவும் 'லைட் ஹவுஸ்' அடியில் உட்கார்ந்து அழுது கொண்டிருக்குமாம்; யாராவது அந்த சமயம் அங்குப் போனால், அடித்துக் கொன்று விடுமாம்!

ஈக்களைப் பிடிக்க சிலந்தி, வலையை விரிப்பது போல், மக்களைப் பிடிக்க, இந்த மாயக்காரி ஒப்பாரி வைக்கிறாளாம்! "ஐயோ, பாவம்! இந்த பொண்ணு இப்படி தனியாக உட்கார்ந்து அழுதுகிட்டு இருக்கே" என்று இரக்கப்பட்டு அருகில் போனால், ஆளையே தீர்த்துக் கட்டி விடுவாளாம். எப்படியிருக்கிறது, கதை!

அந்த மோகினியிடம் பேசிப் பார்த்தால் என்ன? அவள், நம்மை என்னத்தான், செய்து விடுவாள்? இந்திர மண்டலம், சந்திர மண்டலமெல்லாம் போகிறார்களே, நாமும் பிசாசு மண்டலம் வரைக்கும் போய் வந்தால் என்ன? இவ்வித மெல்லாம் என் எண்ணம் சுழன்றது.

"பிசாசிடம் பயந்தால்தான், அது நம்மை கொல்லும்; நாம் தைரியமாக இருந்தால், அது நம்மிடம் பயந்து பேசும்!" என்று, சின்னவயதில் தாத்தா சொன்னது நினைவிற்கு வந்தது!

பகற்பொழுதை, பிடித்து தள்ளப்பட்ட பாடு, பெரும் பாடாகப் போய் விட்டது! மாயப் புன்னகை வீசி, மாலைப் பொழுது வந்தது! பல மணி நேரங்கழித்து, இரவு, கண்ணகை காட்டி மனிதகுலத்தை உறக்க உலகிற்கு அழைக்க வந்தது!

* * * *

மனித குரலோ—நாயின் குரைப்போ கேட்க வில்லை! காற்று 'விர்விர்'ரென்று அடித்துக் கொண்டிருந்தது; கடலின் அலறலும் கேட்டது! நேற்றிரவு கேட்ட அதே அழுகை குரல் கேட்க தொடங்கியது! எனக்கு 'குப்'பென்று வியர்த்து விட்டது! உடனே எழுந்து, கடற்கரையோர மாக நடந்தேன்.

வெண்ணிலவு மேகங்களிடையே நுழைந்து விளையாடிக் கொண்டிருந்தது! பாம்பொன்று,

'சரசர'வென்று தாழைப்புதரின் பக்கம் ஓடியது; கரையில் உலவிக்கொண்டிருந்த நண்டுகள், காலடியோசையைக் கேட்டு 'டபக்'கென்று வளைக்குள் நுழைந்தன.

'லைட் ஹவுஸ்' பக்கம் வந்தவுடன் கற்சிலையைப் போல அப்படியே ஸ்தம்பித்து நின்றுவிட்டேன். வியப்பும் பரபரப்பும் உள்ளத்தில் போட்டி போட்டன!

வெள்ளை புடவை உடுத்திக்கொண்டு, அழகே உருவான பெண், மணலில் உட்கார்ந்திருந்தாள்! அவளது சந்தனத் தோள்களில் அவிழ்ந்த கூந்தல் தவழ்ந்து கொண்டிருந்தது. விழிகளிலிருந்து தாரை தாரையாகக் கண்ணீர் வடிந்து காய்ந்த மணலை ஈரமாக்கிக் கொண்டிருந்தது.

என்னைக் கண்டதும், அழுகையை நிறுத்தினாள்! சேலைத் தலைப்பால் முகத்தைத் துடைத்துவிட்டுக்கொண்டு, "யார்—நீங்கள்?" என்று கேட்டாள். அப்போது, அவள் கண்களில் ஜொலித்தது கோபத்தின் ஜ்வாலையா அல்லது இதயத்தின் குமுறலா? என்று தெரியவில்லை.

"ஆசாபாசங்களில் அடிபட்டு. முடிவில் பிடி சாம்பலாகிற மனிதரில் ஒருவன்!" என்றேன். என் குரலின் மாற்றம் எனக்கே வியப்பை அளித்தது.

நான் கூறியதைக் கேட்டுவிட்டு,பதிலொன்றும் சொல்லாமல், கடலையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்! அவள் கவனத்தை, என் பக்கம் திருப்ப, லேசாகக் கனைத்தேன்! முயற்சி வீணாகவில்லை!

"நீ யார்? எதுக்காக இப்படி ராத்திரி பூராவும் அழுகிறாய்?" என் தொண்டை கரகரத்தது.

"நானா? நானொரு மோகினி!" என்றாள். அவளுடைய விழிகள் என்னைக் கூர்ந்து பார்த்தன.

"ஊர்வசி, ரம்பை என்று சொல்லுகிறார்களே, அந்த தேவலோகத்துச் சுந்தரிகளோடு சேர்ந்த மோகினியா அல்லது கன்னிப்பெண்ணாகயிருந்து, தற்கொலை செய்துகொண்டு. பேயாக அலையும் மோகினியா?" என்று கேட்டேன், உடம்பை வியர்வை நனைத்தது.

"நான் மோகினி பிசாசுதான்!" என்று அழுத்தமாகச் சொன்னாள்.

அவள் தன்னை பிசாசு என்று சொன்னவுடன், 'கடகட'வென்று சிரித்தேன். என் நகைப்பு, அவளுடைய முகத்தைச் சுளிக்கச் செய்தது.

"ஏன், என்னைப் பார்த்தால், பிசாசாகத் தெரியவில்லையா?" அவளுடைய குரலில் வேதனை ஒலித்தது.

"மயிற்தோகையோ—மானின் கூந்தலோ, என்று சொல்லத் தோன்றும் குழல்கற்றையும்; வளைந்த கரும் புருவங்களும்; மலர்ந்த விழிகளும், உன்னை அழகுப் பெண்ணாக எனக்கு அறிமுகப் படுத்துகிறதே தவிர, பிசாசாகக் காட்டவில்லை!"

ஊரிலே, என்னை மோகினி பிசாசுன்னு சொல்லுராங்க, அதனாலே நானும் கேட்டேன்! ...அது சரி, இங்கே நீங்க எதுக்கு வந்தீங்க?"

"நீ யாருன்னு பார்த்துட்டுப் போகலாமென்றும், முடிந்தால் உன் கஷ்டத்தைப் போக்கலாமென்றும் வந்தேன்!"

அவள் முகத்தை, கைகளால் மூடிக்கொண்டு கேவி கேவி அழுதாள். எனக்கு என்ன செய்வ தென்று தெரியவில்லே! நாம் தான் இண்டி கிளறி விஷயத்தை கிரகித்துக் கொள்ளவேண்டுமென்று நினைத்தேன்.

"ஏன், உங்க அப்பா அம்மா யாராவது செத் துப் போயிட்டாங்களா?"

"இல்லே!"

"அப்படின்னு, ஒன் குழந்தைக்கு ஏதாவது?"

"எனக்கு இன்னும் கல்யாணமே ஆகலே!"

இனிமேல், அவளிடம் என்னகேள்வி கேட்பது என்று தெரியாமல் விழித்தேன். பிறகு கொஞ் சம் துணிவோடு, "உன்மீது ஆசை வைத்தவன், கடைசிலே உன்னே ஏமாத்திட்டுப் போயிட் டானு?" என்று கேட்டே விட்டேன்.

"அவர் ஏமாத்தல்லே; விதிதான் எங்களே ஏமாத் திடுச்சு!" வார்த்தை ஒவ்வொன்றிலும் அனல் வீசியது.

"எப்படி?" என்று கேட்டு, 'டக்' கென்று நிறுத்தினேன்.

அவள் பதிலொன்றும் சொல்லவில்லே! நிமிஷத்திற்கு நிமிஷம் அவள்முகம், ஒவ்வொரு விதமாக உருவெடுத்தது! அவளுடைய உள்ளத் துப் போராட்டங்களே, விழிகள் நன்ருக வெளிப் படுத்தின. நானும் பேசாமல் ஊமை போலிருந் தேன். தூரத்திலிருந்து நரிகள் ஊளேயிடும் சப்தம் கேட்டது.

வெகு நேரத்திற்குப் பிறகு, என்னே உற்றுப் பார்த்தாள்! நானும் விடாமல், அவள் முகத் தையே பார்த்தேன். 'சட்'டென்று தலே குனிந் தாள். பிறகு, மணலில், தனது எழில் விரலால் கோடிட்டுக்கொண்டே சொன்னுள்.

"இரண்டு மாதத்துக்கு முந்தி, இதே ராத்திரி நேரத்துக்கு அவர் வந்தார். ஒவ்வொரு நாள் ராத்திரியும், நாங்க, ரெண்டுபேரும் இந்த இடத் தில்தான் சந்திப்போம்; பேசுவோம்! பிறகு அவர், கட்டுமரத்திலே ஏறிக்கொண்டு மீன் பிடிக்க போயிடுவார்! மறுநாள் காலேயிலே வந்தாலும் வருவார்; சாயங்காலம் வந்தாலும் வருவார்; அன்னிக்கு மீன் தென்படுகிறதைப் பொருத்திருக்கும் அது!

"வழக்கம் போல, அன்னிக்கும் வந்தார், வெகு நேரம் வரைக்கும் ஆசையோடு பேசி ளேம்! முடிவிலே, எழுந்துப் போகும் போது,.... வந்து... வந்து...!" சொல்லிக்கொண்டு வந்தவள், தொடர்ந்து மேலே சொல்லாமல் தயங்கினுள்.

"சொல்லக் கூடாத விஷயமென்றுல், வேண் டாம்! அதை விட்டு விட்டுச் சொல்லு!" என்றேன்.

தயங்கி தயங்கி மெதுவாக, நாணத்தோடு சொன்னுள். "அவர், என் மேனியைத் தழுவி, பத்து முத்தங்களே கன்னங்களில் மாறி மாறி வாங்கிக்கொண்டு கட்டுமரத்தில் ஏறிக்கொண் டார்.

"துடுப்பைக் கைகளில் எடுத்துக்கொண்டே "சொர்ணம் உன்னே மனேவியா அடையப் போறது, நான் செஞ்ச பாக்கியந்தான்! நாளேக்கு இன்னேரம், இப்போ நீ கொடுத்த பத்து முத்தத்துக்கும் வட்டியாக பத்து முத்தம் சேர்த்து, தந்துடுறேன்!" என்ருர் சிரித்துக் கொண்டே.

"எனக்கு, ஒரே வெட்கமாக போய்விட்டது! பதிலுக்கு ஏதாச்சியும் சொல்லனும்கிறத்துக் காக, "குறைச்ச வட்டித்தானு?" என்றேன் குறும்பாக.

"குறைச்ச முதலுக்கு அதிக வட்டி வாங்கற பேராசைக்காரி!" என்ருர். அவர் சொன்னதைக் கேட்டு நான் சிரித்தேன். சிறிதுநேரத்தில் கட்டு மரம் கடலில் மறைந்துவிட்டது!

"மறுநாள் காலேயிலே அவர் வரவில்லே; சாயந்திரமும் வரவில்லே! இரவு முழுதும் வருவார், வருவார் என்று இங்கேயே காத்திருந் தேன்! பொழுது விடிந்தது! என் கால் ஓடிச்சுப் போனதுதான் மிச்சம்! கண் பூத்துப் போனது தான் கண்டபலன்! அவர் வரவேயில்லே!

"நாலு நாள் கழித்துதான், நடந்து தெரிந்தது! ஐய்யோ, கடவுளே! அதை வாயாலே எப்படிச் சொல்லுவேன்...!" சொர்ணம் கதறினுள்; தலே யில் அடித்துக் கொண்டாள்! மணலே வாரித் தூற்றினுள்.

அதன் பிறகு, தான் வளர்ந்ததையும், வாழ்ந்த தையும் காதல் கை கூடியதையும், முடிவில் கலேந்து போனதையும் ஒன்று விடாமல், சொர்ணம் சொன்னுள்.

* * *

முனியாண்டி, தன் பெண் சொர்ணத்தை கண்ணுங் கருத்துமாகக் காத்து வந்தான். தாயில்லாத பெண் என்பதால், அவள்மீது அள வற்ற வாஞ்சை அவனுக்கு. சொர்ணமும், தன் தகப்பனுரின்மீது, உயிரையே வைத்திருந்தாள்!

செல்லமுத்துவும் முனியாண்டியும் ஒன்ருகவே கட்டுமரத்தில் சென்று, மீன் பிடிப்பார்கள். கிடைக்கிற லாபத்தை இருவரும் சமமாகப் பிரித் துக்கொள்ளுவார்கள். இதுவரைக்கும், இவர்களி டையே சண்டை சச்சரவு ஏற்படவேண்டுமே! உம்; ஒன்றும் கிடையாது.

செல்லமுத்து முனியாண்டியின் ஒற்றுமையைக் கண்டு ஊரே பொருமையும் வியப்பையும் அடைந்தது!

"தன் பொண்ணு சொர்ணத்தை, செல்லமுத்து வின் கழுத்திலே கட்டி வைக்கத்தாண்டா, அவ னிடம் இப்படி குழைஞ்சுகிட்டு இருக்கான் முனி யாண்டி!" என்று ஒரு சிலரும்; பயல், அந்த சொர்ணத்தை கட்டிகிடத்தான், கிழவன் கிட்டே வளேஞ்சு நெளிஞ்சு கொடுத்துக்கிட்டு வர்ரான்!

என்று பலரும் பேசிக்கொண்டார்கள். ஊராரின் பேச்சிலும், ஓரளவு உண்மை இருக்கத்தான் செய்தது!

சொர்ணம் பருவ மினு மினுப்பில், புதிய தங்கவிக்ரகத்தைப்போல 'பள பள' வென்று ஜொலித்தாள்!

அவளுடைய இதழ்களின் இடுக்கிலுள்ள முத்துக்குவியலும்; சிரிப்பிலே மிதக்கும் அலைகளின் வெண்நுரையும்; கழுத்திலே காணும் சங்கு அமைப்பும், செல்லமுத்துவை போதைக் கடலில் தள்ளிவிட்டன!

சொர்ணம், தன் விழி வலை வீசி, செல்லமுத்துவை பிடித்தாள்! அடைய முடியாத வலம்புரி சங்கை அடைந்து விட்டதைப்போல மனமகிழ்ந்தான் செல்லமுத்து.

சொர்ணமும் செல்லமுத்தும் ஆரம்பத்தில், கடைவிழி மொழியாலும், கனி இதழ்ச் சிரிப்பாலும் கருத்தினைத் தெரிவித்துக் கொண்டார்கள்! பிறகு, தங்களுடைய நாணத்தைச் சிறிது நழுவவிட்டு, வாயினால் பேசினார்கள்! அதன் பின்னர், ஒவ்வொரு இரவும் 'லைட் ஹவுஸில்' சந்தித்துப் பழக ஆரம்பித்தார்கள்.

இருவர்களுடைய இன்ப வாழ்விலும் புயலாக வந்து புகுந்தான், டீக்கடை சிங்காரம்! கொஞ்சம் பசையுள்ளவன்; முரட்டு மீசையுள்ளவன்; பெண்கள் மீது தீராத ஆசையுள்ளவன்.

ஒரு நாள், சிங்காரத்தின் கழுகு கண்களில் பட்டு விட்டாள், பச்சைப் புருவான சொர்ணம்! பிறகு, சிங்காரத்தின் மனம் சும்மாவா, இருக்கும்? அவள் மீது அடங்காத இச்சையைக் கிளறி விட்டது!

முனியாண்டியிடம், ரூபாய் நோட்டுகளை காட்டி, அவன் மனதை நோட்டம் பார்த்தான், சிங்காரம்! கண்டபடி திட்டி, கன்னத்திலும் நான்கு கொடுத்து அனுப்பினான், முனியாண்டி!

தனிமையில் சொர்ணத்திடம், தங்க நகைகளை காட்டி, பல் இளித்தான் சிங்காரம். அவன் முகத்தில் காறி உமிழ்ந்து விட்டு போய் விட்டாள் சொர்ணம்.

இவ்விதம் அவமானப்பட்ட பிறகு சிங்காரம் அடிபட்ட வேங்கையைப்போல் சீறினான்! "அந்த குடும்பத்தையே ஒழித்து கட்டிவிடுகிறேன்!" என்று உறுமினான்.

சிங்காரத்தின் பகை வளர்வதைக்கண்ட சொர்ணமும் செல்லமுத்தும் சீக்கிரமே திருமணம் செய்துகொள்ளவேண்டுமென்று தீர்மானித்தார்கள்! அதன் பிறகு அவர்களுடைய பேச்சு, திருமணத்தைப் பற்றியும், குடும்பம் நடத்தப் போவதைப் பற்றியும் குழந்தை வளர்ப்பதைப் பற்றியும் சென்றது!

நான்கு நாட்களாகக் காய்ச்சலில் படுத்துவிட்டான் முனியாண்டி! தனியாக மீன் பிடிக்க செல்லவேண்டிய நிர்ப்பந்தம் செல்லமுத்துவுக்கு ஏற்பட்டது! வழக்கம்போல், லைட் ஹவுஸில் இருவரும் சந்தித்தார்கள்! கொஞ்சிப் பேசினார்கள்!

மறுநாள் வந்து, வாங்கின முத்தத்திற்கு, வட்டியும் முதலும் சேர்த்துத் தருவதாகச்சொர்ணத்திடம் கூறிவிட்டு கட்டுமரத்தை கடலில் செலுத்தினான் செல்லமுத்து! நேரப்போகும் சதியை எண்ணி விதி சிரித்தது; இருவர்களுடைய காதுகளிலும் சிரிப்பொலி கேட்கவே இல்லை!

ஒவ்வொரு நாளும் செல்லமுத்து வருவான், வருவான் என்று எதிர்பார்த்தாள் சொர்ணம். அவன் வராமல் போகவே வாடினாள். திமிங்கலம் விழுங்கி விட்டதா, திருக்கை மீன், வாலால் அடித்துக் கடலில் வீழ்த்தி விட்டதா? என்று புலம்பி தவித்தவளுக்கு தூரத்தில் செல்லமுத்துவோடு சென்ற சின்னப்பையன்' வருவது, சிறிது ஆறுதல் அளித்தது!

ஆனால், அவன் சோர்ந்த முகத்தோடு சொர்ணத்திடம் சொன்னான். "செல்லமுத்து அண்ணாச்சியை டீக்கடை சிங்காரத்து ஆட்கள், நடுக்கடலிலே குத்திப் போட்டுட்டு ஓடிபோயிட்டாங்க! செல்லமுத்து செத்துப் போயிடுச்சு!" 'ஓ'வென்று ஒப்பாரி வைத்தான் சின்னப்பையன்.

சின்னப்பையன் சொன்னதை, சொர்ணத்தால் நம்ப முடியவில்லை! சிறிதுநேரம் பிரமை பிடித்தவள்போல் நின்றாள்! பிறகு சிறிது நேரத்தில் சுயநினைவு வந்தவுடன் கல்லில் முட்டிக் கொண்டாள்; மோதிக் கொண்டாள்; தரையில் விழுந்து புரண்டாள்! என்ன செய்வது? என்ன தான் அழுதாலும் மாண்டவர்கள், மீண்டும் வரப் போகிறார்களா?

அதன் பிறகு, சொர்ணம் நல்ல சித்தத்தை இழந்தாள்; உண்பதை மறந்தாள்; உறக்கத்தை துறந்தாள்! இருட்டியதும், 'லைட் ஹவுஸுக்கு' வந்து அழுகிறாள்!

இந்த அழுகைதான், அவளுக்கு ஆறுதல் அளிக்கிறது; நிம்மதியைத் தருகிறது; உயிர் போசாமல் பாதுகாக்கிறது!

சொர்ணத்தின் விழிகள், பொல பொல வென்று கண்ணீரை உகுத்தது! என் கன்னங்களில் வழிந்தோடும் நீரை துடைத்துக் கொண்டேன்! சந்திரன், அடிவானத்தில் அடியெடுத்து வைத்துக் கொண்டிருந்தான். எங்கயோ, சேவல் கூவும் சத்தம் கேட்டது.

நாங்களிருவரும் ஒன்றும் பேசாமல் வெகு நேரம் வரைக்கும் மௌனமாக உட்கார்ந்திருந்தோம். பிறகு, அவளே என்னைப்பற்றி விசாரித்தாள்.

ஊரையும் பெயரையும், விநாயகத்தின் வீட்டில் தங்கியிருப்பதையும் சொன்னேன்.

"ஓ, எனக்கு விநாயக தாத்தாவை, தெரியுமே!" என்று சொன்னாள் சொர்ணம். அப்போது அவள் முகம் சிறிது தெளிவாக தென்பட்டது.

என்ன நினைத்துக் கொண்டாளோ, என்னவோ, என்னிடம் கூட சொல்லாமல் கிழக்கேயுள்ள மணற்மேட்டை நோக்கி ஓடினாள் சொர்ணம்! நானும் சோர்ந்த உள்ளத்தோடு, வீட்டிற்கு வந்து திண்ணையில் படுத்தேன்.

விடிந்ததும் வெகு நாழிகையாகியும், நான் எழுந்திருக்காமலிருப்பதைக் கண்டு விநாயகம் தட்டி எழுப்பினார். என் உடம்பு சுடுவதைக் கண்டு திடுக்கிட்டுப் போனார்!

"என்னங்க தம்பி, உடம்புக்கு? சொல்லக் கூட இல்லாமே, இராத்திரி பூராவும் எங்கே போயிருந்திங்க?" என்று பரபரப்போடு கேட்டார் விநாயகம்.

இரவு கண் விழித்த காரணத்தாலும் எதிர் பாராமல் ஏற்பட்ட அதிர்ச்சியினாலும் நடுக்கு ஜுரம் கண்டது! அந்த ஊரில் டாக்டரா— வைத்தியரா? பார்வதியம்மாள் உறைப்பான கஷாயத்தை கொண்டுவந்து கொடுத்தார்கள்!

இரண்டு நாட்களும் எழுந்திருக்க முடியாமல் கழிந்தன! இரவில் கேட்கும் சொர்ணத்தின் அழுகை மட்டும் நிற்கவில்லை, இரவு முழுதும் கேட்டுக்கொண்டுதான் இருந்தது.

மூன்றும் நாள் விடிந்தது! உடம்பும் ஓரளவு குணமாகியிருந்தது. எப்படியாவது இன்றிரவு சொர்ணத்தைச் சந்தித்துவிட வேண்டுமென்று தீர்மானித்துக்கொண்டேன்.

மாலை மறையப்போகும் நேரம்! டீக்கடை சிங்காரத்தைப் பார்த்துவிட்டு வரலாமென்று கடை வீதிக்குப் போனேன்! அங்குள்ளவர்களிடம் கேட்டு, சிங்காரம் யார் என்பதை தெரிந்துக்கொண்டேன்,

கிராமபோன் பெட்டியில் பாடிக்கொண்டிருக்கும் பாட்டிற்குத் தகுந்தபடி, 'கல்லாபெட்டி' யில் தாளம் போட்டுக்கொண்டிருந்தான் சிங்காரம். அவனுடைய கிராப்பும் முக அமைப்பும் பார்ப்போரை பயம் கொள்ளச் செய்யக் கூடியவை,!

என்னைக் கண்டவுடன், "என்னங்க ஸார் தோசைப் போடச் சொல்லட்டுமா?... வெளியூரு போலயிருக்கு" என்று விசாரித்தான், சிங்காரம்.

"அதெல்லாம் ஒன்றும் வேண்டாம். லைட்டாக காபி போட்டுக் கொடுக்கச் சொன்னால் போதும்! என்றேன். என்னை அவன் தவறாக நினைத்துக் கொள்ளக்கூடாது என்பதற்காக.

"ஐயாவுக்கு ஸ்பெஷலா காபிபோடு!" என்று உரக்க குரல் கொடுத்தான்.

ஐந்து நிமிஷத்தில் காபி வந்தது. என்னமோ காபி என்று சொல்லிவிட்டேனே! அது வெறும் வெந்நீர் என்று சொன்னால் பொருந்தும்! என்ன செய்வது, எனக்கு விஷயம் முக்கியம்! 'கட கட' வென்று வயிற்றுக்குள்ளே விட்டேன், வெந்நீரை.

மெதுவாக சிங்காரத்திடம் வாய் விட்டேன். "இராத்திரியெல்லாம் ஒரு பொம்பளை, அழுவுற குரல் கேட்குதே, அது ஏன்?" அவன் முகம் போகிற போக்கை கவனித்தேன்,

சிங்காரம் அக்கம்பக்கம் பார்த்துக்கொண்டே சொன்னான். "அதை கேக்கிறீங்களா ஸார்! அந்த பொண்ணு பேரு சொர்ணம்! அது, ஒரு பயலைக் கட்டிக்கணும்னு ஆசைப்பட்டுச்சு! ஆனா, அவங்க அப்பன் முனியாண்டிக்கு, அதை வேறொரு பணக்காரனுக்கு கல்யாணம் செய்து கொடுக்கணும்கிற ஆசை! அப்பன் இஷ்டத்துக்கு பொண்ணு ஒத்துக்கில்லை!

"எல்லாத்துக்கும் காரணம், தாம் பொண்ணு, ஆசைப்படுகிறவன்தான்னு, நினைச்சு, ராத்திரியோடு ராத்திரியா, அவனை கொன்று, பனங்காட்டிலே புதைச்சுட்டான் முனியாண்டி.

"விசயம் சொர்ணத்துக்கு தெரிஞ்சவுடன் பைத்தியம் புடுச்சுடுச்சுது அந்தப் பொண்ணு தான் ராத்திரி அழுவுது" என்று சொல்லிவிட்டு, துணியால் முகத்தைத் துடைத்துக்கொண்டான்.

"என்னடா இது! கிணறு வெட்ட பூதம் கிளம்புதே! இவன் என்னடான்னா, செல்லமுத்துவைக் கொன்றது முனியாண்டி என்று சொல்

லுகிருன்!" என்று குழப்பிய மனத்துடன். பாம்பன் பாலம் பக்கம் போய் கரையில் உடைந்து கிடக்கும் படகில் உட்கார்ந்துகொண்டேன்.

வெற்றிலையை போட்டு குதப்பிக்கொண்டே, சந்தன பொட்டுக்காரர் ஒருவர், அருகில் வந்து உடகார்ந்தார். நான் அவரைக் கவனிக்காதது போல், வேருெரு பக்கம் பார்த்துக்கொண்டிருந்தேன்.

"எங்க ஸார்! சிங்காரத்துக்கிட்டே, சொர்ணத்தைப்பற்றி கேட்டுகிட்டு இருந்தீங்களே...?" இப்படி நேரிடையாகவே கேட்டார், அந்த ஆள்.

துப்பு அறியும் ஆளாக இருக்குமோ? என்று சந்தேகம் தட்டியது! நான் எதையும் வெளிக்காட்டிக் கொள்ளாமல், "ஆமாம்!" என்றேன் அத்துடன் வாயை மூடிக்கொண்டு சும்மா இருந்திருக்கக் கூடாதா?

"செல்லமுத்துவைக் கொன்றவன், சொர்ணத்தின் அப்பன் முனியாண்டிதானுமே!" என்று சொல்லி விட்டேன்.

"எந்த மடைபய சொன்னவன்? சிங்காரம் சொன்னது அத்தனையும் பொய்! அவன் பேச்சை நம்பாதீங்க!" என்ருர். சந்தனபொட்டுக்காரர் ஆவேசத்துடன்.

எனக்குப் புதிருக்குமேல் புதிராகத் தோன்றியது! "அப்படின்னு, யார்தான் செல்லமுத்துவை கொலை செய்ததென்று நீங்கதான், சொல்லுங்களேன்!" என்றேன் ஆவலோடு.

"அப்படி கேளுங்க, நான் சொல்லுறேன் நிஜத்தை! இந்த சிங்காரம் போன மாதந்தான் "தங்கம்" என்ற ஒரு பணக்கார பொண்ணை கல்யாணம் செஞ்சுக்கிட்டான்! முதல்லே இந்த பொண்ணை கட்டிக்க மாட்டேன்னு, கடைசி வரைக்கும் மறுத்துட்டான்!"

"அதுக்கும் கொலைக்கும் என்ன சம்பந்தம்?" என்று இடையில் கேள்வி கேட்டேன்!

"இருக்கு ஸார் இருக்கு! தங்கத்து அண்ணன் வீரபத்திரன் ஒரு பொல்லாத பயல்! அவன் கிட்டே, செல்லமுத்து, தன்னை கையை புடிச்சு இழுத்தான்னு ஒரு பொய்யை சொல்லி விட்டாள் தங்கம்! சும்மா இருப்பானு, வீரபத்திரன்! "தங்கச்சியை கெடுக்க துணிஞ்ச அந்த செல்லமுத்துவை, வெட்டிப் போட்டு, மீனுக்கு விருந்து வெக்கிறேன்னு எல்லார் கிட்டையும் சொல்லிகிட்டு திரிஞ்சான், அதே மாதிரி செஞ்சும் புட்டான்!"

எனக்கு சொல்ல முடியாத குழப்பமாக இருந்தது. "எங்க நீங்க சொல்லுறதெல்லாம் நிஜந்தானு?" என்று சந்தேகத்தோடு சந்தன பொட்டுக்காரரிடம் கேட்டான்.

"நம்புனு நம்புங்க, நம்பாட்டி போங்க! எனக்கு என்ன வந்தது!" என்று சொல்லிவிட்டு, விடு விடு வென்று போய் விட்டார்.

எனக்கு செல்லமுத்துவை கொலை செய்தது, யார் என்று புரியவில்லை! சொர்ணம், சிங்காரம் என்கிருள்! சிங்காரம், முனியாண்டி என்கிருன்!

இந்த சந்தனப் பொட்டுக்காரனே, தங்கத்தின் அண்ணன் வீரபத்திரன் என்கிருன்! எதை நம்புவது? எதை விடுவது!

இரவு பத்து மணியானதும் கடற்கரைப் பக்கம் போனேன். நல்ல நிலவு.

லைட்ஹவுஸை நெருங்கியும் அன்றுபோல் அழுகை கீதம் கேட்கவில்லை; ஆண் குரலும் பெண் குரலும் மாறி மாறிக் கேட்டது! எனக்கு ஏற்பட்ட அதிர்ச்சியில், மூச்சுவிடக்கூட சிரமமாகயிருந்தது.

ஓர் ஆடவன் மடியில் சொர்ணம் படுத்திருந்தாள்! அடேயப்பா, சொர்ணத்தின் முகத்தில் தான் என்ன குதூகலம்!

இவன்தான் சொர்ணத்தின் காதலன் செல்லமுத்துவா? இவன், இறந்து போகவில்லையா? ஒருத்தர் மற்றவர்மீது பழி சுமத்தியது சந்தேகத்தின் பேரிலா? உண்மை என்னவாக இருக்கும்? மேலும் மேலும் சிக்கலாகிறதே தவிர விடுபடுவதாக தெரியவில்லையே! மர்மக் கதைகளில் வருவதுபோல் அல்லவா திடுக்கிடும் சம்பவங்கள் நிகழ்ந்து கொண்டேயிருக்கின்றன!

இருவரும் என்ன பேசிக் கொள்ளுகிருர்கள் என்பதை அறிந்துகொள்ள அருகிலுள்ள முட்புதரில் ஒளிந்துக் கொண்டேன்.

செல்லமுத்து நா, தழு தழுக்க, "சொர்ணம் அன்னிக்கு நீ கொடுத்த முதலுக்கு வட்டியும் முதலும் சேர்த்து தரணும்னுதான். மறுநாள் ராத்திரி ஆசையோடு கரைக்கு ஓடி வந்தேன்.

"நான்தான் ராத்திரி பூராவும் இங்கே இருந்தேனே, நீங்க வரலேயே!" என்று செல்லமுத்துவின் பேச்சில் குறுக்கிட்டாள் சொர்ணம்.

"நேராக நான் இங்கே வரலே சொர்ணம்! வழியிலே ஒரு சேதி கேள்விப்பட்டு, என் குடிசையைத் தூர இருந்தே பார்த்தேன். அங்கே ஏழெட்டு போலீஸ்காரங்களும், சுங்க அதிகாரிகளும் ஆட்களும் நின்னுக்கிட்டிருந்தாங்க. சிங்காரமும், அவங்களோட இருந்தான்.

"அந்த சிங்காரம், யாருக்கும் தெரியாமல் ஒரு பெட்டி நிறைய சிலோன் சாமான்களான், பேனு, பேட்டரி, சேலே எல்லாம் வைச்சு, என் குடிசைக் குள்ளே கொண்டுவந்து வைச்சிருக்கான்! பிறகு நல்லவன்மாதிரி, நான் கள்ளக் கடத்தல் செய்து வியாபாரம் செய்கிறேன்னு, சுங்க அதிகாரிகளுக்குத் துப்பு கொடுத்திருக்கான்!"

"பாவிமகன், அவன் நாசமா போக, தலையிலே இடி விழ!" கைகளை நெறித்தாள் சொர்ணம்.

"நான் என்ன செய்வேன் சொர்ணம்! அவங்க கிட்டே அம்புட்டுகிட்டா, ரெண்டு வருஷமோ நாலு வருஷமோ செயிலே தள்ளிடுவாங்க; அப்புறம் என்ன செய்வே! அதனலே வந்த வழியே திருப்பி வந்து, கட்டுமரத்திலே ஏறி நடுக்கடலுக்கு போயிட்டேன் ஒன் முகத்தைகூட பார்க்காமே! இத்தனே நாளும் இந்த உப்புக்கடலிலே அலேஞ்சேன்! குடிக்க தண்ணியில்லாமே திங்க சோறு இல்லாமே கஸ்டப்பட்டேன், நம்ப சின்னப் பையன்தான், தினமும் கரைக்கு வந்து சோறும் தண்ணியும் கொண்ணுந்து கொடுத்தான்!"

"சின்னப் பையனு?" சொர்ணத்தின் வாய் மட்டும் கேள்வியைக் கேட்கவில்லே முகமும் கேட்டது!

"ஆமா! ஏன் அவனேப்பத்தி கேக்கிறே!"

"அவன் சிங்காரம் ஆள்வைச்சு ஓங்களே கொலே செஞ்சுட்டான்லே" சொன்னன்!

"நான்தான் எல்லோருகிட்டேயும் சின்ன பையனே அப்படிச் சொல்லச் சொன்னேன். இந்த ஊர் ஜனங்க, சிங்காரத்தை கொலேக்காரன்னு தூத்தனும்னு ஆசைப் பட்டேன்!"

"இனிமே, எங்கே போனலும் என்னேயும் கூட்டிகிட்டுப் போங்க! இப்படி பேயா அலேயா என்னலே முடியாது! இந்த விளக்கு உச்சி மேலே ஏறி, எத்தனேயோ தடவை கீழே விழுந்து செத்துப் போகலாம்னு நினேச்சேன்! ஏதோ, ஒண்ணு என்னேசாக விடாமே தடுத்துடுச்சு! குலுங்க குலுங்க சொர்ணம் அழுதாள்.

சொர்ணத்தின் கன்னங்களில் வழிந்தோடும் கண்ணீரைத்துடைத்து விட்டான் செல்லமுத்து. அவளுடைய மார்தளிர் கரங்களேப் பிடித்துக் கொண்டு, "சொர்ணம், கடவுள் புண்ணியத்தாலே இனிமே நமக்கு கஷ்டமில்லே!"

"என்ன சொல்லுறீங்க?" என்று நிமிர்ந்து கேட்டாள் சொர்ணம்.

"போன வாரம் கள்ளக்கடத்தல் பேர்வழிகளேப் பிடிக்க, பெரிய சுங்க அதிகாரி செம்படவங்க வேஷம் போட்டுக்கிட்டு நடுக்கடலுக்கு வந்திருந்தார்.

"அவர் வேறெருபக்கம் பாத்துகிட்டு இருக்கும் போது, பின்புறம் திமிங்கலம் வந்து அவர் மேலே பாய இருந்தது. உடனே நான் சட்டென்று தாவிச் சென்று அவரை ஆபத்திலிருந்து காப்பாத்தினேன்."

"ஓ, அப்படியா?" சொர்ணத்திற்கு பெருமை நிலேக்கொள்ளவில்லே.

"இருட்டிலே சுங்க அதிகாரிண்ணு எனக்குத் தெரியலே. நம்ப கதை பூராவும் அவர் கிட்டே சொல்லிட்டேன்.

"ரொம்பவும் மன வருத்தப்பட்டு, தான் இன்னருண்ணு சொன்னர். நான் பயந்துப் போனேன். அதைக் கண்டு அவர், "செல்லமுத்து பயப்படாதே! நான் நாளேக்கே மேலதிகாரிகளுக்கு எழுதி உம்மேலேயுள்ள கேசைத் தள்ளுபடி செய்யச் சொல்லுறேன். அதுவரைக் இங்கேயே இரு" என்று சொன்னர்.

"நேத்துதான், எம்மேலே உள்ள கேசு ரத்து ஆச்சு.

"நான் உடனே ஓடி வந்துட்டேன் சொர்ணம். இனி உன்னே விட்டுவிட்டு எங்கியும் போகமாட்டேன்! நெசமாத்தான் சொர்ணம் நெசமாத்தான்! உம்மேலே ஆணேயா சொல்லுறேன்!" துக்கம் தாங்க முடியாமல் செல்லமுத்து பொறுமினன்.

இனிமேலும் அங்கிருப்பது நல்லது அல்ல என்று, அவ்விடத்தை விட்டு அகன்றேன்.

நான் திருச்சிக்கு வந்துவிட்டேன். ஒரு வாரம் கழித்து, விநாயகத்திடமிருந்து எனக்கு ஒரு கவர் வந்தது; உடைத்துப் பார்த்தேன். ஒருகல்யாண பத்திரிகையும் கடிதமும் காணப்பட்டன.

முதலில் கடிதத்தைப் பிரித்தேன்,

"தம்பி அவங்களுக்கு!

ஆசிர்வாதம். இங்கு நானும் அவளும் (பார்வதியம்மாள்) சுகம், நீங்க, உங்களே தேடிக் கொண்டு, சொர்ணம் வந்திருந்தது!

அந்த பொண்ணுக்கு உங்களே நன்ருகத்தெரியுமாமே! என்னிடம் நீங்கள் சொல்லவேயில்லேயே

உங்களுக்குக் கல்யாண பத்திரிகையைஅனுப்பி அவசியம் உங்களே வரும்படி எழுதச் சொன்னள். சொர்ணம்! பத்திரிகையும் அனுப்பி விட்டேன்; வரும்படியும் எழுதி விட்டேன். முடிந்தால் வரவும்!

இப்படிக்கு
பெ. விநாயகம்."

திருமண பத்திரிகையில் சொர்ணம் செல்லமுத்து என்ற பெயர்களே கண்டவுடன் எனக்கு பரமானந்தமாகப் போய்விட்டது. எவ்வளவு கஷ்டங்களுக்குப் பிறகு, அவர்களுக்கு சுகவாழ்வு...!

கடைக்குச் சென்று ஒருபட்டுப் புடவையும் ஜரிகை வேஷ்டியும் வாங்கித் தபால் பார்சல் மூம் சொர்ணத்திற்கு அனுப்பி வைத்தேன். ★

தொடர் கதை

கே. சுந்தராம்பாள்

எட்டாவது அத்தியாயம்

தாயைச் சமாதானப்படுத்திவிட்டு மேலே சென்றவள், ஒரு வேளை சசி இன்றைக்கு வந்தாலும் வரலாம்; அழகாக அவனுக்குப் பிடித்தமான அலங்காரம் செய்துகொள்ள வேண்டுமென நினைத்தாள். மத்தியானம் லெக்ஷ்மி வந்தபொழுது அரைத் தூக்கத்தில் எழுந்து வந்ததனாலான அலுப்பு இன்னும் இருந்ததனால் சற்றுநேரம் தூங்கிவிட்டு எழுந்து அலங்காரம் செய்துகொண்டால் உடலும் மனமும் சுறுசுறுப்பாக இருக்கும் என்ற முடிவிற்கு வந்தவளாகக் கட்டிலில் படுத்துக்கொண்டவள் ஐந்து நிமிஷத்தில் உறங்கியும் விட்டாள்.

ட்ராயிங் ரூமில் உட்கார்ந்திருந்த மேகலா சசியைக் கண்டதும், "வாப்பா சசி!" என்று அன்புடன் வரவேற்றாள்.

"அத்தை!" மேலே பேசமுடியாமல் துக்கம் தொண்டையை அடைத்தது.

"வருத்தப்படாதே சசி! எனக்கு எல்லாம் தெரியும். வாக்குறுதியில் மிதக்கவேண்டும் நம் குடும்பம் என்பது விதியின் கட்டளை. பாவம் லெக்ஷ்மி நல்ல பெண். அதுவும் உன் அதிருஷ்டம் தான்."

"அத்தை! என் அதிருஷ்டத்தை நீங்கள்தான் மெச்சவேண்டும். கண்ணெனக் கருதிவந்த என் கலாவிற்கு பங்கிடு வாழ்க்கையா? என்னால் சமாதானமடையவே முடியவில்லை."

"இதைப்பார் சசி! என்னைப் போலாகாமல் பங்கிடு வாழ்க்கையாவது அவளுக்குக் கிடைத்ததே என்று சந்தோஷப்படுகிறேன். பங்கீட்டை பாரபக்ஷமில்லாது நீ செய்வாயென்று எனக்கு நம்பிக்கையுண்டு. தைரியமாக நட. மனதை அலட்டிக்கொள்ளாதே."

"என்ன செய்வேன்; மனம் நிம்மதியடையவேயில்லையே."

"கலா மேலே இருக்கிறாள் போய்ப்பார், மனம் சமாதானமடைந்துவிடும்."

எழுந்து மேலே சென்றான்.

பைஜாமாவும் ஷர்ட்டுமே அணிந்து வந்திருந்தானாதலினால் செருப்புத்தான் போட்டுக்கொண்டிருந்தான். சப்தப்படாமல் செருப்பைக் கழட்டி வைத்துவிட்டு உள்ளே நுழைந்தான்.

இருளுக்குள் பகல் ஐக்யமாகும் சமயமாதலால் மங்கலான வெளிச்சமே அவ்வறையை வியாபித்திருந்தது. கண்களை நான்கு பக்கங்களிலும் ஓடவிட்டான். அவன் எதிர்பார்த்த அலங்காரக் கலாவை அங்கு காணோம். இவ்விடமிருப்பதாகத் தானே அத்தை சொன்னார்கள் என்று எண்ணியவனாக இடதுபுறம் திரும்பினான். கட்டிலின் மீது, அடர்ந்த புதரின் நடுவில் அழகிய ரோஜா மலர் பூத்தது போலிருந்தது; கறுப்புப் புடவையும் கார்மேகம் போன்ற விரிந்த கூந்தலுக்கிடையே சந்திரபிம்பம் போன்ற அவளது முக கமலம் பிரகாசித்தது. சற்றே ஒருக்களித்தாற் போல் படுத்திருந்தவள் இடது கை இடது கன்னத்தைத் தாங்கிய வண்ணமும், வலதுகை முழங்காலைத் தொடுவது போலவும் வைத்திருந்தாள். அவள் மூச்சு விடுவதென்பது லேசாக அவள் புடவை அசைவிலிருந்துதான் தெரிந்துகொள்ள முடியும். பத்மினி ஜாதிப்பெண் உறங்கும் காட்சியை ஒரு கவி வர்ணித்திருந்தது அவன் நினைவில் தோன்றியது. இவ்வழகிய உத்தம ஜாதிப் பெண்ணின் முழு அன்பிற்கு உரியவன் நான். ஆனால் ஐயோ! நான் அவளுக்கு அளிக்கப்போவது பங்கீட்டு வாழ்க்கை; இல்லை. இவள் இப்படியே இருக்கட்டும். அதுதான் நன்மை என்ற முடிவிற்கு வரும் சமயம் அவள் செவ்விதழில் புன்னகை மலர்ந்தது. பாவம் என்ன விதமான இன்பக்கனவு காணுகிறாளோ? என்று எண்ணியவாறு அவளையே பார்த்துக்கொண்டு நின்றான். வரவர இருள் படர்ந்துகொண்டே வந்தது. அவளழகை அனுபவிக்க விரும்பி விளக்கைப் போட்டான்.

சட்டென விழித்தவள் எழுந்து உட்கார்ந்தாள். எதிரே சோபாவின் சாய்மானத்தைப் பிடித்தவண்ணம் நின்ற சசி கண்ணில் படவே,



"சசி!" என்று கையை விரித்த வண்ணம் அவனை நோக்கிப் பாய்ந்தாள்.

"வேண்டாம் என்னைத் தொடாதே கலா."

திடுக்கிட்டு நின்றுவிட்டவள் "என்ன? தொடாதே! சசி! நீயா இப்படிச் சொல்லுகிறாய்" உன்னைத் தொட்டுப் பேசக்கூடாது என்பது என் சக்திக்கு மீறிய செயல் என்று சொன்ன சசியின் வாயிலா இவ் வார்த்தை" துக்கம் நெஞ்சையடைத்தது.

"அந்த சசி வேறு. இப்பொழுது உன் முன் நிற்கும் சசிதரன் வேறு; கலா."

"சசி! நீ வேறு! நான் வேறா! ஏனிப்படிப் பேசுகிறாய்?

"விதி குறுக்கிட்டுவிட்டது. வேண்டாம் கலா! வேண்டாம். நான் உன் காதலுக்கு அருகதையற்றவன்."

அதற்குமேல் அவளால் நிற்க முடியவில்லை, ஓடிச்சென்று அவன் கரங்களைப் பிடித்தபடி, "சசி! என்னைப்பார்! நான் என்ன குற்றம் செய்தேன். ஏன் இப்படி வெறுத்துப் பேசுகிறாய்! ஐந்து வயதிலே, அறியாப் பருவத்திலேயே ஏற்பட்ட பாசத்தை, பிரேமையை எப்படி உதறித் தள்ள முடியும்?"

"ஐயோ! கலா! என்னை வதைக்காதே! பளிங்கு போன்ற மனம் படைத்த, பத்தினி ஜாதிப் பெண்ணாகிய உனக்குத்துரோகம் செய்து விட்டேன்! துரோகியைத் தீண்டாதே. ஐந்து வயதிலே அறியாப் பருவத்திலே என்னிடம் வைத்த பிரேமபாசத்திற்கு, என் ரத்தத் துடிப்பு கலா! கலா! என்று துடிக்குமளவு ஜீவிய காதலை ஊட்டிய உனக்கு பங்கிட்டு வாழ்க்கையைக் கொடுக்கமாட்டேன். நாம் இதுவரை இருந்தது போல் இசையுலக ஜோடிகளாக மட்டும் வாழ்வோம் கலா"

"சசி! எந்தவிதமான வாழ்க்கையையும் மேற்கொள்ள நான் தயார். உன்னை விட்டுப் பிரியக் கூடாது அவ்வளவுதான். ஆனால் சிந்தித்துப்பார்!

உன் அப்பா இறக்கும் தருவாயில் உனக்கிட்ட கட்டளை நீ அளித்த வாக்குறுதி! அதற்கு மதிப்புக்கொடுக்க நாம் மணந்துகொண்டுதானாக வேண்டும்" என்று அவனை உற்று நோக்கியவண்ணம் கண்ணீர் வழியக் கேட்டாள்.

"ஐயோ! அப்பா! என்ன வாக்குறுதியோ? தந்தை செய்த சிறு தவறினால் தனையன் தடுமாறித் தவிக்கவேண்டியிருக்கிறது. என்னை, சித்தப்பாவிற்குக் கொடுக்கும்பொழுதே இப்படி ஒரு மரண வாக்கு இருக்கிறது என்று சொல்லியிருந்தால் சித்தப்பா ஏதாவது ஏற்பாடு செய்திருப்பார்."

"சசி, ஆத்திரப்பட்டுப் பேசுகிறாய்? அந்த சமயம் இப்படி வருமென்று அவருக்கு ஜோஸ்யம் தெரியுமா?"

"அப்படியே வைத்துக்கொள். நீ வந்த உடனே சொல்லியிருந்தாலாவது இந்தத் தொல்லையில்லையே. நானும் ஒரு முட்டாள். மரணமாவது வாக்காவது என்று மறுப்புக் கூறியிருக்க வேண்டும்.

"நாலாபக்கமும் மரணவாக்கு, கடமையென்று கதறவே அவசரப்பட்டு முடிவிற்கு வந்துவிட்டேன். இப்பொழுது நான் உனக்குச் செய்யும் நன்மை நான் சொன்ன வழி ஒன்றுதான் சாத்யமாகும். கடமையில் வந்து ஒட்டிக்கொண்டவளே மனைவி ஸ்தானத்தில் இருந்து விட்டுப் போகட்டும், உன்னையும் அவளையும் ஒன்றாகப்

பாவிக்க என்னால் முடியவே முடியாது. அப்பொழுது நம்மை உலகம் தூற்றும். நம் காதல் அமரத்வம் பெற்றது. அதற்கு மணமும் மணவாழ்க்கையும் அவசியமேயில்லை. கலா! நான் சொல்லுவது சரிதானே" என்றவாறு குனிந்து அவள் தோள்களைப்பற்றி தூக்கித் தன்முன் நிறுத்தினான். அவள் தோளின்மீது வைத்த கை அப்படியே இருந்தது.

"லெக்ஷ்மியை அவ்வளவு உதாசீனமாக எண்ணக்கூடாது. இந்த மாதிரியான ஒரு மணவாழ்க்கையை அவள் விரும்பி ஏங்கமாட்டாள். அவள் எந்தவிதமான விஷயத்திற்காக மிக மிக வேதனைப்படுகிறாளோ அதையே நீ குத்திக் காட்டுவதுபோல் நடந்தால் அவள் மனம் எப்படி புண்படும். நம்மால்தானே இவ்வித வாழ்க்கை ஏற்பட்டது என்பது தெரிந்தால் உயிரையே விட்டுவிடுவாள் அந்தப் பெண். பெண் பழி

உன்னைச் சுற்றும். சசி! அதுமட்டுமா? என் தாய்! உன் அத்தை, வாக்குறுதிக்காக வாழ்வை பாழ் செய்துகொண்டவளுக்காக! நம் மணத்தினால் மன நிறைவு பெறலாமென்று மனப்பால் குடித்துக்கொண்டிருக்கும் சித்தப்பாவிற்காக! நாம் மணந்து தானாகவேண்டும்! வஜ்ர வீணை வாசிக்க வேண்டாமா? அவர்களிருவரின் சங்கீதம் மறுமலர்ச்சி பெறவேண்டாமா? சொல்லு! சசி! சொல்லு! உன் மனச்சாந்தி ஒன்றுதான் உனக்குப் பெரிதா! மற்றவர்களைப் பற்றிய பாசமே கிடையாதா? நம்மை ஆளாக்கி உலகம் புகழும் படி நாமிருப்பது யாரால்? நான் கெஞ்சி மன்றாடுகிறேன்! நானும் லெக்ஷ்மியும் நீ எந்தவிதமாக நடந்தாலும் பாராட்டாமல் நடந்துகொள்ளுவோம். அதைப்பற்றி நீ சிந்தனை செய்யவே வேண்டாம்."

"ஒரு நிபந்தனையின் பேரில் மணம்."

"சொல்லு பார்க்கலாம்."

"லெக்ஷ்மிக்கு அவள் கேட்டுக்கொண்ட வாழ்வு மட்டுமே தான்."

"சசி! நீயா இப்படி இரக்கமில்லாமல் பேசுகிறாய்? என்னால் நம்பவே முடியவில்லை. உன் நெஞ்சம் எப்பொழுது கல்லானது?

"காலம்! கலா! காலமும் சூழ்நிலையுமே என்னைச் சித்ரவதை செய்கிறது."

"உன் நிபந்தனை அநியாயமானது. உன் மனசாட்சி அனுமதித்தால் செய்."

"மனச்சாட்சி! அதுதானே என்னை வாட்டி வதைக்கிறது கலா. புயலிலகப்பட்ட மரக்கலத்தைப்போல் அலக்கழிக்கிறது."

"அலக்கழிக்கும் மனதை ஒரு நிலைக்குக் கொண்டுவருவதுதானே ஒழுக்கத்திற்கு அடையாளம். நான் சொல்லுவதைக் கேள். லெக்ஷ்மியும் வாழவேண்டும்; நானும் வாழவேண்டும். ஏற்றத்தாழ்வு ஏற்படாமல் நான் சரிசெய்து விடுவேன். சசி! பெண்களுக்குரிய உயர்ந்த பண்பாகிய லஜ்ஜையை விட்டு யாசிக்கிறேன்! சசி! எதற்காக? சூழ்ச்சியிலகப்பட்டு சுகத்தை இழந்தவள், என் வாழ்வே தனது ஜீவித லக்ஷ்யமென வைராக்ய மனதுடன் வாழ்ந்துவருபவள், சமூகம் ஏற்கும்; அதுல்யரும் அன்புடன் ஏற்றுக்கொள்ளுவார். அப்படியிருந்தும் பெண் குலத்தில் மதிப்பைக் காக்க, வழி வழியாக ரத்தத்தில் ஊறி வந்த பண்பைக் காக்க, என் நன்மைக்காக அவ்வளவு அதிருஷ்டத்தையும் உதறித் தள்ளிவிட்டு தவ வாழ்க்கை நடத்துகிறாளே என் தாய், அவளுக்காக மன்றாடுகிறேன். பெண் பண்பைக் காக்க கடமைப்பட்டவள். சித்தப்பா! அவரைப் பற்றி சிந்தனை செய்! சுகபோகம் எங்கும் சூழ்ந்திருக்கவும், எவ்வளவு பெண்களை வேண்டுமானாலும் மணந்துகொள்ளலாம் என்ற உரிமையிருக்கும்பொழுதும், உயரிய காதலுக்கு மதிப்புக் கொடுக்கவேண்டி வாழ்விற்கு வழிவிட்டு விலகிநிற்கும், அவரது இழந்த வாழ்க்கைக்கு நமது முன்னேற்றம் ஒன்றுதான் ஈடு செய்வதாகும் என்ற உறுதியில் தவ வாழ்க்கை நடத்துகிறாரே அவருக்காகத் தயவுசெய். சசி! ஏன் பேசாமலிருக்கிறாய் உன் முடிவை மாற்ற மாட்டாயா? சொல்லிவிடு. உன் முடிவை இவ்வளவிற்குப் பின்னும் நீ மாற்றவில்லையானால் இனி பேசுவதற்கு ஒன்றுமே இல்லை. அம்மா! நாம் வாழப் பிறக்கவில்லை என்று சொல்லி தாயும் மகளும் மறைந்துவிடுகிறோம். இதுதானே உன் மனச்சாந்தி!"

"கலா! போதும் நிறுத்து! என்னால் இனி தாங்கமுடியாது கலா! கலா! கலா!" என்ற வண்ணம் அப்படியே அணைத்துக்கொண்டு கன்னத்துடன் கன்னம் சேர்த்து 'கலா' என்றான்.

"சசி! இப்பதான் என் சசி" ஆனந்தமிகுதியினால் கண்களை மூடிக்கொண்டாள்.

சற்றுநேரம் மௌனத்தில் சென்றது.

"வா கட்டிலின்மீது உட்கார்ந்து பேசலாம்" என்று அவளை விடுவித்தான். இருவரும் கட்டிலின்மீது பக்கம் பக்கமாக உட்கார்ந்தார்கள்.

"முதல் முதலாகப் பெண் பார்க்க வந்தாற்போல பார்க்கிறாயே" என்றாள் கலா.

"இந்த நிலைமையிலும் நீ அதிரூப ஸௌந்தர்யவதியாகத்தான் தோன்றுகிறாய். ஆனாலும் இந்த கைகேயி கோலம் எதற்கு?"

"வேண்டுமென்று எடுத்துக்கொள்ளவில்லை. ஆனாலும் வரன் கேட்கும் படலமாக அமைந்துவிட்டது."

"வரன் பெற்றாகிவிட்டதல்லவா! இனிமேல் தலையைக் கட்டலாம்" என்று சொல்லியவண்ணம் சற்றுப் பின் தள்ளி உட்கார்ந்துகொண்டு அவள் தலையைக் கோதினான்.

"ஸ் அப்பா" என்று தலைமுடியைக் கையினால் பிடித்துக்கொண்டு "கோதிவிடாமல் பின்னிவிடு போதும்" என்றாள்.

தலையைப் பின்னல் போட்டுக்கொண்டே, "பங்கீட்டு வாழ்க்கை கிடையாது என்ற உறுதியுடன் வந்தேன். ஆனால் தோல்வி எனக்கு; வெற்றி உனக்கு."

"தோல்வி உனது அல்ல. வெற்றி நீதியினுடையது அது போகட்டும் உன் மனப்படியும் வாழ ஒரு வழி வகுக்கிறேன்" என்று அவன் மடியில் தலை வைத்துப் படுத்துக்கொண்டாள்.

அவள் நெற்றியில் புரளும் கூந்தலை விலக்கிய வண்ணம் "என்ன வழி?" என்றான்.

பங்கிடு பங்கிடென்று பதறுகிறாயல்லவா? மக்களைப் பெற்று சீராட்டும் உரிமை லெக்ஷ்மிக்கு. நானும் நீயும் ஆனந்தமாகச் சுற்றுவது, இசை வானிலே ஜோடிப் பறவைகளாகப் பறப்பது. கல்யாணம் மட்டும் நடந்துவிடட்டும். இந்த விஷயம் நம்மிருவருக்குள் அடங்கவேண்டும். லெக்ஷ்மிக்குக்கூடத் தெரியக்கூடாது. சரிதானா?"

எத்தனை விரைவாக வளருகிறன்!

...ஆனுல் அவனுடைய ஆடைகள் அதைவிட விரைவாகச் சுருங்குகின்றன. பருத்தித் துணியினுலான ஒரு ஆடை உடம்புக்குப் பொருந்தாதபடி சுருங்க ஒரே ஒரு நாள், ஒரேயொரு சலவை போதும்! ...பருத்தித் துணியோ, தயாரான ஆடைகளோ வாங்கும் போது, 'ஸான்பொரைஸ்ட்' முத்திரை இருக்கிறதா என்று கவனித்து வாங்காவிட்டால் தான் இந்தக் கதை. உங்கள் உடைகள் உடம்புக்குப் பொருந்தாதபடி ஒருபோதும் சுருங்காது என்பதற்கு உத்தரவாதம் அம்முத்திரை. ஆம் பலப்பல சலவைகளுக்குப் பிறகும்தான்!

லேபில் மேல்

·SANFORIZED·
REGD TD MK

என்ற முத்திரையுள்ளதா என்று பாருங்கள், உங்கள் உடைகள் உடம்புக்குப பொருந்தாதபடி சுருங்காது.

'ஸான்பொரைஸ்ட்' என்ற ரிஜிஸ்தர் செய்யப்பட்ட டிரேட் மார்க்கின் சொந்தக்காரர்களான க்ளுயட் பீபாடி அண்டு கோ. இன்கார்பொரேடட் (வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு. எஸ். ஏ. வில் இணைக்கப் பெற்றது) அவர்களால் இந்த விளம்பரம் வெளியிடப்பட்டுள்ளது. இந்தக் கம்பெனியின், 'சுருங்காது' என்பதற்கான கடும் நிபந்தனைகளுக்குட்பட்டுத் தயாரிக்கப்படும் துணிகளில் மட்டுமே 'ஸான்பொரைஸ்ட்' டிரேட் மார்க் உபயோகிக்க அனுமதிக்கப்படுகிறது.

விவரங்களுக்கு 'ஸான்பொரைஸ்ட்' ஸர்வீஸ், 95, மெரீன் டிரைவ், பம்பாய்-2.

SAN-58-1A-TAM

"வா வா! அப்படி வந்தாயா வழிக்கு. இப்பொழுது உன் வாக்கிலிருந்து குதித்ததே அந்த சொல் உன் மன நிலையைத் தெள்ளெனக் காட்டி விட்டது. பங்கீட்டு வாழ்வை நீ விரும்பவில்லை யென்பது தவறல்லவே கலா" என்று குனிந்து அவள் நெற்றிமீது முத்தமி...

"ரொம்ப சமத்காரமாகப் பேசுவதாக அர்த்தமோ. என் மனச்சாக்ஷி தடுத்திருந்தால், உன் கல்யாணம் நடந்த தினமே என் தாயுடன் இவ்வூரைவிட்டே போயிருப்பேன். ஏன் உலகை விட்டு மறைந்தாலும் மறைந்திருப்பேன். வளைய வளைய சுற்றியடித்துத் தேடினாலும், குற்றவாளி என்று ஒருவரையும் குறிப்பிட முடியாத விதமாக அமைந்துவிட்ட விஷயத்திற்கு மதிப்புக் கொடுக்கவேண்டியது கடமை என்று முடிவிற்கு வந்த நானு அப்படி யெண்ணுவேன். பங்கீடு பங்கீடு என்று பதறுகிறாயே, உணர்ச்சி வசப்பட்டு உருகி விடுவாயே என்பதற்காக ஒரு மாற்றுக் கூறினேன்" என்று முடிக்குமுன்,

"என்ன சொன்னே! உணர்ச்சி வசப்பட்டு உள்ளத்தைச் சிதற விடுபவனாக இருந்தால்? இவ்வளவு நாட்களாக நாமிருவரும் பழகிவரும் நிலைமையில் உன்னை இந்த நிலையில் வைத்திருப்பேனடி மேதையே" என்று செல்லமாக அவள் இரு கன்னத்தையும் இழைத்தவாறே கூறினன்.

தன் கன்னத்தைக்கிள்ளிய இரு கைகளையும் தன் இருகைகளினாலும் பற்றிக்கொண்டு, "ச்ச்ச்ச் அர்த்தம் கண்டுபிடிக்கிற அழகைப் பார்! உணர்ச்சி என்ற பதத்திற்கு ஓர் அர்த்தம்தானு? குழந்தை முதல் நான் உன் சுபாவத்தைப்புரிந்து கொண்ட முறையில், உன்னையறியாமல் சிறு தவறு ஏற்பட்டு விட்டாலும் நீ அதற்காகப் படும் பாடும், நீ எதிர்பார்த்த விஷயம் நடந்துவிட்டால் நீ படுகிற ஆனந்தமும் அளவிற்கு மிஞ்சியது என்பது."

"அப்படியா?" என்றுன் குறும்புச் சிரிப்புடன்.

"சசி! உன் சந்தோஷம்தானே எனது லக்ஷ்யம் நீ மனமிடிந்து போகக்கூடாது என்பதற்காக நான் எதுவேண்டுமானுலும் செய்யத் தயார். பங்கீடு பங்கீடு என்று உருகிப் போகாதே. சந்தோஷமாக இருப்பாயா சொல்லு! சசி சொல்லு" என்று இரண்டு கைகளையும் அவன் கழுத்தில் போட்டு அவன் முகத்தைத் தன் முகத்தருகில் கொண்டு வந்தபடி கேட்டாள்.

"கலா! ஆஹா! உன்னை மனைவியாக அடையும் பாக்கியவான் என்னைப்போல் மூவுலகிலுமிருக்க மாட்டான், உடலிரண்டு உயிரொன்று என்பது சொல்லளவிலல்ல கலா. நாம் ஒருயிர். இதை யாரும் மறுக்க முடியாது" என்று உணர்ச்சி வசப்பட்டவனாக நாத் தழுதழுக்கக் கூறியவாறு அவளை வாரி அணைத்துக்கொண்டான்.

பிறகு சற்றுநேரம் பழைய சசி கலாவாக கொஞ்சி விளையாடிப் பேசினார்கள். நான்கு நாளைக்கப்புறம் செய்யப்போகும் கச்சேரியில் பாடும் விதங்களைப்பற்றி சர்ச்சை செய்தார்கள்.

ஆலயத்து மணி ஒன்பதடித்து ஓய்ந்தது. "அடடா மணி ஒன்பதாகிவிட்டதா? நேரம் போனதே தெரியவில்லை" என்றுன் சசி.

"நாமிருவரும் பேசத் தொடங்கிவிட்டால் நேர மென்ன, மாதம் முடிந்தால்கூடத் தெரியாது. சசி சாப்பிடலாம் வருகிருயா?" என்று தன் மடி மீது படுத்திருந்த அவன் தலையைப் பிடித்துத் தூக்கி உட்கார வைத்தாள்.

"சாப்பிடவா?" என்று அவளைப் பார்த்தான்.

"ஐ ஆம் சாரி. சசி. மறந்துவிட்டேன். பேதை லக்ஷ்மி உனக்காக சாப்பிடாமல் காத்துக்கொண்டிருப்பாள், அதனால் போய் வா?" என்றுள்.

"காத்திருந்தாலென்ன? நான் போனதும் சாப்பிடுகிறுள்."

"இதைப்பார் சசி. இன்னும் எண்ணிப் பத்து நாள். பிறகு நானே அங்கு வந்துவிடுவேன். பிறகு பிரச்னையே கிடையாது. இன்று நீ போய் விடு."

"பத்துநாளில் அங்கு வருவேனென்றால்?"

"ஏன்? விஷயம் தெரியாதா உனக்கு. நமது மணத்திற்கு முகூர்த்தம் வைத்துவிட்டார். ராஜராஜேஸ்வரி கோவிலில் கல்யாணம். வெள்ளிக்கிழமை மணம். நடுவில் ஒருநாள் நமக்கு விட்டுவிட்டு, வரவேற்பு; வஜ்ரவீணை வாசிப்பு; அம்மா பாடுவது; எல்லாம் மூன்றாவது நாள் ஞாயிற்றுக்கிழமை."

"நல்ல செய்திதான். ஆனால் அத்தை தனியாகவா இருப்பாள்."

"கொஞ்ச நாளைக்கு நான் அங்குமிங்குமாக இருப்பேன். பிறகு அம்மாவை நம்முடன் தங்கும்படி செய்யவேண்டும். கொஞ்சம் பழக்கமாகிவிட்டால், நீ இவ்விடம் வந்தால் உனக்காக லெக்ஷ்மி காத்திருக்கமாட்டாள், புரிந்ததா?

"புரிந்தது புரிந்தது. கலா நான் வரட்டுமா?"

"மனப்பாரத்தை இவ்விடமிறக்கிவிட்டு குஷியாகப் போய் வா, லெக்ஷ்மியினிடம் அன்பாக நடந்துகொள்."

"உண்மையில் என் மனம் உன் சொல்லினால் இலேசாகிவிட்டது. லெக்ஷ்மியினிடம் நெருங்கிப் பழக கொஞ்சநாளைக்குள் முடியாது. முடிந்த வரையில் முயன்று பார்க்கிறேன், புரிந்ததா?"

"சரி, உன்னிஷ்டப்படி செய். நிம்மதியாக இருக்கவேண்டும், அதுவே என்னுடையதும், லெக்ஷ்மியினுடையதுமான லக்ஷ்யம்" என்று சொல்லியவாறு கையைப் பற்றி அவனை எழுந்திருக்கச் செய்து இருவருமாக மாடிப் படியருகில் கைகோர்த்தபடி வந்துநின்றுர்கள்.

"சரி, நீ இங்கேயே இரு. நான் வருகிறேன்."

"நானும் இறங்கவேண்டியவள்தானே?"

"இதைப் பார், இந்தக் கோலத்துடன் உன்னை அத்தை பார்த்தாளானல், இந்தப் பாவி கல்யா

ணம் செய்தது போதாது என்று என் பெண்ணை கூந்தலைப் பிடித்திழுத்து அடித்துக்கொன்றிருக்கிறான் என்று கூசாமல் சொல்லமுடியும். கண்ணாடியில் போய்ப் பார் உன் தலையை. தலையை வாரி உடையை ஒழுங்கு செய்து கொண்டு பிறகு கீழே வா."

"ஓ! அப்படியா! சற்றுமுன் இந்தக் கோலம் மிக மிக அழகு என்று வர்ணித்தாயே?"

"இல்லையென்று சொல்லவில்லை. என் கண்களுக்கு விருந்து. எல்லா விஷயங்களையும் நம் கண்கொண்டமட்டும் பார்க்கக்கூடாது மற்றவர் கண்களைக் கொண்டும் பார்த்துக்கொள்ளவேண்டும். சரி நான் வரட்டுமா?" என்று அவள் கன்னத்தைத் தட்டிவிட்டுப் படிகளில் இறங்கினான். அவன் தலை மறைந்ததும் உள்ளே வந்து கண்ணாடிமுன் நின்றாள்.

ஆமாம், சசி சொன்னதில் தப்பே இல்லை. என்ன அலங்கோலம்! நான் எண்ணெய் தடவி தலை வாராதிருந்தது குற்றம்தான், இருந்தாலும் இவ்வளவு தூரம் கலைந்தது அவனால்தான். அவன் மனம் சமாதானத்திற்கு வரவேண்டுமென்பதற்காக என்றுமில்லாத பழக்கமாக சற்று அணைப்பிற்கு இடம் கொடுத்துவிட்டேன். அம்மம்மா! மூச்சுத் திணறும்படி செய்துவிட்டான். என்னடி கலா! அந்தத் திணரல் உனக்கு வேதனையாகவா இருந்தது? ஒளிக்காமல் ஒப்புக்கொள். உனக்கும் அது கொஞ்சம் வேண்டித்தானிருந்தது. கன்னத்தைக் கையினால் தடவியவாறு சசி சமாதானமடைந்துவிட்டான். ஆஹா! என்மீது உயிரையே வைத்துவிட்டான். அவனைப்போன்ற கணவனையடைய அடி கலா! நீ ஊசிமீது நின்று தவம் செய்திருக்கவேண்டும். ஏன்தான் இப்படி வேதனைப்படுகிறானோ புரியவில்லை. ஆண் சிங்கம் எத்தனைப் பெண்களைக் கைப்பிடித்தாலும் கேள்வியே கிடையாது. சமூகம் அனுமதிக்கிறது. எல்லா ஆண்களும் இப்படியொரு சந்தர்ப்பம் கிடைத்தால் நழுவவிடுவதில்லை. இவன்மட்டும் என் இரு மனைவி என்று ஏங்கித் துவண்டு போகிறானே! கவலைப்படவேண்டிய லக்ஷ்மியும் நானும் கவலைப்படவில்லை. புரியவேயில்லை. ஏனடி கலா! உனக்கும் புரியவில்லையே என்று கண்ணாடியில் தெரியும் தனது பிரதிபிம்பத்துடன் பேசிக்கொண்டிருந்தவளை,

"புரியாது கலா உனக்குப் புரியவே புரியாது" என்று அவளருகில் வந்து நின்றான் சசி.

திடுக்கிட்டுத் திரும்பியவளாக, "நீ போகவில்லை? இங்கே எப்பொழுது வந்தாய்?"

"உடனேயே திரும்பிவிட்டேன் கலா! பெண்ணாகிய உனக்கு இந்த வேதனை புரியாது. ஆயிரத்திலொரு பெண் வேண்டுமானால் கணவனுடனிருக்கையில் மற்றொருவன் தொடர்பை ஏற்படுத்திக்கொள்ளுவான். நூற்றிலொருவர் கணவனை இழந்தோ, கணவனால் திரஸ்கரிக்கப் பெற்றோ, பிறகு மற்றொருவன் தொடர்பை வேண்டுமானால் ஏற்படுத்திக் கொள்ளுவாள். தவிர ஒரே சமயத்தில் இரு கணவன்மாருடன் வாழும் துர்ப்பாக்கியநிலை கிடையவே கிடையாது. பண்பட்ட முறையில் வளர்க்கப்பட்டவர்களுக்கு ஒரே சமயத்தில் இரு மனைவியருடன் வாழ்க்கை நடத்துவது என்பது சாமான்யமல்லடி கண்ணே. ஒரே உதாரணம், முன்பெல்லாம் இன்றுபோல் பேசிக்கொண்டிருந்துவிட்டு சாப்பிடாமல் போனதுண்டா. நீ சாப்பிடுவோம் வா என்று கூப்பிட்டதும் அதை மறுக்கவே மனமில்லை. ஆனால் அதே சமயத்தில் அங்கே லெக்ஷ்மி காத்துக்கொண்டிருப்பாளே என்றதொரு நினைப்பு. உன்னுடைய உயரிய பண்பானது என்னைப் போகும்படி சொல்லச் செய்தது சரியாகப் போயிற்று. நீ உன்னுடன்தான் சாப்பிடவேண்டுமென்று சொல்லியிருந்தாயானால் என்னவாகியிருக்கும். இதுபோல் பல பல."

"சசி! உன் மனதில் அதுமாதிரியானதொரு குழப்பம் ஏற்படாவண்ணம் நான் நடப்பேன் நம்பு. அது போகட்டும். கற்சட்டிக் கடைக்காரன்போல் ஏன் திரும்பி வந்தாய்?"

"கற்சட்டியைக்காண" என்று அவள் தோளின் வழியாக முகத்தை அவன் முகத்துடன் சேர்த்துக் கண்ணாடியில் அழகு பார்த்தான்.

"போதுமே அழகு பார்த்தது. வந்த காரணத்தைச் சொல்லு சசி."

"காரணமா?" கீழே முன் ஹாலில் சோபாவில் எதிரெதிராக சித்தப்பாவும் அத்தையும் உட்கார்ந்துகொண்டு, சந்தோஷமாகக் குதூகலத்துடன் ஏதேதோ திட்டங்கள் வகுத்துக்கொண்டிருக்கிறார்கள் போலும். அவர்களிருவரும் சேர்ந்து உட்கார்ந்து சந்தோஷமாகப் பேசுவதை இன்றுதான் கண்டேன். படியில் நின்றவாறே சற்று ரசித்தேன். நல்லதொரு விஷயத்தை நான் மட்டும் அனுபவித்தால் திருப்திப்படுவதில்லையடி கண்ணே. அதற்காக உன்னையும் அழைத்துச்சென்று காண்பிப்போம்" என்று யந்தேன் என்று சொல்லி அவளை அணைத்துக் கொண்டான்.

"சித்தே இரு. தலையை வாரிக்கொண்டு வருகிறேன்." என்று சொல்லிவிட்டு, சட்டென பின்னல் போட்டுக்கொண்டு, உடையை சரி செய்துகொண்டு 'வா போகலாம்' அவன் கையைப்பற்றி நடந்தாள்.

சசி கலா ஜோடி இறங்கிவரும் அழகைப் பார்த்து பரவசமானார்கள் மேகலாவும் அதுல்யரும்.

தங்களருகில் வந்ததும் "சசி! லெக்ஷ்மியைச் சாப்பிடச் சொல்லிவிட்டேன். நீ கலாவுடன் சாப்பிட்டுவிட்டுப் போகலாம்" என்றார் அதுல்யம்.

"அப்படியானால் இன்று பௌர்ணமி நிலவில் ஏரியில் படகு பிரயாணம் செய்துவிட்டு வரலாமா சித்தப்பா" என்றாள் கலா.

"அதற்கென்ன போய் வாருங்கள். படகோட்டி நாராயணனை அழைத்துச் செல்லுங்கள்."

"லெக்ஷ்மியையும் கூட அழைத்துப் போகப் போகிறோம்" என்று சொல்லியபடி சசியின் கையைப் பற்றியபடி நடந்தாள் கலா.

"அப்பா! சசியின் முகத்தில் இப்பொழுது தான் தெளிவு கண்டேன். பாவம் பலமான சோதனை அவனுக்கு" என்றார் அதுல்யம்.

"உங்கள் மருமகப்பெண் குணத்தில் உங்களின் மறு அவதாரம். எப்படியோ பேசி நிலைமையைச் சரிசெய்து விடுகிறாள். பாவம் சசி! சாயங்காலம் வரும்பொழுது கண்களில் நீர் தளும்பி நின்றது. பேச்சுக் கொடுத்தால் அழுதுவிடுவானோவென்று கலா காத்திருக்கிறாள் என்று மாடிக்கு அனுப்பினேன். சரியாக நான்கு மணி அவகாசம் ஆகியிருக்கிறது. அவன் சந்தோஷ முகங்காண. உங்களிடம் வளர்ந்த பண்பானது இப்படி வதைக்கிறது. இன்னொருவரானால் கடமையென்று கட்டினீர்கள். அவள் பாட்டுக்கும் இருக்கட்டுமென்று தைரியமாக வெளி வருவான்."

"அவன் சற்று அசட்டை காட்டினால் கூட கலா சம்மதிக்கமாட்டாள் இல்லையா?" என்றார்.

ஒன்பதாவது அத்தியாயம்

அன்று ராஜராஜேஸ்வரி ஆலயமே அற்புதமாகத் திகழ்ந்தது. மிகமிக முக்யமான மனிதர்கள் மாத்திரமே அழைக்கப்பட்டிருந்தார்கள் என்றாலும் அந்தக் கோவிலின் மஹா மண்டபம் நிரம்பி வழிந்தார்கள் மனிதர்கள். முத்துக்குமரனும் சுகுணாவுங்கூட வந்திருந்தார்கள். கன்னிகாதானம் செய்வதற்கு முத்துக்குமரனுடன் மணையில் நிற்க மறுத்துவிட்டாள் மேகலா. அதுல்யம் வந்து கூடச் சொல்லிப் பார்த்தார். அவள் சம்மதிக்கவேயில்லை. சுகுணாவும் முத்துக்குமரனுமே மணையில் நின்று கன்னிகாதானம் செய்தார்கள்.

மாங்கல்யதாரணமாகும்பொழுது மூன்றாவது முடிச்சை லெக்ஷ்மியே முன்நின்று முடிந்தாள். மாங்கல்யதாரணம் முடிந்ததும் கலா சசியை நிமிர்ந்து பார்த்தாள், வெற்றிப் புன்னகை மிளிரும் அம்முகத்தைப் பார்த்த சசிக்கு தான் இருப்பது பூலோகமா ஸ்வர்க்கமா என்று புரியவில்லை. இவ்வளவு பேர் சூழ்ந்து நின்ற இடத்தில் மேகலாவும் அதுல்யமும் மட்டும் இடம் பெறவில்லை. ஏன்?

மாங்கல்யதாரணமாகும்பொழுது சுற்று முற்றும் பார்த்தார் அதுல்யம். மேகலாவைக் காணவில்லை ஒவ்வொரு இடமாகத் தேடிச் சென்றவர் மூலஸ்தானத்தின் முன்பு தன்னை மறந்து நிற்கும் மேகலாவைக்கண்டு "மேகலா" என்றார்.

திரும்பினாள். அதுல்யம் நின்றுகொண்டு கூப்பிட்டார். "என்ன மேகலா இவ்விடம் வந்து நிற்கிறாய். மாங்கல்யதாரணம் நடக்கப் போகிறதே."

"நடக்கட்டும் ஸ்வாமி நடக்கட்டும்"

"நடக்கட்டுமா? நீ பார்க்க வேண்டாமா? இதென்ன பேச்சு"

"ஸ்வாமி! என் மானஸிக தோற்றத்தை விட்டு வர மனமில்லை"

"அப்படி உன்னைக் கவர்ந்த தோற்றம் என்னவோ?"

"ஸ்வாமி நானும் நீங்களுமாக மணையில் நின்று கன்னிகாதானம் செய்து கொடுப்பது போன்ற ஒரு தோற்றம் என்னையறியாமலேயே தோன்றிக் கொண்டிருக்கிறது. சரியோ தவறோ தாயின் முன்னின்று அந்த இன்ப வேதனையை அனுபவித்துக் கொண்டிருக்கிறேன்".

அதற்கு மேல் பேசும் சக்தி இருவரிடமும் அகன்று விட்டது. அங்கவஸ்திரத்தினால் கண்களைத் துடைத்துக்கொண்டு வெளியே வந்து விட்டார் அதுல்யம்.

கண்கள் மூடியபடி கண்ணீர் வடிய நின்றாள் மேகலா

சுகுணா, லெக்ஷ்மி, சசியின் சகோதரிகள் யாவரும் வருபவர்களை மனமுவந்து உபசரித்துக் கொண்டிருந்தார்கள். மணச்சடங்கு முடிந்து சாப்பாடும் ஆயிற்று. கலா லெக்ஷ்மியினிடம் "கோவில் நந்தவனம் மிக்க மனோரம்யமாக இருக்கிறது. அங்குள்ள லதா கிருஹத்தில் சற்று நேரம் இளைப்பாறி விட்டு வருகிறேன்" என்று போனாள். சற்றுப் பொறுத்து அந்தப் பக்கம் வந்த சசியின் கண்கள் தேடுவதையுணர்ந்த லெக்ஷ்மி "கலா லதா கிருஹத்திலிருக்கிறாள் அத்தான்" என்றாள்.

ஈரத்தலையை சிமிண்ட் பெஞ்சியின் சாய்மானத்தின் மீது விரித்துப் போட்டபடி உல்லாஸமாகச் சாய்ந்த வண்ணம் சிந்தனையிலிருந்த கலா காலடிச் சப்தம் கேட்டுத் திரும்பியவள் சசி வருவதைப் பார்த்து

"வாருங்கள்" என்று அவன் உட்கார இடம் விட்டு நகர்ந்து உட்கார்ந்தாள்.

அவளையே உற்றுப் பார்த்தபடி நின்றான். அவள் நாணித் தலை குனிந்தாள்.

அருகில் சென்று மோவாயைப் பிடித்து நிமிர்த்தி "கலா! மஞ்சள்கயிறு கழுத்திலேறினதும் இதுவரையுமில்லாத நாணம் எப்படி வந்தது! உன் கண்களின் மருட்சி, கன்னத்தின் சிவப்பு, உடலின் நளினம் எல்லாம் சேர்ந்து நீ எவ்வளவு அழகாக இருக்கிறாய் தெரியுமா?"

"அத்தான்! நீங்கள் சொல்லியது உண்மை. மஞ்சள் கயிறு கழுத்திலேறினதுமே நான் வேறு மனுஷியாக எனக்கே தோன்றிவிட்டேன். ஒரு பெரிய ஸ்தானத்தை ஏற்றுக் கொண்டது போல

ஒரு பிரமை. நாமிருவருமாக ஒரு பரந்த சாம்ராஜ்பத்தின் பொறுப்பை ஏற்றுக் கொண்டது போன்ற பெருமை. சென்ற வருஷம் வந்திருந்த சுவாமிகள் நம் இருவரையும் தனியாக உட்கார வைத்து கல்யாண மந்திரத்தின் அர்த்தம் முழுவதையும் விளக்கிச் சொன்னார்களல்லவா, அதனால் தான் இப்படி ஓர் உணர்ச்சி தோன்றுகிறது போலும். இனி ஒவ்வொருவரையும் மனதில் கொண்டு நடக்க வேண்டும் என்பது எல்லா மணமக்களுக்கும் உள்ள பொறுப்புத் தானே?"

"அத்துடன் நமக்கு ஒருவருக்குமில்லாத அதிசயமான பொறுப்பும் உண்டு கலா". அவள் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டான்.

என்ன என்பது போல் அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

"அவள் மனமும் வருந்தக் கூடாது. நமது சந்தோஷமும் குறையக் கூடாது" என்று அவள் கையைத் தன் கையிலெடுத்துக் கொண்டான்.

"அத்தான்! என்ன ஒற்றுமை! நான் நினைத்ததை நீங்கள் சொல்லி விட்டீர்கள். உங்கள் மனதில் இவ் வெண்ணம் இருப்பது பற்றி நான் மகிழ்ச்சி கொள்ளுகிறேன்"

"கலா! இதென்ன! அத்தான், நீங்கள் புதுமையாக இருக்கிறதே"

"இது வரை காதலர்கள். இன்று கணவன் மனைவி. மரியாதைக் குரியவரல்லவா. அம்மாவும் சொன்னாள். எனக்கும் என்னையறியாமலேயே இப்படிக் கூப்பிட வேண்டுமென்று தோன்றி விட்டது".

"இதைப்பார் இந்த மரியாதைப் பதங்களெல்லாம் எனக்குக் கொஞ்சங் கூடப் பிடிக்கவில்லை. நீ, சசின்னு கூப்பிட்டால்தான் எனக்கு இன்பமாக இருக்கும்; என் கலாவாகத் தோன்றும்; என்ன புரிந்ததா" என்று கையை அழுத்தியவண்ணம் கேட்டான்.

"உங்கள் விருப்பம் அப்படியானால் அப்படியே செய்கிறேன்"

"பார்த்தையா 'நீங்கள்' போடுகிறாயே"

"இல்லை, சசி, இனிமேல் சொல்ல மாட்டேன்"

"அப்பா இப்பதான் என் பிரேம கலா" என்று அவள் தோளில் கைபோட்டு முகத்துடன் முகம் சேர்த்துக்கொண்டு "கலா என்னுடையவள், கலா! ஓர் உண்மையை என்னால் ஒளிக்கமுடியாது லெக்ஷ்மியை அன்புடன்தான் நடத்துவேன். ஆனாலும் எந்த விஷயத்திலும் நீ முதல் ஸ்தானம் வகிப்பதைத்தான் என் மனம் விரும்பும். புரிந்ததா?"

"புரிந்தது. ஆனால் நீங்கள் பிரத்தனம் செய்துபார்க்கத் தவறக்கூடாது. நியாயப்படி எதிலும் அவளுக்குத்தான் முதல் ஸ்தானம் கொடுக்க வேண்டும். அவள்தான் முதலில் வந்தவள்".

"எங்கே என்னைப் பார்த்துச் சொல்லு. நீ 'என் மனைவி' என்று எப்பொழுது சொன்னேன் நினைவிருக்கிறதா? சிந்தனையைப் பின் நோக்கித்

தட்டிவிடு. யார் முதலில் வந்தவள் என்பது புலனாகும்."

"அது போகட்டும், நாளைக்கு மறுநாள் சித்தப்பா வஜ்ரவீணை வாசிப்பார். நாமிருவரும் அலங்கார மேடைமீது வீற்றிருப்போம். அம்மா பாடுவாள். அந்தக் காக்ஷியைக் கற்பனைப் பண்ணிப் பாருங்கள் என்ன ஆனந்த நிலை." உணர்ச்சிமிகுதியினால் கண்களை மூடிக்கொண்டாள்.

"இன்றும் நாளையும் நமக்கு இன்ப நாள். லெக்ஷ்மி! லெக்ஷ்மி! என்று ஜபம் பண்ணி என் மனதைக் குழப்பாமல், நாம் சந்தோஷத்தை அனுபவிக்கும்படி தயவுசெய் கலா" என்றான்.

"சசி!" என்று அவன் மார்பில் முகத்தைப் புதைத்துக்கொண்டாள். சற்று நேரம் மௌனத்தில் சென்றது.

"சசி, கலா" என்று அதுல்யம் அழைக்கும் குரல் கேட்கவே திடுக்கிட்டு எழுந்து வெளியே வந்தார்கள்.

இருவரையும் இரண்டு பக்கத்திலும் நிறுத்தி கைகளால் அணைத்தவண்ணம் "ஒன்பது மணிக்கு வீணை விஹாருக்குக் கிரகப்பிரவேசமாகச் செல்ல வேளை குறிப்பிட்டிருக்கிறார்கள், புறப்படத் தயாராகுங்கள்."

"ஆகட்டுமப்பா" என்று இருவரும் ஒரே சமயத்தில் சொன்னார்கள்.

"நாளை நின்று எனது பைத்தியக்கார சபதம் நிறைவேறப்போகிறது. என் கண்களா! வாழ்க்கை வாழ்வதற்கென்றே என்ற நினைப்புடன் வாழ்க்கைப் பாதையை வகுக்கவேண்டும். சசி! கலா! நானும், மேகலாவும் வாழாத வாழ்க்கையை நீங்கள் வாழ்ந்து வளம் பெறவேண்டும். நாங்களிருவரும் அதைக்கண்டு இன்பமடைய வேண்டும். எங்கள் மனச்சாந்தி உங்கள் வாழ்க்கைப் பெட்டியில் மூடவேண்டும்" என்றார்.

"இந்தப் பொன்மொழியை ஒருநாளும் மறக்க மாட்டோம் சித்தப்பா" என்று இருவரும் அவர் பாதத்தில் தங்கள் தலை படும்படி வணங்கி எழுந்தார்கள்

"தீர்க்க சுமங்கலீபவ! தீர்க்காயுஷ்மான்பவ" இருவர் முகத்திற்குச் சமீபமாகத் தன் முகத்தைக் கொண்டுபோய், "உங்களது அறை இன்று இதுவரையிலுமில்லாத புதுவிதமாக அலங்கரிக்கிறார்கள்" என்று அர்த்தபுஷ்டியுடன் புன்சிரிப்பாகச் சொன்னார்.

இருவருமே கன்னத்தில் சிவப்பேற புன்சிரிப்புடன் தலையைக் கவிழ்ந்துகொண்டார்கள்.

"வாருங்கள் போகலாம்" என்று முன்னே நடந்தார். இருவரும் அவரைப் பின்தொடர்ந்தார்கள்.

கிருஹப்பிரவேச கோலாகலம் முடிந்தது. சாயங்காலம் நான்கு மணி சமயம். சசி, கலாவிற்கென்றே கட்டப்பட்ட இரண்டாவது மாடி ஹால் உலகத்திலுள்ள வாசனைப் புஷ்பங்கள், வாசனைச் சாமான்களெல்லாவற்றையுமே கொட்டி அலங்கரித்ததுபோல் ஒரு காத தூரத்திற்கு மணம் வீசிற்று. பல்புகளும், புஷ்பங்களுமாக அந்த அறையும், கட்டிலும் அலங்காரம் செய்யப்பட்டிருந்தன. ஹாலின் மூன்றுபுறமும் வராந்தா உண்டல்லவா, அதன் தெற்குப் புறத்திலுள்ள வராந்தாவில் போடப்பட்டிருந்த நீண்ட சோபாவின் மீது லெக்ஷ்மி கலா இருவருமே உட்கார்ந்துகொண்டு கலாவின் தலையை லெக்ஷ்மி பின்னிக்கொண்டிருந்தாள்.

"கலா! நான் ஒரு விஷயத்திற்காக அஞ்சிக்கொண்டிருந்தேன் நல்ல காலமாக அஞ்ச வேண்டிய அவசியமேயில்லாமல் போய்விட்டது"

"என்ன விஷயம்?"

"உனக்கு, அல்லது எனக்கு, அனுதாபம் தெரிவித்துக் கொண்டார்களானால் என்று அஞ்சினேன். என்னைத் தெரிந்தவர்கள் கூட சர்வசகஜமாக, உன் கூடப் பிறந்தவளிடம் பேசிப் பழகுவது போல் பழகினார்கள் எனக்கு எவ்வளவு சந்தோஷம் தெரியுமா?"

"சித்தப்பாவின் பண்பு அப்படி அமையச் செய்கிறது. இது போகட்டும். நான் ஒரு விஷயம் சொல்லப் போகிறேன். நீ அதன்படி நடக்க வேண்டும்"

"விஷயத்தைச் சொல்லு. பிறகு ஒப்புக் கொள்ளுகிறேன்"

"இன்று நானும் நீயும் ஒரே மாதிரி அலங்காரம் செய்துகொண்டு ஒரே மாதிரி புடவை உடுத்திக் கொள்ளவேண்டும், வாங்கி வைத்திருக்கிறேன், இரண்டு பேரும் சம உயரம். அதனால் முகத்தை கிட்டவந்து பார்க்கிறவரை நான் தான் நீ என்று எண்ணிக்கொள்ளும்படி இருக்கவேண்டும் என்ன சொல்லுகிறாய்"?

"இதென்ன பிரமாதம்; செய்துகொண்டால் போச்சு."

"அத்துடன்..." தயங்கினாள்.

"என்ன கலா தயங்குவதைப் பார்த்தால்."

"பயப்படவேண்டாம், நான் சொல்லுவதைக் கவனமாகக் கேள். வயதில் என்னைவிட பெரியவள் நீ. மணமும் உனக்குத்தான் முதலில் நடந்தது. அதனால் இன்று நாம் செய்யப் போவதை ஒருவருமே கண்டுபிடிக்க முடியாது. இரவு அறைக்குள் செல்லும்பொழுது நாலைந்து பெயர்கள்கூட வருவார்கள். மங்களஹாரத்தி சுற்றுவார்கள். அதுவரை மணப்பெண் நான். எல்லோரும் வெளியே வரும்பொழுது நான் வந்துவிடுவேன். முகத்தைக் காட்டாமல் சாமர்த்தியமாக, நீ அவ்விடம் தங்கிவிடவேண்டும். உன்னை வெளியில் போ! என்று சொல்லக் கூடிய இழிகுணம் படைத்தவரல்ல சசி",

"என்ன? உனக்குப் பைத்தியமா. இந்த நாளை அத்தான் எவ்வளவு ஆவலுடன் எதிர்பார்த்திருப்பார். அவருக்கு ஏமாற்றமளிப்பது முறையல்ல கலா. மேலும் பெரியவர்களுக்குத் தெரிந்தால் என்னாகும். நீ சொல்லுவது சரியல்ல. நீதான் அவர் மனதில் முதலில் இடம் பெற்றவள். உனக்குத்தான் அவர் சொந்தம். உனக்குப்பிறகு தான் எனக்கு; கொஞ்சநாள் போகட்டுமே."

"லெக்ஷ்மீ! நானும் சசியும் கள்ளமில்லாமல் விளையாடி வந்திருக்கிறோம், அப்படியே என்றுமிருக்கவேண்டுமென்பது என் எண்ணம். பரத நாட்டியம் பழகலாமென்பதும் ஒரு காரணம். இன்று நீ மறுத்துவிட்டால்கூட நானும் சசியும் இன்று புது உறவை ஏற்படுத்தப் போவதில்லை."

"கலா! இது என்ன அர்த்தம். அவருமா சம்மதித்தார்?"

"ஆமாம் லெக்ஷ்மி. இல்லையானால் தைரியமாகச் சொல்லுவேனா. பெரியவர்கள் சந்தேகம் கொள்ளாவண்ணம் என்றும் சயன அறை செல்வோம். அவ்வளவுதான்"

லெக்ஷ்மி கலாவை உற்று நோக்கியபடி உட்கார்ந்திருந்தாள். இரண்டு நாள் முன் நடந்த சம்பவம் ஒன்று அவள் மனத்திரையில் பளிச்சிட்டது.

அந்த மாடியின் சாவி, ஒன்று கலாவினிடமும், ஒன்று சசியினிடமும் இருக்கும். அறையைச் சுத்தம் செய்யும் நாளில் இவர்களிடமிருந்து சாவியை வாங்கிச் செல்லுவார்கள். கலாவின் கொள்கைப்படி தனக்கும் லெக்ஷ்மிக்கும் சம உரிமையாக அந்தச் சாவி லெக்ஷ்மியின் அறையிலுள்ள மேஜை ட்ராயரில் வைத்துவிட்டு இருவரும் எடுத்து உபயோகிக்கவேண்டுமென்று ஏற்பாடு செய்திருந்தாள்.

அன்று சாயங்காலம் லெக்ஷ்மி மாடியைத் திறந்து அங்குள்ள சாமான்களை தூசி தட்டிக் கொண்டிருந்தாள். ஒருவரும் வராத இடத்தில் காலடி சத்தம் கேட்கவே திரும்பினாள். சசி நின்றுகொண்டிருந்தான். அவன் முகம் கோபத்தினால் சிவந்திருப்பதைக் கண்டு பயந்து தலை குனிந்து நின்றாள்.

"லெக்ஷ்மி! இதெல்லாம் நீயேன் செய்கிறாய். வேலைக்காரர்களைச் செய்யச்சொல்லி நீ மேல் பார்த்தால் போதாது!" என்றான்.

அவள் மனப்பயம் குறைந்தது. "நான் செய்தால் தவறா! கலாவின் அறையை என் கையால் சுத்தம் செய்வது எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறது. நாளையன்று நடக்கும் விசேஷத்திற்காகச் செய்கிறோம் என்பதில் எனக்கு எவ்வளவு திருப்தி தெரியுமா அத்தான்" என்று முடிக்கு முன்

"லெக்ஷ்மீ! நீ செய்வது நல்லதாகத் தோன்றவில்லை. அளவிற்கு மிஞ்சினால் அமிர்தமும் விஷம் நீ எதற்கெடுத்தாலும் கலாவின் சுகம் என்று சொல்லுவது உன் அடி மனதிலிருக்கும் பொறாமை வெளியே தெரியாதிருப்பதற்காகவென்றே நினைக்கிறேன்" என்றான்.

"அத்தான்!" என்று கூவியவள் மேலே பேச முடியாமல் அழுகை வந்துவிடவே சட்டென அந்த இடத்தைவிட்டு கட்டிலின் பக்கவாட்டில் மறைவாக நின்றுகொண்டு, தேம்பலை வெளிக்காட்டாமல் கண்ணீர் விட்டுக் கதறினாள்.

இரண்டு மூன்று நிமிஷம் சென்றிருக்கும்; பலம் பொருந்திய கை அவள் இரு தோள்கள் மீது படியவே நிமிர்ந்தாள். சசி நின்றுகொண்டிருந்தான். அவ்வளவே அவளின் அழுகை போன இடம் தெரியவில்லை. பேசவும் தோன்றாத இன்ப நிலையில் நின்றாள்.

(தொடரும்)

காவேரி சந்தா விகிதம்

	இலங்கை, பர்மா & உள்நாடு ரூ.	நயா பைசா	மலேயா முதலிய வெளிநாடுகளுக்கு ரூ.	நயா பைசா
ஒரு வருஷம் (தீபாவளி மலர் உள்பட)	7	50	9	00
தனிப் பிரதி	0	50	0	62

வீட்டு வைத்தியம்



கணவன் சொல்கிருன் :

ஆபீசுக்குக் கிளம்பி ஐந்தே நிமிடங்களில் நான் திரும்பி வந்ததும் என் மனைவியின் முகத்தில் கேள்விக்குறி எழும்பியது, எதை மறந்துவிட்டேன், பர்ஸையா? பவுண்டன் பேனவையா? ... அல்லது திடீரென உடம்புக்கு ஏதேனும் ...?

"ஒன்றுமில்லை, என் சட்டைக்குத்தான் உடம்பு!" என்று கூறி முதுகுப்புறத்தைக் காண்பித்தேன். எடை காட்டும் கருவியிலுள்ளது போல பத்து நயா பைசா நுழையும் அளவுக்கு ஒரு கிழிசல்! உடுத்திய போது என் கண்ணில் படாத இந்தக் கிழிசல், பஸ் ஸ்டாண்டில் என் நண்பனின் கண்ணில் பட்டது. பெட்டியிலுள்ள மற்ற சட்டைகளுக்கோ காலர்களில் கோளாறு!

"ஒரே நிமிஷம். சரி செய்துவிடுகிறேன். போய்விடலாம் ஆபீசுக்கு" என்று ஊசி நூலை எடுத்தாள் மனைவி.

S/P. 4A-X52 TM

"வேண்டாம், சீக்கு என்று லீவுக் கடுதாசு அனுப்பிவிட்டேன் ஆபீசு சிநேகிதன் மூலமா. இன்னைக்கி ஹாய்யாக இருக்கலாம்" என்றேன்.

ஆனல், 'ஹாய்'யாக என்ருல் ...? நல்ல துணிகளெல்லாம் இன்னும் அழுக்கு மூட்டையில் ஐக்கியமாகியிருக்கையில், ஒரு பார்க்கோ, மரீனவோ, சினிமாவோ போகமுடியுமா? பகல் தூக்கம் ஒன்றுதான் முடியும்!

கண்ணை மூட முயன்ற சமயத்தில் வாசற்புறம் பேச்சுக் குரல் ஒலித்தது: "உன் கணவருக்கு என்ன உடம்பு?"—இக் குரல் என் மனைவியின் சினேகிதியான டாக்டர் கண்ணம்மாவினுடையது.

"தலைவலியும் கதகதப்பும்" என்ருள் என் மனைவி. எனக்குப் பகீரென்றது. டாக்டரம்மா என் உடம்பைப் பரிசோதிக்க வந்துவிடவே, "என் உடம்புக்கு ஒன்றுமில்லை. என் சட்டைக்குத்தான் உடம்பு.." என்று குழறினேன். தனது ஸ்டெதாஸ்கோப் மூலம் குறிப்பறிந்துவிட்ட கண்ணம்மா புன்னகை புரிந்

தாள். நிலைமையை சமாளித்துக்கொண்டு அவளை முன்கட்டுக்கு அழைத்துச் சென்றாள் என் மனைவி. எனக்கும் தூக்கம் கண்ணைச் சுற்றியது. அப்புறம் என் மனைவி காப்பி சகிதம் என்னை எழுப்பியபோது மணி நான்கு இருக்கும்.

ஊஞ்சல் பலகை மீது பளிச்சென்று வீற்றிருந்த ஒரு துணி வரிசை என் கண்களைக் கூச வைத்தது. "சலவையாகி வந்துவிட்டதா" என்று கேட்டேன்.

"எப்படி? பளிச்சென்றிருக்கிறதா?" என்று முல்லைப் பல்வரிசை தெரிய முறுவலித்தாள்.

"நீயே சலவை செய்தது போல நடிக்கிறாயே?" என்றேன்.

"நெஜமா. நான்தான் செய்தேன்!"

"கதைக்காதே. இவ்வளவு பளிச்சென்றா? இவ்வளவு துணிகளையுமா? அப்படியொன்றும் அசந்து தூங்கிவிடவில்லை நான், அடித்துத் துவைத்த சத்தம் என்னை எழுப்பியிருக்காதா?" என்றேன். ஆனால் அவள் விளக்கிக்கூறிய பிறகுதான் எனக்கு விவரம் புரிந்தது.

மனைவி சொல்கிறாள் :

மனிதருக்கு மட்டும்தான் டாக்டராக இருப்பவர் என்றெண்ணியபோது துணிகளுக்கும் டாக்டராக மாறி விட்டாளே இந்த கண்ணம்மா! துணி கிழிவதைக் காயம் படுவதற்கும், பித்தான்கள் உடைவதை எலும்பு முறிவுக்கும் ஒப்பிட்டு அவள் பேசியபோது தமாஷாயிருந்தது. அவள் கூறினாள் :

"உங்கள் கணவர் கூறியதுபோல, துணிகளின் ஆரோக்கியமும் நாம் கவனிக்க வேண்டிய விஷயமே. அழுக்கடைந்த துணிகளை நாள்கணக்காக வைத்துக்கொண்டு அப்புறம் சலவைக்குக் கண்மறைவாக அனுப்பிவிடுவது நல்லதல்ல. சுத்தமான நல்ல சோப்பை உபயோகித்து உடனுக்குடனே நம் கையினாலேயே துவைத்துவிடுவது போலாகாது."

"சொல்வது சரிதான், ஆனால் இப்போது நீங்கள் கட்டிக்கொண்டிருக்கும் வெளுப்பான புடவையைப்போல ஆகுமா வீட்டுச் சலவை?" என்று கேட்டேன்.

"நல்ல கேள்வி கேட்டீர்கள். இது என் கையாலேயே வெளுத்த புடவை, எல்லாத் துணிகளையும் அன்றன்று நானே துவைத்து விடுகிறேன்" என்றாள். பிறகு கையோடு என்னை அவள் வீட்டுக்கே அழைத்துச் சென்று, தான் அலசி உயர்த்தியிருந்த, தும்பைப்பூத் தோரணம் போன்ற துணி வரிசையைக் காண்பித்தாள். பிற்பாடுதான் எனக்கு நம்பிக்கை ஏற்பட்டது.

"ஆனால் ஸன்லைட் விலையைப் பற்றி யோசித்தால் ..." என்று இழுத்தேன். கண்ணம்மா குறுக்கிட்டாள் : ... துணிகள் அடிக்கடி கிழிந்து, அடிக்கடி புதுத்துணி வாங்குவதைப்பற்றி யோசியுங்கள். ஸன்லைட் சலவையில் அந்தக் கவலையே இல்லை. கொள்ளாக் கொள்ளையான நுரை தரும், சக்திவாய்ந்த சோப்பாதலால், அடித்துத் துவைக்காமலேயே பளிச்சென்று வெளுத்துவிடும். ஆகவே துணிகளுக்கு ஆயுசு கெட்டி. அதோடு, கொஞ்சம் ஸன்லைட் உப



யோகித்தாலும் ஏராளமான துணிகளை வெளுத்துத் தரும். சோப் செலவும் மிச்சமாகும். ஆகவே, இரண்டு விதத்திலும் சிக்கனம், இல்லையா?"

அவள் சொன்னபடியே ஒரு ஸன்லைட் வில்லை வாங்கி வந்து இந்தத் துணிகளுக்குப் போட்டுப் பார்த்தேன். "கண்ணம்மாவின் வாய்க்கு சர்க்கரைதான் போட வேண்டும்!" என்றேன் என் கணவரிடம். பளிச்சென மிளிர்ந்த அந்தத் துணிகளின் மீது பார்வை பதிந்திருந்த அவர் திடீரென முகமலர்ந்து "செல்லம், இன்று நாம், சினிமா சாயங்கால ஆட்டத்திற்குப் போகிறோம், தயாராகு"! என்றார்.

S/P. 4B-X52 TM

ஹிந்துஸ்தான் லீவர் லிமிடெட் தயாரிப்பு

திரை உலகம்

ஜமதக்னி

விமர்சனம்

தெய்வ பலம்

குதிரைச் சவாரி, கத்திச் சண்டை, சிறையில் பூதத்துடன் சண்டை, குடத்துப் பூதம், சாபம் நீங்கிய பாம்பு முனிவர், பச்சை மலே 'மர்மம்', காளி பூஜை, என்ன வகையைச் சேர்ந்தவை என்று திகைக்க வைக்கும் நடனங்கள், சேயைப் பிரிந்த தாயின் கதறல், சில இடங்களில் கண்களே பயமுறுத்தும் கலர் காட்சிகள், 'புராண'க் கதை-இவைகளே எல்லாம் சேர்த்து, கதம்பக் குவியலாக பொன்னுலூரி பிரதர்ஸ் அளித்திருக்கிருர்கள்.

ஜெமினி கணேஷ் இழுக்க, பத்மினி கண்களில் பீதி தோன்ற ஆண்மகனின் பிடியிலிருந்து திமிறுகிருள். இந்த ரசமான காட்சி, சீக்கிரம் வெளிவர இருக்கும் எஸ் கே. பிக்சர்ஸாரின் "பொன் விளேயும் பூமி"யில் வருகிறது.

முகவெட்டிருக்கிறது, நடிக்கவும் சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது. நட்சத்திர ஏணியை சீக்கிரம் ஏறுவாரோ, புதுமுகம் விஜயலட்சுமி? ஆகஸ்டில் திரையிட காத்திருக்கும் ராஜம் பிக்சர்ஸார் அளிக்கும் M. A. V. பிக்சர்ஸின் "பாஞ்சாலி"யைப் பார்த்தால் தானே தெரிகிறது.

நடிகை ஜெயஸ்ரீயின் தேகக்கட்டும் முகவெட்டும் படம் பார்ப்போரைக் கவருகின்றன. இவர் தன் நடிப்பை உயர்த்திக் கொண்டால் உச்சாணிக் கொம்பிற்கு வெகு விரைவில் தாவிவிடலாம். பாலாஜி சில இடங்களில் நடிக்கிருர், சில இடங்களில் நடிக்க யத்தனித்திருக்கிருர். காதல் கட்டங்களில் இவர் காதலியின் தோளுக்கும் இதர அவயவங்களுக்கும் ஒத்தடம் கொடுப்பதை நிறுத்தி, உணர்ச்சியுடன் நடிக்க நன்கு பழக வேண்டும். முன்னணிக்கு வந்துகொண்டிருக்கும் இவர் இன்னும் அக்கரை எடுத்துக் கொண்டால், முதன்மை ஸ்தானத்தை இலக்காக வைக்க சந்தர்ப்பம் ஏற்படும்.

கதை சில இடங்களில் திடுதிடுவென்று ஓடுகிறது. சில இடங்களில் சண்டி மாடு போல் மக்கர் செய்கிறது. 'புராண'க் கதையல்லவா, நமது படாதிபதிகளின் கையில் பிடிபட மாட்டேன் என்கிறது போலும்.

இலட்சிய நடிகர் எஸ். எஸ். ஆர். ஆனந்தப்படுவதற்குக் காரணம், கொழுகொம்பை தழுவியதுபோல்(தழுவப்பட்டதுபோல்?)அவரை அணைத்திருக்கும் (அவரால் அணைக்கப்பட்டிருக்கும்?) விஜயகுமாரிதான் என்று சொல்லவும் வேண்டுமா? மெஜஸ்டிக் பிக்சர்ஸின் "நாட்டுக்கொரு நல்லவ"ளில், கண் நிறைந்த ஒரு காட்சி.

டைரக்ஷன் பொதுவாக சோபிதமாக இருந்த போதிலும், சிற்சில இடங்களில் அப்பட்டமான குறைகள் கண்களை உறுத்துகின்றன. பாலாஜி ஜெயஸ்ரீ காதல் காட்சிகளில், பூச்செடிகளில் கூடை கவிழ்ந்தாற்போல் வைக்கோல் பூக்கள் மலர்ந்து சொரிகின்றன! சந்திரசேனன் ரூபாவுடன் குதிரை மீதேறித் தப்பித்துச் செல்லும் போது, அவர்களை பின்தொடரும் குதிரை வீரர்கள் கண்ணெதிரிலேயே அவர்கள் இருந்தபோதிலும், வேறு திக்கில் தேடுவது என்ன விந்தை. தன் பிள்ளையைப் பறிகொடுத்த சந்திரசேனனின் தாய் பைத்தியமாக நடிக்கும்போது, வெகு அதிகமாகச் சிரித்து அழுது அமர்க்களப்படுத்தி படம் பார்ப்பவரின் பொறுமையை மிகவும் சோதித்து விடுகிறார். சிறைச்சாலைபூதம், குடத்துப்பூதம் இவைகளைப் பார்த்தால்

டி. கே. ராமச்சந்திரன், வி. கே. ராமஸ்வாமியின் மீசையை முறைத்துப் பார்க்கிறாரா, அல்லது கண்ணாடி பிரேம் நன்றாய் இருக்கிறதே என்று உற்று கவனிக்கிறாரா? ராஜம் பிக்சர்ஸ் அளிக்கும் M. A. V. பிக்சரின் "பாஞ்சாலி"யில் ஒரு காட்சி.

பயமாக இல்லை, பரிதாபகரமாகவே இருக்கிறது. பத்மினி பிரியதர்சினியின் நடனங்கள் ஏனோ தானோ என்றிருக்கின்றன.

ஜெமினி கலர் லாபரெடரி தெய்வ பலத்தை பொருத்தமட்டில் வெற்றி கொள்ளவில்லை. கலர் காட்சிகளைவிட சாதாக் காட்சிகள் கண்ணுக்குக் குளிர்ச்சியாய் இருக்கின்றன. ஜெமினி கலர் அடுத்த தடவை இக்குறையை நிவர்த்திக்கும் என்று எதிர்பார்க்கிறோம்.

"வரவே வராதா, மகிழ்வே தாராதா?" என்ற பாட்டு, பிள்ளையை இழந்து துடிக்கும் தாய்பாடுவது போலவும், காதலனை காணாமல்ஏங்கும் காதலி பாடுவதுபோலவும் அருகருகே காண்பிப்பது நன்றாக இருக்கிறது.

"மலரோடு விளையாடும் தென்றலே நீ வாராய்" என்ற பாட்டு செவிக்கு இனிமையும், சிந்தனைக்கு உணவும் தருகிறது. தனயனை இழந்து தவிக்கும் தாயின் கண்முன் தரையில் விழுந்து துடிதுடிக்கும் மீனைக் காண்பித்திருப்பது பொருத்தமாக இருக்கிறது. மற்றபடி, ஹாஸ்யப் பகுதியில், காகா ராதாகிருஷ்ணன், சாரங்கபாணி, குலதெய்வம் ராஜகோபால் இவர்களின் வழக்கமான கும்மாளங்கள் வயிற்றைப் புண்படுத்துகின்றன.

மொத்தத்தில், 'தெய்வபலம்' ஜனரஞ்சகமான படம் என்று சொல்லலாம். தெய்வ பலம் இருந்தால் நன்றாக ஓடட்டுமே!

பொன் விளையும் பூமி

காந்தியடிகள் சொன்னது போல் இப் படத்தின் முக்கிய நோக்கம் கிராமிய பண்புகளை எடுத்துக் காட்டுவதுதான். கிராமத்தின் சூழ்நிலையை தத்ரூபமாக வெளிப் கொண்டுவரும் நோக்கத்துடன், இப் படத்தை டைரக்ட் செய்யும் A. பீம்சிங், வெளிப்புறக் காட்சிகளுக்காக 'ராயல செருபு' கிராமத்துக்கு ஜெமினி கணேசன், பத்மினி, சுப்பையா, பாலையா முதலியவர்களுடன் சென்றார்.

இப்படத்துக்கு வசனங்களை அரங்கண்ணனும், தயாரிப்பை ஓரியண்டல் மூவீசும், பூரண உரிமையை எஸ். கே. பிக்சர்ஸும், இசையமைப்பை உசேன் ரெட்டியும், படப்பிடிப்பை விட்டலும் ஏற்று மெருகேற்றியிருக்கின்றனர். ஜெமினி கணேசன், பத்மினி, ராகினி, எஸ். வி. சுப்பையா, பாலையா, சந்திரபாபு, டி. பாலசுப்ரமணியம், சத்யபால், சுகுமாரி ராமராவ் முதலிய நடிக நடிகைகள் புதிய பாத்திரங்களேற்று, நடித்துள்ளனர். இப்படம் சுதந்தரத் திருநாளன்று திரைக்கு வரலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மூன்று பெண்களின் நடுவில் ஓங்கிய கையுடன் நிற்கும் பாலையா மேலே என்ன செய்வாரோ என்ற ஆவலைக்கிளப்பும் இக்காட்சியை மெஜஸ்டிக் பிக்சர்ஸின் "நாட்டுக்கொரு நல்லவ"ளில் காணலாம்.

செய்திகள் :—

தமிழ் நாட்டுக்குப் பெருமை!

தமிழ் நாட்டின் திரைப்படங்கள் மேனுட்டு படங்களின் தரத்துக்கு வர வெகு நாட்கள் பிடிக்கும் என்றும், தற்போது வெளியாகும் தமிழ்ப் படங்கள் படுமோசமாக இருக்கின்றன என்றும் சமீபத்தில் இந்தியா வந்திருந்த அந்நிய சினிமா பிரமுகர் ஒருவர் சொன்னது யாருக்கும் மறந்துபோய் இருக்காது. அவர் வார்த்தையை பொய்ப்படுத்துவதுபோல் இப்பொழுது ஒரு சம்பவம் நடந்திருக்கிறது.

தமிழ் நாட்டில் சிலகாலம் முன்பு வெளிவந்த "மகதலநாட்டு மேரி" என்ற படத்தை பிரஞ்சு பாஷையில் எடுக்க, பிரஞ்சுதேச படாதிபதி ஒருவர் தீவிரமாக முயற்சி செய்ததையே இங்கு குறிப்பிடுகிறேன். தமிழ்ப்படங்கள் மோசம் என்றால் அந்நியர் ஒருவர் தமிழ் படமொன்றை பிரஞ்சு பாஷையில் படம் பிடிக்க ஆர்வம் காட்டுவானேன்? தமிழ் நாட்டின் படவுலக துவஜம் வானளாவி பிறதேசங்களில் பறக்க "மகதல நாட்டு மேரி" உதவி செய்வாளாக?

பத்மினிக்குக் கல்யாணம்!

வடிவுக்கு வளைகாப்பு, கலியாணிக்குக் கலியாணம் என்பதுபோல் இதுவும் ஒரு படமல்ல. திருவாங்கூர் சகோதரிகளிலொருவரான லலிதாவுக்கு கலியாணம் ஆனதிலிருந்தே பத்மினியைப் பற்றி. இலை மறைவு காய் மறைவாக, பேச்சு இருந்து வருவது எல்லோரும் அறிந்ததே. இப்பொழுது அவர்களுடைய அன்னையான சரசுவதி அம்மாளே தன் பெண்ணுக்கு விரைவில் கலியாணம் செய்துவிட எண்ணம் கொண்டிருப்பதாகவும், "எவ்வளவு நாட்கள்தான் பெண்களுக்கு விவாகம் செய்யாமல் இருப்பது. காலா காலத்தில் நடக்கவேண்டியவைகள் நடக்க வேண்டுமல்லவா? பத்மினிக்கு நல்ல வரன் பார்த்துக்கொண்டிருக்கிறேன். சீக்கிரம் கலியாணம் நிச்சயம் ஆகும்" என்று பொருள்பட பேசியதாகவும் சில சினிமா நிருபர்கள் எழுதுகிறார்கள். மேலும், வலுவில் வந்த சில வரன்களை பத்மினியே மறுத்துவிட்டாளென்றும் வதந்தி உலவுகிறது. பத்மினியின் கலியாணத்தைத் தொடர்ந்து ராகினியின் கலியாணமும் நடைபெறலாம்.

இந்திய திரைப்பட உலகத்துக்கு இது பெரிய நஷ்டமாக இருந்தபோதிலும். அரிஸ்டாடில் கூறியதுபோல் பெண்களுக்குச் சரியான இடம் குடும்பமே அல்லவா? ★



ஒஸ்கா கீ வாட்ச்

சாவி வளையத்துடன் கூடியது.

அழகிய வாட்ச், கடின டயர் வடிவம் ரப்பரால் மூடப்பட்டது. அதிர்ச்சி தாங்குதல்-தூசி- ஆல்-புரூப் V. கிரானிக் ஓட்டம் இவை இதன் சிறந்த அம்சங்கள்.

வியாபாரிகள், விளையாட்டுக்காரர்கள், பிரயாணிகள், தொழிலாளிகள் இவர்களுக்கு அத்யாவசியமானது.

விலை பெரிய ஸைஸ் ரூ. 20. சின்ன ஸைஸ் ஸ்பெஷல் ரூ. 42.

பாக்கிங், போஸ்டேஜ் ரூ. 2 அதிகப்படி

ஒரே பாக்கிங்கில் இரண்டு வாட்சுகளுக்கு ஆர்டர் கொடுப்பவர்களுக்கு போஸ்டேஜ் இனம்.

ஒஸ்கா பிரயாண டேபிள் கிளாக்

மணிபர்ஸ், கண்ணடி, சீப்பு, காலண்டருடன் கூடியது.



இது சிகாரிகளுக்கும் அதிகம் பிரயாணம் செய்பவர்களுக்கும் மிகவும் உபயோகமானது. வீட்டிலும் ஆபீஸிலும் மேஜையிலும் ரேடியோ ஸ்டாண்டிலும் வைக்கலாம். வியாபாரிகளுக்கும், மாணவர்களுக்கும், யாத்ரீகர்களுக்கும் ஒரு வரப்பிரசாதம்.

விலை ரூ. 20. ரேடியம் ஸ்பெஷல் டயல் ரூ. 25.

பாங்கிங், போஸ்டேஜ் ரூ. 2 அதிகப்படி

ஒரே பாக்கிங்கில் 2 வாட்ச்கள் ஆர்டர்களுக்கு பாக்கிங், போஸ்டே ஜ் இனம்.

ஒஸ்கா வாட்ச் கம்பெனி

தபால் பெட்டி நெ. 4060 பம்பாய்-7

தாலிக் கயிறு

இனியன்

என் அலுவலக முகவரிக்கு ஒரு தந்தி வந்தது.

'நாகு கிடைத்துவிட்டான். ஆனால், ஒருமாதிரியாக இருக்கிறான். உடனே வா. நிச்சயம் உன்னால் ஏதாவது செய்யமுடியும்' என்பதாக நாகுவின் அப்பா அனுப்பியிருந்தார்.

சரியாக பத்து ஆண்டுகளுக்கு முன்னர் என்னோடு பட்டதாரியான நாகராஜன், அப்போதெல்லாம் எனக்கு நெருங்கிய நண்பன். இரண்டு பேருக்கும் வேலை வந்தது. நான் வடக்கே வந்துவிட்டேன். நாகு சென்னையிலேயே இருந்தான். ஒரு வருடத்துக்கு எங்களிடையே முறையான கடிதப் போக்குவரத்து இருந்தது. பிறகு இரண்டுபேருமே எழுதாமல் இருந்துவிட்டோம். எனக்கு மணமான வருஷம் அது. அதற்கு அடுத்த ஆண்டு நாகுவின் அப்பா எழுதியிருந்தார். நாகு வீட்டைவிட்டு எங்கோ போய்விட்டதாகவும், நான் கண்டுபிடித்தால் புத்திசொல்லி அனுப்பவேண்டும் என்பதாகவும் எழுதியிருந்தார்.

புத்தி சொல்லும் வாய்ப்பு இப்போது வந்திருக்கிறது எனக்கு! விடுமுறை வாங்கிக்கொண்டு புறப்பட்டேன். கும்பகோணத்தில் ரயிலிலிருந்து இறங்கி ஏழுமைல்கள் குதிரைவண்டியில் பிரயாணம் செய்தபிறகு அந்த ஊருக்குப் போய் சேர்ந்தேன். என்னை எதிர்பார்த்திருந்தார் நாகராஜனின் அப்பா.

"நாகு எங்கே?...... என்ற என் முதல் கேள்விக்கு, "இப்போதுதான் கோயிலுக்குப் போயிருக்கிறான்!" என்றார்.

நான் சிரித்தபடி சொன்னேன். "பிள்ளை புத்திசாலி ஆகிவிட்டான் போலிருக்கு!"

"இல்லையப்பா! இல்லை. புத்திகெட்டு திரிகிறான். தூங்கி எழுந்தவுடன் மாரியம்மன் கோயிலுக்குப் போய்விடுகிறான். சில நாட்களில், சாப்பாட்டு நேரங்களில்கூட வீட்டுக்கு வருவதில்லை" கண்ணீர் கசிந்தது கிழவர் கண்களில்.

பெரியவர் மனதைக் கேள்விபோட்டுத் துன்புறுத்த விரும்பவில்லை நான். நெஞ்சத்துக்குள் நினைத்துக்கொண்டேன். ஊரறிந்த பக்தன் நாஸ்திகன் ஆகிறான். கடவுள் உருவங்களை கல்லென்று சொல்லி உடைத்தெறிகிறான். அதுபோல நாஸ்திகனும் நல்ல பக்திமான் ஆகிறான். பஜனை செய்கிறான். ஆண்டவன் லீலையில்லாமல் வேறென்ன இவையெல்லாம்?

நாகுவோடு நெருங்கிப் பழகிய நாட்கள் எல்லாம் என் நினைவுக்கு வந்தன. உடனே அவனை சந்திக்க வேண்டும்போல இருந்தது. பெரியவருடன் மாரியம்மன் கோயிலுக்குக் கிளம்பினேன்.

* *

நாகு என்னைப் பார்த்தவுடன் அழுத்தலாக சிரித்தான். என்ன காரணத்தாலோ என் கைகள் இரண்டும்கூம்பின. என்னோடு பதினைந்து ஆண்டுகள் ஒன்றாக ஓடி, ஆடி, படித்தவன்தான் என்றாலும், பெரிய சாமியார்போல அவன் கோயிலடியில் உட்கார்ந்திருந்ததைப் பார்த்த எனக்கு என்னையறியாமலேயே அவனிடம் ஒரு மரியாதை ஏற்பட்டுக்கொண்டிருந்தது!

அன்றுபோலவேதான் இருந்தான். அரைத்து வைத்த சந்தனம் போன்ற நிறம். அகன்ற மார்பு, அடர்ந்து சுருள் சுருளாயிருந்த கருமுடி. மிகச் சிறியதாகயிருந்த அவன் நெற்றிமட்டும் சற்று உயர்ந்திருந்தது. சற்று நேரத்துக்கு முன்தான் தாடிமீசை மழித்துக் கொண்டிருந்தான். போலிருக்கிறது. முகம் பளிச்சென்று இருந்தது.

நாகுவுக்கு எந்த நிறம் மிகவும் பிடித்தமானது என்று எனக்குத் தெரியும். வெள்ளைத்துணியைத் தவிர வேறெந்த நிறத்திலும் அவன் சட்டை தைத்துப்போட்டதை நான் பார்த்ததாக நினைவே இல்லை. எத்தனை நாட்களாக இந்த மாறுதல்? இடுப்பில் மட்டும் ஒரு வேட்டி கட்டியிருந்தான். அதுவும் மஞ்சள் நீரில் நனைத்தெடுத்தது.

"நாகு...?" என்றேன்.

நிமிர்ந்து பார்த்த அவன் கண்களில்தான் எவ்வளவு ஒளி!

பக்கத்தில் நின்ற நாகுவின் அப்பா என் கையைமெதுவாகத் தட்டினார். நான் திரும்பிய போது, பூவும் மஞ்சளுமாயிருந்த மூன்று பெண்கள் பளபளப்பான பித்தளைக் குடங்களை இடையில் ஏந்தி எங்கள் பக்கம் வந்துகொண்டிருந்தனர்.

ஏதோ யுகப்பிரளயத்தை எதிர்பார்த்திருப்பவர்போல மூச்சை அடக்கிக்கொண்டு நின்றார் பெரியவர். நான் வந்தவர்களைச் சரியாகப்பார்க்க நன்றாகத் திரும்பி நின்றேன். அதற்குள் எங்கள் பக்கத்திற்கே வந்துவிட்ட அந்தப் பெண்கள் சர்வ சுதந்தரத்துடன், ஒருவர்பின் ஒருவராக

குடத்திலிருந்த நீரை உட்கார்ந்திருந்த நாகராஜனின் தலையில் கொட்டினார்கள்.

என் உடலின் ஒவ்வொரு நரம்பும் துடித்தது. ஆத்திரம் அளவுக்கு மீறி ஏற்பட்டுக்கொண்டிருந்ததை துடியாய் துடித்த என் உதடுகளால் நன்றாக உணர முடிந்தது. என்னவோ சொல்ல விரும்பி வாயைப்பிளந்தேன். பிளந்த வாய் பிளந்தவாறே நின்றுவிட்டது. அப்போது நிகழ்வுற்ற காட்சியைக் கண்டவுடன்!

மூன்று பெண்களும் குடங்களைக் கீழேவைத்துவிட்டு நாகுவுக்கு முன்னால் மண்டியிட்டு வணங்கினர்!

என் ஆத்திரத்தை ஆச்சரியமாக்கியது அடுத்து நிகழ்ந்த நிகழ்ச்சி. மண்டியிட்டிருந்தவர்கள் மூன்றுபேரும் தத்தம் முந்தானைகளில் முடித்து வைத்திருந்த வேப்பிலைக் கொத்துகளை எடுத்து, பயபக்தியுடன் நாகுவின் காலடியில் வைத்தார்கள், அழகிய வெண்பற்களின் இரண்டு வரிசையும் வெளியே தெரியுமாறு சிரித்து, ஒவ்வொரு வேப்பிலைக்கொத்தின் அடியிலும் கட்டியிருந்த மஞ்சள் கயிற்றை அவிழ்த்து ஒவ்வொருவரிடமாக நீட்டினான் நாகு. பரிபூரண நம்பிக்கையுடன் பெற்றுக்கொண்ட பெண்கள், மஞ்சள் கயிறுகளை கண்களில் ஒத்தியபடி எழுந்து மீண்டும் கைகூப்பி வணங்கிவிட்டு காலியாயிருந்த குடத்துடன் திரும்பினர்.

எனக்கு அழுவதா சிரிப்பதா என்றே தெரியவில்லை.

அந்த நாட்களில்...

நானும் இதே நாகுவும் கல்லூரியில் படித்த நாட்களில் நாத்திகர்கள் என்று சொல்லிக் கொள்ளும் அளவுக்குத் துணிவு படைத்தவர்கள் அல்ல என்றாலும் கடவுளின் பெயரால் மலிந்து கிடக்கும் மூட நம்பிக்கைகள் என்று சொல்லப்படும் எல்லா செயல்களையும் முழு மூச்சோடு எதிர்த்தவர்கள். நாகு என்னைக் காட்டிலும் ஒருபடி மேலே என்றுதான் சொல்லவேண்டும்.

பிசாசு பிடித்த பெண்ணுக்கு மந்திரம் செய்து கொண்டிருந்த ஒரு பூசாரியை நாகு அடிக்கப் போனதும், பூசாரிக்குப் பயந்த வீட்டுக்காரர்கள் நாகுவைத் தாக்க வந்ததும் அப்போது நாகு அஞ்சா நெஞ்சத்துடன் அரைமணி நேரம் செய்த சொற்பொழிவும் என்னால் என்றுமே மறக்க முடியாதே!

கல்லூரி விடுமுறை நாட்களில் ஒரு சமயம், தென்னகத்து கிராமங்களைச் சுற்றிப் பார்க்கப் போயிருந்தபோது நடந்த ஒரு நிகழ்ச்சியை இப்போது நினைத்தாலும் என் நெஞ்சு சிலிர்க்கிறது.

கோடிக்கரைக்குப் பக்கத்தில் ஒரு சிற்றூர் அது. அங்கிருந்த பிடாரி கோயிலில் அப்போது திருவிழா நடந்துகொண்டிருந்தது. விழா நிகழ்ச்சிகளின் ஓர் அங்கம் உயிர்ப்பலி. ஏராளமான கூட்டத்துக்கு மத்தியில் ஒரு பூசாரி ஈரத்தலையுடன், முழநீள வெட்டரிவாளைக் கையில் வைத்துக் குதித்துக் கொண்டிருந்தான். அவன் குடித்துவிட்டு வந்திருக்கிறான் என்று நாகு என்னிடம் சொல்லியது எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. கொழுத்திருந்த ஓர் ஆட்டுக்குட்டி குங்குமம் மஞ்சள் பூசிக் கொண்டுவரப்பட்டது.

கூட்டத்தார் கூச்சலிட்டனர். ஆட்டுக்குட்டி அலறியது. வாளை ஓங்கியபடி ஆபாசமாகக் கூச்சலிட்டான் பூசாரி. என் கையை உதறிவிட்டு குறுக்கே பாய்ந்தான் நாகு! எவ்வளவு பயங்கரமான காட்சி. உயிருக்கு பயந்து கத்திய குட்டி ஆடு கீழே; உயிரைக்குடிக்க எழுந்த அரிவாள் மேலே; நடுவே நாகு. நான் கண்களை மூடிக் கொண்டேன். கூட்டத்தில் ஏகப்பட்ட கலாட்டா. நாகு உரக்கக் கத்தினான். "ஏ, முட்டாள் பூசாரி! குட்டி ஆட்டைப் பலி வாங்கும் உன் காளி பயங்கரவாதி; அந்தக் காளியின் பசி அடங்க பச்சை ரத்தந்தான் வேண்டுமென்றால் பதினெட்டு வயது இளைஞன் நானிருக்கிறேன். என்னைவெட்டு! வெட்டு!"

அதற்குப்பிறகு – காரியங்கள் அத்தனையும் அசகாய சுறுசுறுப்புடன் நிறைவேறின. ஏழெட்டு பேர் பாய்ந்துவந்து நாகுவை இழுத்து அப்பால் தள்ளினார்கள். ஆட்டுக்குட்டி கடைசி முறையாக அலறியது. பூசாரி பைத்தியம் பிடித்தவன்போல சிரித்தான். நான் பிரமை பிடித்து நின்றேன். மெதுவாக என் தோளைத் தொட்டபடி நாகு சொன்னானே! "வாசு! சாமியின் பெயரால் சண்டாளங்கள் அத்தனையும் செய்யும் இந்தநாடு உருப்படாது! இது நாசமாகப் போகிறது!"

—அந்த நாகராஜன்தான் இன்று சாமியாராக ஆசீர்வாதம் செய்கிறான்.

"நாகு! நீ கூட சாமியாராகி விட்டாய்!" என்றேன்.

அவன் சிரித்தான். "இல்லை வாசு! நான் பிராயசித்தம் செய்து கொண்டிருக்கிறேன்!"

"என்னைக் குழப்புகிறாய்!"

"உன் குழப்பம் கலைய நான் விளக்கமாகச் சொல்ல வேண்டும்! பின்னர் சொல்லுகிறேன். இப்போது வா வீட்டுக்குப் போகலாம்!" என்று என்னுடன் எழுந்து புறப்பட்டான். நாகு சாவதானமாகச் சொன்ன கதை இதுதான்.

* * *

"உனக்குக் கூட தெரியாது என்று நினைக்கிறேன். நான் கல்லூரியில் சேர்வதற்கு முன்பிருந்தே எனக்கும் அவளுக்கும் சிநேகம்.

எங்கள் வீட்டில் சமையல்செய்து கொண்டிருந்த மாமியின் ஒரேபெண் அவள்.

ஒருநாள் இரவு பத்து மணியிருக்கும். என் மேஜையின்மேல் ஒரு வெள்ளித் தம்ளர் நிறைய பால் இருந்தது.

படித்துக் கொண்டிருக்கும் எனக்கு தினமும் மாமிதான் பால்கொண்டு வருவது வழக்கம். "நாகு! பால் வச்சிருக்கேன். ஆறிப்போறத்துக்குள் குடிச்சுடு!" என்று நாள் தவறுமல் சொல்லிப்போகும் மாமியின் குரல் அன்று ஏன் கேட்கவில்லை? நான் தலை நிமிர்ந்தேன். நாணிக் கோணி எதிரே நின்று கொண்டிருந்தாள் ராதா. மாமியின்பெண்! அப்போது அதிகமாகப் போனால் பன்னிரண்டு அல்லது பதிமூன்று வயதிருக்கும் அவளுக்கு.

நான் ஒரே மடக்கில் பாலைக் குடித்துவிட்டு காலித்தம்ளரை மேஜையில் வைத்தேன். அதை எடுத்துக்கொண்ட அவள் நகர்ந்தாள். கண்ணுடி வளையல் எழுப்பிய மிகச்சிறிய ஒலியைத் தொடர்ந்து என் விழிகளைப் பதித்திருந்தேன். அறையைக் கடக்குமுன்னர் திரும்பிய அவள் என்னைப் பார்த்துச் சிரித்தாள். எனக்கு உடல் சிலிர்த்தது.

அதற்கடுத்த நாளிலிருந்து அவள்தான் வந்து கொண்டிருந்தாள். பால்வரும். கூட பால் வழியும் முகமும் வரும். நான் சிரிப்பேன். அவளும் சிரிப்பாள். அதற்குப் பிறகு கனவுகள்!

நான் கல்லூரியில் சேர்ந்த வருஷம்தான் அவள் பெரியவளானுள். பிறகெல்லாம் அவள் என் அறைக்கு வருவதே இல்லை. நான்தான் அவளைத் தேடிப்போக வேண்டியிருந்தது. எப்படியோ எங்கள் உறவு வளர்ந்தது. வீட்டில் எல்லோரும் உறங்கிய பிறகு இரண்டுபேரும் சந்திப்போம் எத்தனையோ இரவுகள்! எவ்வளவு பேச்சுகள்!

கல்லூரியில் நான் கடைசி ஆண்டு படித்துக் கொண்டிருந்தபோதுதான் அவள் அம்மா இறந்தது. தாயார் இருக்கும்போதே, எங்கள் வீட்டு வேலைகளையெல்லாம் செய்துகொண்டிருந்ததால் சிரமம் எதுவுமில்லாமல் அவளே "மாமி" ஆகிவிட்டாள்!

என் பெற்றோரைப்பற்றிதான் நன்ருகத் தெரியுமே உனக்கு. எனக்கு நேர் எதிர். பழைய பழக்க வழக்கங்கள், ஆசாரங்கள், அனுஷ்டானங்கள் அத்தனையும் இம்மி அளவுகூட குறையாதபடி காப்பாற்றி வருபவர்கள். அவர்களா என் விருப்பத்துக்கு உடன்படப் போகிருர்கள்? ஒருக்காலும் இல்லை!

அவள் எவ்வளவோ சொன்னுள். "உங்கள் தந்தையிடம் சொல்லுங்கள். அவர் ஒப்புக் கொண்டால் நடக்கட்டும், இல்லாவிட்டால் என் தலைவிதி" என்பதாக.

எனக்கு வேலை கிடைத்திருந்த சமயம் அது. என்னுல் சமாளிக்க முடியும் என்ற துணிவு இருக்கத்தான் செய்தது. ஆனுல் என் அப்பாவுக்கு எவ்வளவு கொடிய நெஞ்சம் இருந்தது. எனக்குத் தெரியாத காரணத்தால் நான் செய்த சாதாரணமான செயலில் தோல்வியுறுவேன் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை!

ஒருநாள் யாருக்கும் தெரியாமல் அவளைக் கூட்டிப்போய் அர்ச்சகர் சாட்சியாகப்பெருமாள் சந்நிதியில் அவளுக்கு மூன்று முடிச்சுப் போட்டேன்.

நான் நினைத்திருந்தேன். தாலி கட்டியாயிற்று. தந்தையோ தாயோ எங்கள் உறவை முறித் தெறிய முடியாது என்பதாக. உலகம் பொல்லாதது! ஒரு சமயம், சட்டம், சம்பிரதாயம் என்றெல்லாம் சொல்லி ஏகப்பட்ட ஆர்ப்பாட்டங்கள் செய்யும்; ஒருவினுடி தனக்கு சாதகம் ஏற்படும்போல இருந்தால் அவற்றையெல்லாம் தயவு தாட்சண்யமில்லாது புறக்கணித்து வருவது சாதாரண நிகழ்ச்சியாகத் தானே இருக்கிறது!

கணவன் மனைவியாக நானும் ராதாவும் என் அப்பாவின் காலடியில் விழுந்து எழுந்தபோது அவர் வாயடைத்துப் போய் நின்ருர். பக்கத்தில் நின்ற என் அம்மா மீறிவரும் அழுகையை மறைக்க புடவைத்தலைப்பை வாயில் திணித்துக் கொண்டாள்!

"என்னை மன்னித்து விடுங்கள் அப்பா" என்றேன்.

"மன்னிப்பதைக் காட்டிலும் உன்னை மறந்து விடுவது சுலபம்!" என்ருர் அவர். ராதா தேம்பினுள், என்னைப் பறிகொடுத்துவிட்டவள்போல தலையிலடித்துப் புலம்பினுள் என் அம்மா.

"அப்பா! ராதா எனக்குப் பிடித்தமான பெண் இந்த வீட்டில் வாழ்ந்தவள்; அவளை நீங்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும்!"

"முட்டாள்! இந்த வீட்டுக்காரியாக இருந்தவள் வீட்டுக்குரியவளாக முடியாது. உன் கல்யாணத்தை நான் மட்டுமல்ல, யாருமே ஒப்புக் கொள்ள முடியாதபடி செய்ய முடியும் என்னுல்!..."

கோபம் அவர் தொண்டையை அடைத்துக் கொண்டிருந்தாலும் கூட வார்த்தை பிசகாமல் பேசிக்கொண்டு போனுர் என் அப்பா. பெரிய பணக்காரராயிற்றே! அவர் பேச்சுக்கு எதிர் பேச்சு யாராவது பேச முடியுமா என்ன?

குனிந்த தலை நிமிராமல் கண்ணீரால் தரையைக் குளமாக்கிக் கொண்டிருந்த ராதா, கோபங் கொண்ட காளிபோல தலைவிரி கோலமாய் அழும் என் அம்மா, இவர்களைப் பார்க்கப் பார்க்க எனக்கும் அழுகைதான் வந்தது. அழுதேன்; அழுதேன்,

"நீ செய்த பாவத்தை உன் கண்ணீரால் கரைத்துவிட முடியாது! உன் கைகளால்தான் அறுத்தெறிய முடியும்!" என்றார் அப்பா. தீர்ப்பு வழங்கும் நீதிபதியின் தெளிவான குரல் போல இருந்தது அவர் பேச்சு.

"அப்பா! அவளைத் தொட்டு தாலி கட்டியிருக்கிறேன் நான்."

"அதனால்தான் சொல்லுகிறேன். ஊராருக்குத் தெரியுமுன்பு அவள் கழுத்திலிருக்கும் கயிற்றை அவளைத்தொடாமல் அறுத்துப்போடு. பிறகு அவளுக்கு ஒருவழியை நான்செய்கிறேன்"

எங்கிருந்துதான் எனக்கு அவ்வளவு ரோஷம் வந்ததோ?

"அப்பா! நான் ஆண்பிள்ளை!"

"நான் உன்னைப் பெற்ற அப்பன்!' என்றார் அவர்.

ராதா மயக்கம் போட்டு விழப்போனாள். நான் அவளைத் தாங்கிக் கொண்டேன். என் தாய் முகத்தை மூடிக்கொண்டு "ஐயோ!நாசகாலமே!" என்று அலறினாள்.

"நாகு! அவள் தாலியை அறுத்துப்போடு!" கையை நீட்டி ஆணையிட்டார் என் அப்பா. எந்த நேரத்திலும் வெடித்துவிடும் போல இருந்தது, கனத்துக் கொண்டிருந்த என் இருதயம்!

"மஞ்சள் கயிறு என் மனைவிக்கு நான் கட்டிய புனிதக்கயிறு! அதையா அப்பா அறுத்துஎறியச் சொல்லுகிறீர்கள்.

"யாரடா உனக்கு மனைவி?" என்ற கேள்வியோடு என்கன்னத்தில் ஓங்கித்தாக்கினார் அப்பா, எனக்கு வெறி பிடித்து விட்டது.

"ராதா என்மனைவி. ஆண்டவன் சாட்சியாக அவளுக்குக் கட்டிய தாலியை அறுக்க நான் தயாரில்லை!

"அவள் கழுத்திலிருக்கும் கயிற்றை நீ அறுக்கவில்லை என்றால் உனக்கு நான் தகப்பன் இல்லை. உன் தாய்க்கு நான் புருஷனும் இல்லை! இதோ பார்! நீ செய்யாததை நான் செய்து காட்டுகிறேன்!"

மனிதன் எவ்வளவு புத்திசாலி! நினைத்த காரியத்தைச் செய்து முடிக்க என்ன வேண்டுமானாலும் செய்யச் சித்தமாகிறான்.

அழுதுநின்ற என் அம்மாவின் அருகே சென்று அவள் கழுத்தில் தொங்கிய புனித பொன் சரட்டைப் பிடித்திழுத்தார் வாழ்ந்து காட்டிய பெரியவர்.

என்னை உதறிவிட்டு எட்டச்சென்ற ராதா நடுங்கும் கைகளால் அவள் கழுத்தில் கிடந்த மஞ்சள் கயிற்றைக் கழற்றி குமுறிஎழும் துக்கத்தோடு என் கையில் போட்டாள்.

நான் நடுங்கினேன். என் தந்தை புன்முறுவல் பூத்தார். அவர் கண்களில் கூட கண்ணீர் துளிகள் ஏன்? என் தாய் பூரிப்படைந்த மனத்தோடு ராதாவைத் தழுவிக் கொண்டாள்!

என் கையை இறுக மூடிக்கொண்டேன். இரண்டு மணி நேரத்துக்கு முன்னால்தான் ஒரு புதிய உறவை ஏற்படுத்திய புனித மஞ்சள்கயிறு என் பிடியில் கசங்கியது. நான் வெறி பிடித்தவன் போல வெளியே ஓடினேன்.

அதற்கப்புறம் நடந்ததுதான் உனக்கு நன்றாகத்தெரியுமே. நான் காணாமற்போய் விட்டேன்! ஊர் ஊராகச் சுற்றினேன். இரண்டு மூன்று ஆண்டுகளுக்குப் பின், என் நெஞ்சம் தெளிவடைந்திருந்தநேரம் அது. நான் இந்த ஊருக்கு வந்தேன். எப்போதோ ராதா என்னிடம் சொல்லியிருந்தாள். அவளுக்குப் பிடித்தமான தெய்வம், அவள் பாட்டியின் ஊரான இந்த ஊரின் மாரியம்மன்தான் என்பதாக:

ஒருக்கால் அவளைச் சந்திக்கலாம் என்ற எண்ணத்தில் கோயிலடிக்கேப்போய் விட்டேன் நான் ராதாவைப் பார்க்கலாமா? அதனால். ஏதாவது பயனுண்டா? பாவம் உண்டா? என்பதைப் பற்றியெல்லாம் சிந்திக்கவே இல்லை நான்.

வழக்கம்போல கோயிலடியில் உட்கார்ந்திருந்தேன். இளந்தம்பதிகள் இரண்டுபேர் என் முன்னால் குனிந்து வணங்கினார்கள். எனக்கு வெட்கமாக இருந்தது. கண்களைக் கீழே தாழ்த்திக் கொண்டேன். மெதுவாக எழும்பிய விம்மல் ஒலி என் விழிகளை நிமிர்த்தியது.

ராதா நின்று கொண்டிருந்தாள். அவள் கழுத்திலே புதிய மஞ்சள்கயிறு மின்னியது. பக்கத்திலே ஒரு வாலிபன். என்ன ஆச்சரியம் என் இதயத்தில் வலியே ஏற்படவில்லை. அமைதி நிறைந்த உள்ளத்தோடு, பத்திரப்படுத்தி வைத்திருந்த பழையமஞ்சள் கயிற்றை மடியிலிருந்து எடுத்து வாலிபனிடம் கொடுத்தேன். என்கால்களைத் தொட்டுக் கும்பிட்டாள் ராதா. நான் வாழ்த்தினேன். அவர்கள் போய் விட்டார்கள்.

அன்றிலிருந்து நான் சாமியாராகிவிட்டேன்! சாதாரண அகல்விளக்கு மாரியம்மன் இப்போது மஞ்சள் கயிறு மாரியம்மன் ஆகிவிட்டாள். ஒவ்வொரு நாளும் புது மணப்பெண்கள் வரத் துவங்கிவிட்டார்கள்.

தாலிக்கயிறு புனிதமானதெனப் போற்றப் படுவது. அதற்குரிய மரியாதையைத் தர மறுத்த என் தந்தை மன்னிக்கமுடியாத குற்றம் செய்தவர் என்பது என் எண்ணம். அவர் செய்த பாவத்துக்குப் பரிகாரமாக, இந்தப் புதிய தொழிலை ஏற்றுக்கொண்டு விட்டேன். புது மணத் தம்பதிகளை வாழ்த்துகிறேன், புது மஞ்சள் கயிறுகளைப் போற்றி வணங்குகிறேன்!

நான் ஒரு மாதிரியாக இருந்தவனாயிற்றே! நல்ல நம்பிக்கை, மூட நம்பிக்கை என்றெல்லாம் பேசுபவனாயிற்றே என்று யோசிக்கிறாயா?... மனிதன் மாறும் இயல்பு படைத்தவன். நான் மட்டும் விதி விலக்கா? நான் மாறிவிட்டேன்". ★

சிறுவர் பகுதி

எஸ். விசாலாக்ஷி

தெரிந்து கொள்ளுங்கள்

உலகிலேயே மூன்ருவது பெரிய நகரம் ஜப்பானின் ராஜதானியான டோக்கியோவாகும். இந்நகரில் ஒரு விசித்திரம் என்னவென்ருல் அங்குள்ள பெரும்பாலான தெருக்களுக்குப் பெயர் கிடையாது. வீடுகளுக்கு எண்ணும் கிடையாது.

வடதுருவப் பகுதியில் பல மாதங்கள் தொடர்ந்து ஒரே இரவாக இருக்கும். அச்சமயங்களில் நிலவொளியில் அங்கு வான வில் ஏற்படுவதுண்டு.

ஸ்விட்ஜர்லாண்டில் நாயர் என்ற ஏரியின் ஜலம் ஒரே கறுப்பாயுள்ளது. அதில் வசிக்கும் மீன்களும் ஒரே கறுப்பு.

நம் நாட்டில் காஷ்மீரில் உள்ள தால் ஏரியில் படகுகளில் ஏராளமாக உல்லாச யாத்திரிகர்கள் பகலெல்லாம் சுற்றுவார்கள். அச்சமயம் அவர்களுக்குத் தேவையான பொருட்களை விற்க மிதக்கும் கடைகளும் அவர்களுடனேயே ஏரி நீரில் சுற்றித் திரிகின்றன.

பீஹார் ராஜ்யத்தில் கங்கை நதியின் அகலம் பல இடங்களில் நான்கிலிருந்து ஐந்து மைல் வரை உண்டு.

படியுங்கள்! சிரியுங்கள்

உபாத்தியாயர் :—ராமு! நீ இங்கு வந்து படிப்பதுமில்லை. எழுதுவதுமில்லை, பிறகு இங்கு எதற்கு வருகிருய்!

ராமு :—வீட்டிலிருந்தால் அம்மா அடிக்கிருள் ஸார்! அதற்காகத்தான் நான் இங்கே வருகிறேன்.

* * * *

அப்பா:—பூமா! உன் பிராகிரஸ் ரிபோர்ட் இவ்வளவு மோசமா இருக்கே ஏன்?

பூமா:— அது என்னுடையதா இருக்காது அப்பா! என் கிளாஸ்லே பூமான்னு வேருெருத்தி இருக்கா. அவளோடதா இருக்கும் அந்த ரிபோர்ட்.

* * *

உபாத்தியாயர்:— உதவி தேவையானவர்களுக்கு நம்மாலான உதவியைச்செய்ய வேண்டியது நம் ஒவ்வொருவருடைய கடமையாகும்.

மாணவன் :— ஏன் ஸார்! அப்படியாளுல் மாதவனுக்கு காப்பியடிக்க என் கணக்கு நோட்டைக் கொடுத்ததற்கு என்னை ஏன் அடித்தீர்கள்? அவனுக்கு என் உதவி தேவையாக இருந்தது. நான் உதவி செய்தேன். இது என் கடமைதான்!

விசித்திரக்கணக்கு

$0 \times 9 + 1 = 1$
$1 \times 9 + 2 = 11$
$12 \times 9 + 3 = 111$
$123 \times 9 + 4 = 1111$
$1234 \times 9 + 5 = 11111$
$12345 \times 9 + 6 = 111111$
$123456 \times 9 + 7 = 1111111$
$1234567 \times 9 + 8 = 11111111$
$12345678 \times 9 + 9 = 111111111$
$123456789 \times 9 + 10 = 1111111111$

யார் சொல்லுவது சரி?

(1) நம் இந்தியர்கள் பெரும்பான்மையராக உள்ள அந்நியநாடு ஒன்றிருக்கிறது அது ஆஸ்திரேலியா அருகே உள்ள பிஜித் தீவு என்கிருன் ரமேஷ். இல்லை மேற்கு இந்தியத் தீவுக் கூட்டத்தைச் சேர்ந்த ட்ரினிடாட் என்கிருன் உமேஷ். இவர்களில் யார் சொல்லுவது சரி?

(2) மலையாளிகளுக்குப் பிரதான உணவாக உள்ள மரவள்ளிக்கிழங்கு மலேயாவிலிருந்து அங்கு கொண்டுவந்து பயிரிடப்பட்டதாகும் என்கிருன் ராமுன்னி.

'டெட்'டினுல் வெளுத்த ஆடைகள் எவ்வளவு வெண்மை, எவ்வளவு பிரகாசம்

டெட் - இந்தியாவின் அற்புதமான பரிசுத்தகரணி. எல்லாவற்றையும் சுத்தம் செய்ய உபயோகிக்கலாம். சோப்பைவிட மேலானது.

அது சோப்பைக்காட்டிலும் வெகு சீக்கிரத்தில் சுத்தம் செய்கிறது. கடினமான தண்ணீரோ அல்லது மிருதுவான தண்ணீரோ எதுவாயிருந்தாலும் சுத்தம் செய்யக்கூடியது. எண்ணெய்ப் பசையை உடனே அகற்றுகிறது. அழுக்கை இல்லாமல் அபரிதமான நுரையை உண்டாக்குகிறது.

டெட், வெண்மையான ஆடைகளை பிரமிக்கும்படி வெள்ளை வெளேரென்று வெண்மையாக்குகிறது. கலர் ஆடைகளை பிரகாசமாக வெளுக்கிறது. அது உங்களுக்கு மிகவும் பிடித்த மென்மையான ஆடைகளுக்கு மிகவும் உகந்தது.

எவ்வளவு அழகு !

அதிசக்திவாய்ந்த டெட் எல்லா ஆடைகளையும் சுத்தம் செய்வதற்கேற்றது.

பருத்தியோ, பட்டோ; உல்லனோ, நைலானோ ரேயானோ எதுவாயிருந்தாலும் டெட்டை உபயோகிக்கலாம் குளிர்ந்த ஜலத்தில் கரைத்து உபயோகிக்கும் டெட், துணிகளைப் பாதுகாத்து நீண்ட காலம் உழைக்கச் செய்கிறது.

shilpi 709

இல்லை; அது மலையாளத்திலே தோன்று தோட்டு பயிராகி வருகிறது என்கிருன் கேசவஉன்னி. இவர்களில் யார் சொல்லுவது சரி?

(3) நம் காலத்தில் கடற்கோள் ஒன்று ஏற்படப் போவதாக விஞ்ஞானிகள் பலர் கருதுகின்றனர். அவ்விதம் கடற்கோள் ஒன்று ஏற்பட்டால் அது உலகில் ஏற்படும் மூன்ருவது கடற்கோளாக இருக்கும். இதற்கு முன்பு இரண்டாவது கடற்கோள் ஒன்று இடைச் சங்கமிருந்து தமிழாராய்ந்த கபாடபுரத்தை விழுங்கியது. முதற் கடற்கோள் முதற்சங்கமிருந்த தென்மதுரையை விழுங்கியது என்கிருன் சொக்கலிங்கம். இல்லை; முதற் சங்க காலத்துக்கு முன்பே ஒரு கடற்கோள் ஏற்பட்டிருக்கிறது, ஆகையால் இது நான்காவது கடற்கோளாக இருக்கும் என்கிருன் ராமலிங்கம். இவர்களில் யார் சொல்லுவது சரி? (விடை மற்ருெரு பக்கம் காண்க.)

மற்ற நாடுகளில் சுதந்தர தினங்கள்

நம் நாட்டின் சுதந்தர தினம் ஆகஸ்ட் 15-ம் தேதி கொண்டாடப்படுகிறதல்லவா? அதேபோல் உலகில் பல்வேறு நாடுகளில் சுதந்தரதினம் கொண்டாடப்படும் தேதிகள் பின் வருமாறு:

ஆப்கானிஸ்தானம்	மே 27
ஆஸ்திரேலியா	ஜனவரி 26
பர்மா	ஜுலை 4
கானடா	ஜுலை 1
இலங்கை	பிப்ரவரி 4
சீன	அக்டோபர் 1
பிரான்ஸ்	ஜுலை 14
இந்தோனீசியா	ஆகஸ்ட் 17
இஸ்ரேல்	ஏப்ரல் 30
ஜப்பான்	ஏப்ரல் 29
நார்வே	மே 17
பாகிஸ்தான்	ஆகஸ்ட் 14
பிலிப்பைன்	ஜுலை 4
ஸ்விட்ஜர்லண்டு	ஆகஸ்ட் 14
தாய்லந்து	ஜுன் 24
துருக்கி	அக்டோபர் 29
அமெரிக்கா	ஜுலை 4
ரஷ்யா	நவம்பர் 1ம், 8ம்
சிங்கப்பூர்	ஜுன் 1
டென்மார்க்	ஜுன் 5

இனி அவ்விதம் நடக்கமாட்டேன்

விஜிதாவுக்கு அவள் பாட்டி எப்பொழுதும் வனதேவதைக் கதைகள்தான் அதிகமாகச் சொல்லுவாள். விஜிதாவுக்கும் அக்கதைகள் என்ருல்தான் பிரியமதிகம். அக்கதைகளைக் கேட்கும்போதெல்லாம் தானும் வனதேவதைகளோடு சேர்ந்து விளையாடவேண்டும். அவற்றின் தேசத்துக்குப் போய்ப் பார்த்து வரவேண்டும் என்னும் ஓர் ஆசை அவள் மனதில் பொங்கும்.

ஒருநாள் வனதேவதைக் கதை கேட்டுக்கொண்டிருந்த விஜிதா அவள் பாட்டியின் மடியிலேயே தூங்கிப்போய் விட்டாள்.

ஒரு வனதேவதை அவள் முன்னுல் தோன்றியது. ஆச்சரியம் அவளுக்கு தாளவில்லை.

"நீ யார்? எங்கிருந்து வருகிருய்? எனக் கேட்டாள் விஜிதா.

"ஏன் என்னைத் தெரியவில்லையா! நான் தான் ரோஜா தேவதை. இந்த ரோஜாச் செடியில் இருக்கிறேன். உன்னை எங்கள் ராணி அழைத்துவரச் சொன்னுர்கள். அதற்காகத்தான் நான் இங்கு வந்தேன். என்றது தேவதை.

இதைக்கேட்ட விஜிதாவுக்கு ஒருபக்கம் வியப்பு, மறுபக்கம் சந்தோஷம் பொங்கியது.

"என்னையா! எதற்காக!" என்ருள் ஆவல் பொங்க.

"அதெல்லாம் எனக்குத் தெரியாது. உன்னை அழைத்துப்போக இதோ இரதம் ஒன்று அனுப்பி இருக்கிருர்கள். புறப்படு. போகலாம்" என்றது தேவதை.

இப்பொழுது...

முன்னைக் காட்டிலும் அதிக மணத்துடன் கமழ்கின்றது

மேட்டூர் சந்தன

சோப்!

மேட்டூர் சந்தன சோப்பின் மேன்மை குணம் அதன் கலவையில்தான் இருக்கிறது. இப்பொழுது கலவை இன்னும் பிரமாதம்! பரிபூரண சந்தன நறுமணத்திற்கு நீங்கள் கேட்டு வாங்க வேண்டிய சோப் மேட்டூர் சந்தன சோப்!

மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல் கார்ப்பொரேஷன் லிட்.
மேட்டூர் அணை R.S. சேலம் ஜில்லா.
மானேஜிங் ஏஜண்ட்ஸ்:
சேஷசாயி பிரதர்ஸ் பிரைவேட் லிட்.

MC-636

விஜிதா மறு பேச்சு எதுவும் பேச வில்லை. தன் முன்னே நின்றுகொண்டிருந்த இரதத்தில் ஓடி ஏறிக்கொண்டாள். உடனே இரதமும் புறப்பட்டது. ரோஜா தேவதைதான் இரதத்தை ஓட்டிச் சென்றது.

சிறிது தூரம்தான் இரதம் சென்றிருக்கும். நொண்டி தேவதை ஒன்று எதிரே வந்தது. ரோஜா தேவதையை அது பார்த்து "என்னால் நடக்க முடியவில்லை. நானும் இரதத்தில் ஏறிக்கொள்ளுகிறேனே!" என்றது.

"எனக்கு அதெல்லாம் தெரியாது. விஜிதாவுக்காக நம் ராணி அனுப்பிய இரதமிது. விஜிதா சம்மதித்தால் நீ ஏறிக் கொள்ளலாம். எனக்கு ஆட்சேபனை எதுவுமில்லை" என்றது ரோஜா தேவதை.

நொண்டி தேவதை விஜிதாவைக் கெஞ்சியது; நொண்டிகளுக்கெல்லாம் என் இரதத்தில் இடமில்லை" எனக் கண்டிப்பாகச் சொல்லிவிட்டாள் அவள்.

இரதம் மேலும் சிறிதுதூரம் சென்றது தள்ளாடித் தள்ளாடி கிழட்டு தேவதை ஒன்று எதிர்பட்டது. அதுவும் இரதத்தில் ஏறிக்கொள்ள ஆசைப்பட்டது. கிழவிகளுக்கு தன் இரதத்தில் இடமில்லை எனக்கூறி அக்கிழட்டு தேவதையையும் விஜிதா ஏற்றிக்கொள்ள மறுத்து விட்டாள். அதற்குள்ளாக ராணியின் அரண்மனை வந்தது. அங்கே வண்ண வண்ண மலர்கள். அவற்றைப் பார்த்ததும் பறித்துச் சூடிக்கொள்ள வேண்டும் போலிருந்தது விஜிதாவுக்கு. இரதத்தை நிறுத்தச் சொல்லி மலர்செடிகளை நெருங்கினாள். "மலர்களை யாரும் பறிக்கக் கூடாது" என்ற பலகை ஒன்று அவள் கண்களில் பட்டது. ஆனால் அவள் அதைப் பொருட்படுத்தவில்லை. தலையில் பூக்கூட இல்லாமல் ராணியைப் போய் பார்த்தால் நன்றாக இருக்குமா? அவள் என்ன நினைத்துக் கொள்ளமாட்டாள் என்று எண்ணம் ஓடியது அவளுக்கு. தன் கை நிறைய பூக்களைப் பறித்து தன் தலையில் அழகாகச் சூடிக்கொண்டாள். இரதத்தில் போய் ஏறினாள். ராணியின் அரண்மனை முன் போய் அது நின்றது. அப்பொழுது ராணியின் தோழி ஒருத்தி கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தாள். அவள் சொன்னாள்—

"நீ நல்லபெண் என்று நினைத்துத்தான் உன்னை ராணி அழைத்துவரச் சொன்னார்கள். ஆனால் நீ நல்ல பெண்ணாக நடந்து கொள்ளவில்லை. நொண்டி தேவதையும் கிழட்டு தேவதையும் ரதத்தில்வர உன்னை கெஞ்சியபோது நீ அகம்பாவம் கொண்டிருந்தாய். இரக்கம் காட்டவில்லை. அரண்மனைத் தோட்டத்தில் எங்கள் ராணிக்குச் சொந்தமான புட்பங்களை அவர் அனுமதியின்றி பறித்துச் சூடிக் கொண்டாய். இவ்விதம் திருட்டுப்புத்தியும் அகம்பாவமும் கொண்டுள்ள உன்னை எங்கள் ராணி பார்க்க விரும்பவில்லை. நீ திரும்பிப் போக வேண்டியதுதான். நீ நல்ல பெண்ணாக நடந்து கொண்டால்தான் எங்கள் நாட்டுக்கு வரலாம். எங்கள் ராணியைப் பார்க்கலாம்".

"இல்லை. நான் ஒருபோதும் இனி அவ்விதம் நடக்கமாட்டேன்!" எனக் கதறினாள் விஜிதா. அவள் கனவு கலைந்தது. தன் பாட்டியின் மடியில் படுத்துத் தூங்கிப்போய்விட்டது அப்பொழுதுதான் அவளுக்குத் தெரிந்தது. ஆனால் அவள் கண்ட கனவு அவள் மனதை விட்டு அகலவே இல்லை. அன்றிலிருந்து அவள் அகம்பாவமோ கர்வமோ கொள்ளுவதில்லை. எல்லோரிடமும் இரக்கம் காட்டினாள். நல்லவள் என்று எல்லோரும் அவளைப் புகழ்ந்தனர்.

கணக்குப் புதிர் (ஜுன் '59 இதழில்)
(பக்கம் 77, இரண்டாவது பத்தி 5-வது வரி)

விருந்துக்கு வந்திருந்த பையன்கள் ஒவ்வொருவரும் நான்கு நான்கு இலைகளை ஒன்றாகப் போட்டுக்கொண்டு விட்டனர். எஞ்சிய இலைகளில் ஓர் இலைக்கு நான்கு பேராகப் பெரியவர்கள் என்றிருப்பதை விருந்துக்கு வந்திருந்த பையன்கள் ஒவ்வொருவரும் நான்கு நான்கு இலைகளை ஒன்றாகப் போட்டுக்கொண்டு விட்டனர். பெண்கள் ஒவ்வொருவரும் இரண்டு இரண்டு இலைகளை ஒன்றாகப் போட்டுக் கொண்டு விட்டனர். எஞ்சிய இலைகளில் ஓர் இலைக்கு நான்கு பெரியவர்கள் எனத் திருத்தி வாசிக்கவும்.

தொழில் துணுக்குகள்

விசால்தேவ்

கொசுக் கொல்லி பத்தி

கொசுத் தொல்லையிலிருந்து விடுதலை பெற ஒருவகைப்பத்தி உண்டு. இந்தப் பத்தி நல்ல வாசனையாக இருக்கும். ஆனால் கொசுக்கள் இதன் வாசனைக்குப் பயந்து ஓட்டமெடுத்துவிடும். அப்படியும் மீறி ஏதாவது கொசுக்கள் வந்தால் அவை மரித்துவிடும். இவ்வகையான பத்திசெய்ய கீழ்க்கண்ட பொருட்கள் தேவைப்படும்.

நிலக்கரி பவுடர்	....	16	பங்கு
வெடியுப்பு	....	2	,,
சாம்பிராணி நயம்	...	4	,,
பைரித்ரம் பவுடர்	....	4	,,
கருவப்பிசின்	...	4	,,
சப்ஜா அல்லது காட்டுத் துளசி இலை	...	8	,,

முதலில் சப்ஜா அல்லது காட்டுத்துளசி இலையை நன்கு இடித்துக் கொள்ளவும் அல்லது அரைத்துக் கொள்ளவும். பிறகு அதோடு மேற்படி சரக்குகளை ஒவ்வொன்றாகச் சேர்த்து நன்கு இடித்துக் கொள்ளவும் அல்லது அரைத்துக் கொள்ளவும். ஈர்க்குச்சிகளை நனைத்தெடுக்கும் அளவுக்கு அல்லது ஈர்க்குச்சிகளில் பூசும் அளவுக்கு நீர் சேர்த்து கலக்கிக் கொள்ளவும். பிறகு குச்சிகளை நனைத்தெடுத்து அல்லது அவற்றின் மேல் பூசிக்காய வைக்கவும். ரொட்டிமாவு பதத்துக்கு பிசைந்து வில்லைகளாகத் தட்டியும் காய வைக்கலாம். அல்லது வில்லைகள் தயாரிக்கும் கருவிகள் (Tablet making machines) உதவியால் வில்லைகள் தயாரித்தும் காயவைத்து கொள்ளலாம். பைரித்ரம் இங்கிலீஷ் மருந்து கடைகளில் கிடைக்கும். அப்படிக்கிடைக்காதுபோனால் கல்கத்தா அருகே சோடேபூரில் உள்ள காதிபிரதிஸ்தானுக்கு எழுதிப்பெற்றுக் கொள்ளலாம்.

தேவிகுளத்தில் காபின் தொழிற்சாலை

கேரள ராஜ்ய எல்லைக்குள் அடங்கியுள்ள தமிழ் பிரதேசமான தேவிகுளத்தில் காபின் (Caffeine) தொழிற்சாலை ஒன்றுதொழில்பட இருக்கிறது. தேயிலைக் கழிவுகளிலிருந்து தயாரிக்கப்படும் இம் மருந்துப் பொருள் இப்பொழுது வைத்திய துறையில் வெகுவாகப் பயன் படுகிறது. தேவிகுளம் தொழிற்சாலையில் முதலில் ஆயிரம் மணங்கு தேயிலைக்கழிவிலிருந்து சுமார் 12,000 ராத்தல் காபின் தயாரிக்கப்படும். சுமார் ஆறு மாத காலத்தில் இவ்வுற்பத்தியளவு மூன்று மடங்காக அதிகரிக்கும். பம்பாயில் உள்ள யுனிகெம் லாபரடரி (Unichem Laboratory)யின் கூட்டுறவுடன் யுனிபைன் பார்மசூடிகல்ஸ் என்னும் மருந்து உற்பத்திக் கம்பெனி இத்தொழிற்சாலையைக் கட்டி முடித்துள்ளது. இத்தொழிற்சாலைக்கான இயந்திர சாதனங்கள் அனைத்தும் நம் நாட்டிலேயே தயாரிக்கப்பட்டவை என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். நம் தமிழ் நாட்டில் நீலகிரி, ஆனைமலைபோன்ற இடங்களில் இவ்விதமான தொழிற்சாலைகளை ஆரம்பிக்க நம் சென்னை அரசாங்கம் முன்வர வேண்டும். இப்படிச் செய்தால் இப்பிரதேசங்களில் இப்பொழுது வருடா வருடம் வீணாகி வரும் ஏராளமான தேயிலைக் கழிவுகள் பணமாக மாறும். நம் தொழில் வளம் பெருகும். வேலை வாய்ப்பும் அதிகரிக்கும் வெளிநாடுகளில் நம் தேயிலையை மலிவாகவும் விற்க முடியும். உள் நாட்டிலும் மலிவாக விற்கலாம்.

நம் நதி நீர்களின் குணங்கள்

நம் நதி நீர்கள் பாசனத்துக்காகவும் குடி நீருக்காகவு மட்டுமின்றி பலவகையான தொழில்களுக்கும் பயன் படுவதாகும். சில நதி நீர்களில் கனிஜ உப்புக்கள் அளவுக்கதிகமாக கரைந்திருப்பதுண்டு. இதனால் அப்படிப்பட்ட நீர்களை

தொழிற்சாலைகளில் உபயோகித்தால் குழாய்களில் அவை பொருக்குக்கட்டும். இயந்திரங்களையும் வெகு சீக்கிரம் கெடுத்துவிடும். ஆகையால் எந்த நதி நீரையும் தொழில் துறையில் பயன் படுத்துவதற்கு முன்பாக அதை நன்கு சோதித்துப் பார்க்க வேண்டியது அவசியம். இதைக் கருத்திற்கொண்டு பூனாவிலுள்ள மத்திய ஜல பல ஆராய்ச்சி நிலையம் 1955-லிருந்து இதுபற்றி பலவிதமான ஆராய்ச்சிகளில் இறங்கியுள்ளது. இதற்காக நம் நாட்டிலுள்ள பிரதான நதிகள் ஒவ்வொன்றிலும் பல இடங்களிலிருந்து நீர் எடுத்து பாலிதீன் பாட்டில்களில் அடைத்து, இவ்வாராய்ச்சி நிலையத்துக்குச் சோதனைக்காக அனுப்பப் பட்டது. இதன் மூலம் இப்பொழுது பல உண்மைகள் தெரியவந்துள்ளன.

மழை காலத்தில் பொதுவாக எல்லா நதி நீர்களிலும் கனிஜப் பொருள்கள் அவ்வளவு அதிகமாக கரைவதில்லை. வரட்சியான காலம் தொடங்கியதும் படிப்படியாகக் கனிஜப் பொருள்கள் அதிகமாகக் கரைந்து காணப்படுகின்றன. ஏப்ரல், மே, ஜூன் மாத முற்பகுதியில் இவ்விதம் கரைந்துள்ள கனிஜப் பொருள்கள் மிக அதிகமாக உள்ளன; மற்ற எந்த இந்திய நதிகளையும்விட கோதாவரி, கிருஷ்ணா, தப்தி, நர்மதை ஆகிய நான்கு நதிகளிலும் இம்மாதங்களில் கனிஜப் பொருள்கள் மிக அதிகமாகக் கரைந்து காணப்படுகின்றன. வட இந்திய நதிகளிலோ யமுனை சம்பல் இரண்டை நீக்கி மற்றவைகளில் இம்மாதங்களில் கனிஜங்கள் அதிகமாகக் கரைந்து காணப்படுவதில்லை. இமயமலையில் பனிக்கட்டிகள் உருகிய நீரே இவைகளில் பெரும்பாலும் ஓடிவருகின்றன. கனிஜப்பொருள்கள் அவற்றில் அதிகமாகக் கரைந்து காணப்படாததற்குக் காரணம் இதுவேயாகும். நம் காவேரி நதி நீரில் மழைகாலத்தில் கரைந்திருக்கும் கனிஜ அளவைவிட ஏப்ரல், மே, ஜூன் ஆகிய கோடை மாதங்களில் கரைந்துள்ள கனிஜ அளவுகூடிக் காணவில்லை. இதற்குக் காரணம் இரண்டு பருவத்திலும் பெய்யும் மழைநீரே அதில் பிரதானமாகப் பெருக்கெடுத்தோடுவதாகும்.

நீ செய்யும் தவறுகளை மற்றவர்கள் முன்னால் எவன் சொல்லுகிறானோ அவன் உன்னுடைய உண்மை நண்பனல்ல. உன் தவறுகளை உன்னிடம் தனிமையில் எவன் எடுத்துச் சொல்லுகிறானோ அவனே உன்னுடைய உண்மை நண்பன்.

தொழில் துறையில் ஒரு நீர் உபயோகமுள்ளதா இல்லையா என அனுமானிக்க அந்நீரின் கடின எண் (Hardness number) பயன்படுவதாகும். பத்து லட்சம் பங்கு நீரில் எவ்வளவு பங்கு கால்சியமும் மாக்னீசியமும் அடங்கியுள்ளதோ அதுவே அந்நீரின் கடின எண் எனப்படும். இவ்விதம் ஒரு நீரின் கடின எண் 150-க்குக் குறைவாக இருந்தால் அந்த நீர் தொழில் துறைக்கு முதல் தரம் எனக் கருதப்படும்.. 150-க்கும் 350-க்கும் இடையிலிருந்தால் இரண்டாந்தரம் எனக் கருதப்படும். 350-க்குமேல் போனால் மூன்றாந்தரம். பெரும்பாலான தொழில்களுக்கு அந்நீர் ஏற்றதல்ல எனக் கருதப்படும்.

கங்கை, கோசி, பிரமபுத்திரா, காவேரி ஆகிய நான்கு நதி நீர்களின் கடின எண் மழை காலமானாலும் சரி, வெயில் காலமானாலும் சரி 150-க்குக் குறைவாகவே உள்ளது. மற்ற இந்திய நதி நீர்களின் கடின எண் கோடை காலங்களில் 150 முதல் 350 வரை உள்ளன. ஆகையால் தொழில் துறைகளுக்கு முதல்தரமான நதி நீர்கள் முதலில் கூறிய நான்குமேயாகும்.

பாசனத்துக்கு ஒரு நதி எவ்வளவு ஏற்றது என அறிய அதில் அடங்கியுள்ள சோடியம் சத விகிதத்தைச் சோதித்துக் கணக்கிட்டு நிச்சயிப்பார்கள். 50% சோடியத்துக்கு குறைவாக அடங்கியுள்ள நதி நீர்கள் பாசனத்துக்கு முதல்தரம் எனக் கருதப்படும். 50%—70% வரை அடங்கியுள்ள நதி நீர்கள் பாசனத்துக்கு 2-ம் தரம். 75%-க்குமேல் அடங்கியுள்ள நதி நீர்கள் மூன்றாம் தரம் என்று கருதப்

படும். கங்கை, கோசி, காவேரி, பிர்ம புத்திரா ஆகிய நான்கு நதிகளின் நீரில் சோடியம் 50%-க்கு குறைவாக அடங்கியுள்ளது இந்நான்கு நதி நீர்களும் பாசனத்துக்கு முதல்தரமானவை. தப்தி, கிருஷ்ணு, கோதாவரி, சம்பல் ஆகிய நான்கின் நீரிலும் கோடை காலத்தில் சோடியம் அளவு 50—70% வரை உள்ளது. ஆகையால் இந்நான்கு நதி நீர்களும் பாசனத்துக்கு இரண்டாந்தரம் எனச் சொல்லலாம். மற்ற இந்திய நதி நீர்கள் எல்லாம் பாசனத்துக்கு மூன்ரும் தரமானவையே.

ஸ்மெல்லிங் சால்ட்

தலைவலி ஜலதோஷத்தின்போது முகரப்படும் ஒருவகை உப்பு இது. கீழ்க்கண்ட விதம் இதைத் தயாரிக்கலாம்.

வேண்டிய பொருள்கள்

கார்பாலிக் ஆஸிட்	1 பங்கு
நீலகிரித்தைலம்	1 ,,
அம்மோனியம் கார்பனேட்	90 ,,
,, ஹைட்ரேட்	3 ,,
மெந்தால்	1 ,,
கர்ப்பூரம்	4 ,,
அயடின் சிறிதளவு	

அம்மோனியம் கார்பனேட் அம்மோனியா என்ற பெயரில் இங்கிலீஷ் மருந்து கடைகளில் கிடைக்கும். இது வெண்மையான கட்டிகளாக இருக்கும். காற்றுப் புகாத பாட்டில்களில் மூடி வைக்க வேண்டும் இல்லாதுபோனுல் ஆவியாகப் போய்விடும். அம்மோனியம் ஹைட்ரேட்டை லிக்கர்அம்மோனியா எனவும் சொல்லுவார்கள். இதுவும் இங்கிலீஷ் மருந்துக் கடைகளில் கிடைக்கும். தண்ணீரில் அம்மோனியா வாயுகலந்து இது உண்டாகிறது. கார்பாலிக் ஆஸிட், நீலகிரித் தைலம், மெந்தால், அயடின் முதலியவைகளும் இங்கிலீஷ் மருந்துக்கடைகளில் கிடைக்கும்.

> கொதிக்கும் நீரில் ஒருவன் பிரதிபிம்பம் தெரிவதில்லை. அதேபோல் கோபத்தில் கொதித்து நிற்கும் ஒருவன் மனதில் நன்மை தீமைகள் தெரிவதில்லை.

செய்முறை

கர்ப்பூரம் மெந்தால் இரண்டையும் நன்கு தூள்செய்து கொள்ளவும். அதில் நீலகிரித்தைலத்தைச் சேர்க்கவும். பிறகு அம்மோனியம் கார்பனேட்டைத் தூள் செய்து அதையும் சேர்க்கவும். இதன் பிறகு கார்பாலிக் ஆஸிட், அயடின், அம்மோனியம் ஹைட்ரேட் முதலியவைகளை வரிசைக்கிரமமாக ஒன்றன் பின் ஒன்ருகச் சேர்க்கவும். இப்பொழுது ஸ்மெல்லிங் சால்ட் தயாராகி விட்டது. காற்றுப்புகாத டப்பிகள் அல்லது பாட்டில்களில் அடைத்து விற்பனைக்கு அனுப்பலாம்.

டப்பா உணவுகளைச் சோதிக்கும் சாதனம்

டப்பாவில் அடைக்கப்பட்டுள்ள பழங்களும் வேறு உணவுப் பண்டங்களும் நல்ல நிலையில் இருக்கின்றனவா அல்லது கெட்டுப்போய் விட்டனவா எனச் சுலபமாகச் சோதித்தறிய சாதனம் ஒன்றை மைசூரில் உள்ள மத்திய ஆராய்ச்சிநிலையம் தயாரித்துள்ளது, டப்பாக்களில் துளையிடாமலேயே இச்சாதன மூலம் டப்பாவில் உள்ள உணவுப் பண்டம் எந்த நிலையில் இருக்கிறது என்பதைச் சுலபமாக அறிந்துகொண்டு விடலாம். இந்த சோதனை ஒரு நிமிடத்தில் முடிந்துவிடும். இரண்டுமுதல் ஆறு அங்குலம் வரை குறுக்களவுள்ள டப்பாக்களையே இச்சாதனத்தின் மூலம் சோதிப்பதென்பது சாத்தியமாகும்.

குடை வார்னிஷ்

மழை, வெயில், காற்று முதலியவற்றின் காரணமாக நாளாக ஆகக் குடைத்துணி கருமை மங்கி பார்க்க விகாரமாகிவிடுகிற

தல்லவா? அதற்குக் கீழ்க்கண்ட வார்னிஷ் தயாரித்துப் பூசலாம். குடைத்துணி புதிது போன்று கருமையாக மாறிவிடும்.

டர்பன்டைன் எண்ணெய்	... ...	2 பங்கு
ஆளிவிதை எண்ணெய்	... ...	3 ,,
முர்தார் சிங்	... ...	2 ,,

முர்தார்சிங் நாட்டு மருந்துக் கடைகளில் கிடைக்கும். ஆளிவிதை எண்ணெய் டர்பன்டைன் இரண்டும் பெயிண்ட் வார்னிஷ் கடைகளில் கிடைக்கும். டர்பன்டைன் நெருப்பு பற்றிக் கொள்ளக் கூடியதாகும். ஆகையால் அதைச் சாக்கிரதையாகக் கையாள வேண்டும்.

ஆளிவிதை எண்ணெயை ஒரு பாத்திரத்திலிட்டு அதோடு முர்தார்சிங் சேர்த்து அடுப்பேற்றி சிறு தீயாக எரியவிட்டு இரண்டையும் ஒன்று சேரச் செய்யவும். இவ்விதம் ஒன்று சேர்ந்ததும் அடுப்பைவிட்டு இறக்கி டர்பன்டைனைக் கலந்து கொள்ளவும். இக்கலவையை பிரஷால் குடைத்துணிகள் மீது பூசி வெயிலில் காய வைக்கவும். குடைத்துணி புதிது போலாகிவிடும். வாடர் புரூப் துணிகளால் ஆன கறுப்பு நிற மழைக் கோட்டுகளைப் புதுப்பிக்கவும் இக்கலவையைப் பூசி வெயிலில் காயப் போடலாம்.

248563

கேள்வியும் பதிலும்

சி. ராமசுப்ரமணியம், பாபநாசம் மில்ஸ்.

கையால் இயங்கும் பம்பு செட்டுகள் கிடைக்குமிடத்தின் விலாசத்தை எனக்குத் தெரியப் படுத்தினாலும் சரி, அவ்விலாசத்தோடு எனக்குத் தொடர்பு ஏற்படுத்தித் தந்தாலும் சரி மிகுந்த நன்றியுள்ளவனாக இருப்பேன்.

கையால் இயங்கும் பம்பு செட்டுகளை கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

The Director of Agriculture
Govt. of Bihar
PATNA (Bihar State)

ஜி. செபஸ்டியான், பி.எஸ்.ஸி. சென்னை - 14.

சலவை உப்பு (Bleaching Powder) உபயோகித்து வெளுக்கப்படும் துணிகளில் குளோரின் (Chlorine) நாற்றம் வீசுகிறது. இதைத் தடுக்க துணியை எந்த உப்பு கரைத்த தண்ணீரில் முக்க வேண்டும்? அதன் பெயர், உபயோகிக்கும் முறை, கடைகளில் அதன் பெயர், எங்கு கிடைக்கும், விலை முதலிய விவரங்களை காவேரி ஆகஸ்ட் வெளியீட்டில் பிரசுரிக்குமாறு பணிவுடன் வேண்டுகிறேன்.

கடைகளில் நைட்ரோ பென்ஸீன் (Nitro Benzene) என்னும் ஒருவகை மஞ்சள் திரவம் கிடைக்கும். இது நல்ல வாசனையாகவுமிருக்கும் (Oil of Mirbane) எனவும் இதைச் சொல்லுவார்கள். இதை வாங்கி வந்து சுடுநீரில் கலக்கி அதில் துணியை நனைத்துப் பிழிந்து கொள்ளவும். இதன் விலை ஒரே நிலவரமாக இருப்பதில்லை. ஆகையால் அப்போதைக்கப்போது கடைகளில் தெரிந்து கொள்ளுவதுதான் நல்லது.



அழகே! உனக்கு என் நன்றி

அல்லி

சாந்தா:

மூன்று மாதங்கள் முன்புவரை நான் இருந்த நிலையை எண்ணிப் பார்த்தால் இப்போதுகூட சிரிப்பு வரும். என் புக்ககத்து வாழ்க்கையை வைக்க ஆரம்பித்த எனக்கு மனிதர்கள் இம்மை யில் தான தர்மங்கள் செய்து ஏன் சுவர்க்கத் திற்குப் போக விரும்புகிறார்கள்? அதே சுவர்க் கத்தை இப் புவியில் 'பணம்' என்ற ஒரே மந்திரத்தால் அனுபவித்துவிடலாமே என்று தோன்றியது. ஆம்! நான் மூன்று மாதங் முன்பு ஒரு சாதாரண குமாஸ்தாவின் குழந்தைகளில் முதல் பெண்! பஞ்சம் சொல்லிற்கு பொருள் எங்கள் வீட்டிற்கு ஆல் நன்றாகப் புலப்படும்படியான நிலையில் தானிருந்தோம். அப்பா என்னை எப்படியாவது . ஏ. வரை படிக்கவைத்து ஒரு வேலையில் அமர்த்தி, குடும்ப பாரத்தை தாங்க என் உதவி யையும் எதிர்பார்த்தார்.

நான் அப்போது ராணிமேரி கல்லூரியில் பி.ஏ. இறுதி வகுப்பு படித்துக்கொண்டிருந்தேன். எதிரேயுள்ள பிரசிடென்ஸி கல்லூரியில் நந்த குமார், லெக்சரராக இருந்தார். ஒருநாள் என் தோழி ரேவதி அவரைப்பற்றிய விவரங்களை— தாவது அவர் காலேஜ் லெக்சரர் என்பதை என்னிடம் சொன்னாள். மற்றபடி அவருடன் பேசிப் பரிச்சயம் கிடையாது. நான் காலேஜ் கேட்டை தாண்டுவதை எங்கிருந்தோ பார்த்து டு, ராஜாபாதர் தெருவரை என்னையே தொடர்ந்துவருவார். நான் அப்போதெல்லாம் அதைப் பெரிதாகப் பொருட்படுத்தவில்லை ஏனென்றால், காலேஜிலேயே நான்தான் அழகி என்று பெயரெடுத்தவள். அதனால் மற்றைய வகுப்பு மாணவிகளும் என்னிடம் அறிமுகம் செய்துகொள்ள வருவது சகஜம். அதைப்போல் இவரும் என்னை அறிமுகம் செய்துகொள்ள விரும்புகிறார் என்று நினைத்தேன்.

நான் மற்ற மாணவிகளைப்போல தினம் ஒவ் வொரு விதமான ஆடம்பர உடைகளை அணிய மாட்டேன். எப்போது கடைக்குப் போனாலும் கெஜம் இரண்டு ரூபாய் என்ற விலைப் பட்டியலி லுள்ள சாதாரண வாயல் துணியையே ஆறு கெஜம் வாங்கிக்கொள்ளுவேன். என்னிடம் இருந்தநான்கு புடைவைகளையும், தினமும் தோய்த்து மடித்து அணிவேன். தங்கம் என்பது எங்கள் வீட்டில் (என் தாயாரின் ஒருசில அத்யா வசிய நகைகளைத் தவிர) ஒரு குன்றுமணி எடை கூட கிடையாது. அதனால் நான் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மாதிரியான ஜெர்மன்ஸில்வர் நகைசெட்டை அணிந்துகொள்ளுவேன். அது கூட அழகாக இருப்பதாகச் சொல்லுவார்கள் என்தோழிகள். நான் பெருமைக்காகச் சொல்ல வில்லை. உண்மையிலேயே அப்போது நான்தான் எங்கள் காலேஜில் நடைபெறும் எந்த நாடகத் திலும், கதாநாயகியாக நடிப்பேன்.

அன்றொருநாள் அப்படித்தான், காலேஜ் முடிந்து வெளியே வந்தவுடன் என் கண்கள் தாமாகவே எதிரேயுள்ள பிரஸிடென்ஸி கல்லூரி பக்கம் சென்றன. அவரும் தவறாமல் எனக்

> அலைகடலைச் சுலபமாகக் கடக்க கப்பல் உதவுகிறது. துன்பம் நிறைந்த வாழ்க்கைக் கடலைக் கடக்க கப்பலாக சத்தியம் உதவுகிறது.

காகவே காத்திருந்தவர்போல் பின்தொடர்ந்தார். இப்படி இவர் தினமும் என்னைத் தொடருவது யார் கண்களிலாவது விழுந்தால் என் குடும்பம் என் எதிர்காலம் என்ன ஆவது? என்ற பயம் என்னைப் பற்றியது. தைரியத்தை வரவழைத்துக்கொண்டு அவரையே கேட்டுவிடுவது என்று தீர்மானித்து தொண்டையைக் கனைத்துக்கொண்டேன்.

'மிஸ் சாந்தா' என்ற குரல் கேட்டு பின்புறம் திரும்பினேன் அவர்தான்! அவருக்கு என் பெயர் எப்படித் தெரியும் என்று கேட்க யத்தனிக்கு முன்பே அவர் என் புத்தகம் ஒன்றை என்னிடம் கொடுத்து, "நீங்கள் தெருவில் போட்டுக்கொண்டே போகும் புத்தகங்களைப் பொறுக்கிக்கொண்டே வந்தால் உங்கள் வீட்டைக் கண்டு பிடித்து விடலாம் போலிருக்கிறதே!" என்று சொல்லியபடியே வரிசைப்பல் தெரியச்சிரித்தார், நான் கேட்க நினைத்ததையும் மறந்தேன்.

இப்படித்தான் ஆரம்பித்தது எங்கள் பரிச்சயம். ஆனாலும் மற்றவர்களைப்போல் நான் குமாருடன் தைரியமாக சினிமா, பீச் என்று போகும் அளவு துணிவு ஏற்படவில்லை. அவரை அவ்வப்போது கண்களால் பார்த்தே திருப்தி அடைவேன்.

பி. ஏ. இறுதி பரீக்ஷையும் முடிந்து ரிஸல்ட் வரவேண்டியதுதான் பாக்கி. நான் படிப்பில் மிகவும் கெட்டிக்காரி என்றில்லாவிடினும், மூன்ருவதுவகுப்பிலாவது தேர்வு பெற்றிடுவேன் என்ற தைரியம் எனக்கிருந்தது. இதற்கு முன்பே வேலைக்கு மனு போட ஆரம்பித்தேன். எங்கள் வீட்டில் செய்தித்தாள் வாங்குவதில்லையாதலால், சாமான்கள் கட்டிவரும் காகிதத்தில்கண்ட விளம்பரங்களுக்கு மனுப் போட்டிருந்தேன். பக்கத்து எதிர் வீடுகளில் பேப்பர் இரவல் வாங்கிப்பார்ப்பதற்கு, எனக்கு அவமானமாயிருந்தது. ஓர் இரண்டு அணு கொடுத்து பேப்பர் வாங்கக்கூட முடியாதா என்று அவர்கள் நினைத்துவிட்டால்? உண்மையில் அப்படிப்பட்ட நிலைதான் என்பதை பறை சாற்ற விரும்பவில்லை.

அன்று பணச்செலவில்லாத இடமாகிய பீச்சில் போய் உட்கார்ந்திருந்தேன். என் தோழிகள் யாரையாவது அங்கு சந்தித்தால் அவர்களுக்குத் தெரிந்த ஏதாவது வேலைக்கு மனுச்செய்யலாமே என்ற சுயநலத்துடன்தான். அங்கும் என் மனம் பிரஸிடென்ஸி காலேஜ் வாயிலில் குமார் வருவாரோ என்ற ஏக்கத்தில் கண்களை விரட்டினேன். என்னையுமறியாமல் பெருமூச்செறிந்தேன். குமார் கோடை விடுமுறைக்குச் சொந்த ஊருக்குப் போயிருப்பார். எந்த ஊராக இருக்கும்? ஏன்? அவர் யாரென்பதுகூட தெரியாதே! அவர் யாரோ? நான் யாரோ? அவரைப்பற்றி அறிய ஏன் இந்த மனம் இப்படி துடிக்கின்றது?

"ஹல்லோ! ஷாந்தி! என்ன பண்ணப் போறே நீ" என்று கேட்டுக்கொண்டே என் தோழி ரேவதி என் அருகில் வந்து உட்கார்ந்தாள் "வேலைக்குத்தான் 'ட்ரை' பண்ணிக்கொண்டிருக்கிறேன். உனக்கு ஏதாவது தெரிந்தால் சொல்லேன்" என்று நான் அவள் கையில் வைத்திருந்த செய்தித்தாளை வெடுக்கென்று பற்றி தேவைகளைப் பார்க்கத் தொடங்கினேன்.

ரேவதி கலகலவென்று சிரித்துவிட்டு 'என்னிடம் வேலைக்குப்போவதாக சொல்லுகிருய்! நாளை உன் அழகில் மயங்கிய எவனுவது உன்னை அப்படியே கொத்திக்கொண்டுபோய் கல்யாண செய்து கொண்டு விடுவான். அப்புறம் நீ என்னை மறந்தே விடுவான். என்ருவது என்னை சந்திக்க நேர்ந்தால்கூட "நீ யார்? உன்னைத் தெரியாதே!" என்றுகூட சொல்லி விடுவான்! உம் அப்படித் தானே?" என்று ஏதேதோ பேசிக்கொண்டே போனுள்.

அப்போது என் மனக்கண் முன் நந்தகுமாரின் உருவம் தோன்றி மறைந்தது, என் கண்கள் பேப்பரில் கண்ட 'தேவை'களிலேயே கருத்தை செலுத்த முயன்றன.

"என்ன ஷாந்தி பேசவே மாட்டேனெ... நான் போகிறேன். நேரமாகிவிட்டது" எழுந்தாள் அவசரமாக. நான் "இ... இந்த பேப்பரை இதோ கொடுத்து விடுகி... என்று சொல்லிக் கொண்டே அவசர... கண்ணேட்டமிட்டேன். அதற்குள் "நீ... வைத்துக்கொள் அந்த பேப்பரை. சம்மருக்... பிறகு சந்திப்போம்; மறந்து விடாதே. டாட... என்று சொல்லிக்கொண்டே சிட்டாகப் ப... தாள். பேப்பரை கையில் பிடித்துக்கொண்... விழித்துக்கொண்டிருந்தேன். பதினைந்து கா... கொடுத்து வாங்கின அன்றைய பேப்ப... அப்படியே அலக்ஷியமாக என்னிடம் கொடுத்... விட்டாளே என்று எனக்கு வியப்பாக இருந்த... ஆனல் அப்போது, அதைவிட பல மட... வியக்கத்தக்கதாக அமையப் போகின்றது எ... வாழ்க்கை என்பது எனக்கெப்படி தெரியும்?

"ஹல்லோ! ஷாந்தி! என்னப்பண்ணப் போ... நீ?" என்று கேட்ட அதே கேள்வியை கே...